"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

# ஆசிரியம்

Aasiriyam pedagogy

ආසිරියම්

இதழ் 71-73 | வை-ஆடி/ 2017 | விலை: 100.00

## இலங்கை ஆசிரியர் சேவை 23 வருடங்களாக தொடக்கப் புள்ளியில்

■ அன்பு ஜவஹர்ஷா

## மெதுவான உளவளர்ச்சிப் போக்கும் ஆசிரியரின் விசேட செயற்பாடுகளும்

■ இந்திரா செல்வநாயகம்

## உங்கள் குழந்தை பள்ளியில் மதிக்கப்படுகிறதா?

■ ஆயிஷா இரா.நடராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு




**விலை 600.00**

யூ.ஜி.50 பீப்பிள்ஸ் பார்க் கொழும்பு–11
தொ.பே: 011–2472362 தொ.ந: 011–2448624
மின்னஞ்சல் : chemamadu@yahoo.com
இணையம் : www.chemamadu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லுவதைத் தவிர...

தற்போது "ஆசிரியம்" இதழ் உருவாக்கம் மிகச் சிரமமாக உள்ளது. ஆரோக்கியமான மிகப் பொருத்தமான வளமுள்ள ஆக்கங்கள் நமக்கு கிடைப்பது மிக மிக அரிதாகவே உள்ளது. நமக்கு வரக்கூடிய கட்டுரைகளில் பெரும்பாலானவை பிரசுரிக்க முடியாமலேயே உள்ளன. நீத்துப்போன பழைய கல்விச் சிந்தனைகளிலிருந்து விடுபடாது சலிப்பூட்டும் பாணியிலான கட்டுரைகள்தான் அதிகம் வருகின்றன.

தொடக்கத்தில் "அகவிழி" ஆரம்பித்து தொடர்ந்து வெளிவரக்கூடிய காலம் மகிழ்ச்சி கரமாக இருந்தது. நம்மிடையே கல்வியியல் சார்ந்த பல்வேறு புதிய புதிய ஆக்கங்களை வெளிக்கொண்டுவர முடிந்தது. புதிய எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்யக் கூடியதாக இருந்தது. இதைவிட அவ்வப்போது தோன்றி மறையும் 'கௌரவ' எழுத்தாளர் சிலரையும் உருவாக்க முடிந்தது.

தற்போது புத்தாக்கமான புதிய புதிய களங்களில் பயணிக்கும் கல்விசார் எழுத்தாக்க மரபு, அறிகைமரபு நம்மிடையே உருவாக முடியாத அளவிற்கு பலநிலைகளிலும் பலதளங்க ளிலும் பன்முக நெருக்கடிகளை முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

கல்வியியலில் டிப்ளோமா, முதுகலைமாணி முதலான பட்டங்களைப் பெறுவதற்கு மாணவர் களுக்கு உதவியாகவும் நமது வெளியீடுகள் உதவி செய்து வந்தன. ஆனால் "அகவிழி", "ஆசிரியம்" முதலான இதழ்களில் தொடர்ந்து எழுதக் கூடியவர்களின் ஆக்கங்கள் புதிய உள்ளீடுகளை யும் நடைமுறை சார்ந்த கல்விப் பிரச்சினைக ளையும் அணுகும் விதத்தில் புத்தாக்கமாக அமையவில்லை என்பதை நாம் துயரத்துடன் பகிர்ந்துகொள்ளத்தான் வேண்டும்.

இன்னும் சிலர் தமது மேற்படிப்புக் காலத்தில் மட்டுமே "ஆசிரியம்" உள்ளிட்ட இதழ்களை பயன்படுத்தி வருவதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் இன்று இந்த வாசிப்பு மட்டம் கூட குறைவடைந்துகொண்டுதான் வருகின்றது. மேலும் ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விசார் விரிவுரை யாளர்கள் மற்றும் கல்வி நிருவாகிகள் என விரியும் பரப்பில் "ஆசிரியம்" ஒரு விறுப்புறுதி சார்ந்த வாசிப்புச் சாதனமாக எந்தளவிற்கு பயன்படு கின்றது என்பதும் கேள்விக்குறிதான்.

முன்னர் தமது பரீட்சைத் தேவைகளுக்காக வாசித்தவர்கள் கூட, தமக்கான பதவி உயர்வுகளை அடைந்தவுடன் "ஆசிரியம்" இதழை பார்ப்பதையே ஒரு தீட்டாக நினைக்கும் மனோபாவத்திற்குள் வீழ்ந்துள்ளனர். எந்தவொரு நபரும் "ஆசிரியம்" இதழில் வரும் கருத்துக்கள் மீதான தமது மாற்றுக் கருத்துக்களையும் ஆலோசனை களையும் முன்வைக்க முடியாத அவலமான சூழலும் நிலவி வருகின்றது.

வெளிவரும் கட்டுரைகளில் போதாமை ஒருபக்கம் என்றால், வாசிப்பு சார்ந்த துலங்கல் பரந்து காணப்படாமையும் நமக்கு பெரும் சோர்வையும் அவநம்பிக்கையையும் தருகின்றது. குறிப்பாக அதிபர்கள் மற்றும் கல்விசார் அதிகாரிகள் மட்டத்தில் "ஆசிரியம்" சாதக பாதக சிந்தனைக் கிளர்வுகள் எதனையும் ஏற்படுத்தாமல் இருப்பதையிட்டு நாம் வேதனைப்படுவதை விட, நமக்கு வேறு வழிமுறைகள் எதுவும் தெரியவில்லை.

இன்று "கற்பதற்காகக் கற்றல்" என்பது போன்று "சிந்திப்பதற்காகக் கற்றல்" என்பதும் கல்வியிலே வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் இந்தக் கூற்று எந்தளவிற்கு கல்விப்புலத்தில் உள்ளவர்களால் உள்வாங்கப்படுகின்றது, புரிந்துகொள்ளப்படுகின்றது என்பதும் நமக்குத் தெரியவில்லை. குறிப்பாக கல்விப்புல இளம் விரிவுரையாளர்கள் ஆசிரியத்துக்கு எழுதுவதும் இல்லை ஆசிரியத்தை வாசித்து அதன் மீதான விமர்சனச் சிந்தனையை வெளிப்படுத்துவதும் இல்லை. இது ஏன் என்பதும் நமக்கு புரியவில்லை.

நமது முன்னைய தலைமுறையினர் இன்றும் உற்சாகத்துடன் எழுதிக்கொண்டிருப்பதால்தான் கல்விசார் வெளியீட்டில் நாம் புதிய வெளிகளை புது புதுக் களங்களை உருவாக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பினால் சிந்தனை வளமாக்கப்படுகின்றது. வாசிப்பிலும் பல பிரிவுகள் காணப்படுகின்றன. இந்தப் புலக்காட்சியை ஆசிரிய மாணவர்களை முதன்மைப்படுத்தி மீள் சிந்தனைக்கு உட்படுத்துவது சமகாலத் தேவையாகின்றது.

கல்விப்புல மேற்படிப்புக்கும் ஆசிரிய வாண்மைத்துவத்துக்கும் இடையே நேரடித் தொடர்பு உள்ளதா? என்பது குறித்தும் ஆழமான உரையாடல் நமக்கு அவசியமாகின்றது. எந்தளவுக்கு நமக்கு கல்விப்புலம் சார்ந்த பட்டங்கள் அல்லது சான்றிதழ்கள் கிடைக்கின்றனவோ? அந்தளவிற்கு நாம் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிலிருந்து விலகிச் செல்லும் நடைமுறைக்குள் இழுபட்டுச் செல்கின்றோம்.

சமகாலச் சூழலில் ஆசிரியருக்கு வலுவூட்டல் என்பது கல்விச் செயல்முறைக்கு வலுவூட்டலாக கருதப்படுகின்றது. நடைமுறைகளிலிருந்து வலுவிழந்த நிலையில் இயங்கும் ஆசிரியத்துவ அணியினரால் உரிய விளைவுகளையோ, பெறுபேறுகளையோ எட்ட முடியாமல் இருத்தல் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு மாற்றான செயற்பாடுகளும் பல மட்டங்களில் முன்னெடுக்கப்படுகின்றது.

இன்று பிரயோக உளவியலில் விதந்து பேசப்படும் ஒரு எண்ணக்கருவாக வலுவூட்டல் அமைகின்றது. ஆசிரியரை வலுவூட்டல் என்பது ஒரு புதிய நடைமுறையாக எல்லோராலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. கற்றல் - கற்பித்தலை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு வலுவூட்டலும் தேர்ச்சியும் முக்கியம் பெறுகின்றது. வலுவூட்டப்பட்ட ஒரு ஆசிரியர் தேர்ச்சி மிக்க ஆசிரியராக தம்மை உருமாற்றிக் கொள்கின்றார். இதற்கான திட்டமிடலும் செயற்பாடுகளும் நமது கல்விப் புலத்தில் எந்தளவிற்குப் பொருத்தப்பாடுடையதாக அமைகின்றது என்பதும் கேள்விக்குறி.

ஆசிரியரின் தொழிற்பாடுகளும் நடத்தைகளும் அதிகாரத்தின் திணிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. இங்கு வலுவூட்டல் எனும் உளவியல் செயற்பாடு நிகழ்த்தப்படாது அதனை வலுவிழக்கச் செய்தலே நடைபெற்று வருகின்றது. வலுவூட்டல் என்ற செயற்பாடு உரிய முறையிலே கிடைக்கப்பெறாமல் தமக்குரிய உயர்ந்த பொறுப்புக்களை தாமே உருவாக்கிக் கொள்கின்றனர். அல்லது அவ்வாறு உருவாக்கப்படுவதற்கான செயற்கையான சூழலை தாமே திட்டமிட்டு உருவாக்குகின்றனர். பொருத்தமில்லாதவர்களிடம் வலுக்குன்றியவர்களிடம் பதவிகள், அதிகாரம் குவிந்து வருவதையும் மறுப்பதற்கில்லை.

ஆசிரியருக்கு வலுவூட்டல் என்பது கல்வி நிறுவன வளர்ச்சிக்கு வலுவூட்டலாக புரிந்து கொள்ள வேண்டும். வலுவூட்டப்பட்ட ஆசிரியர் புத்தாக்கங்களையும் புதிய கண்டுபிடிப்புக்களையும் உருவாக்குவார். வலுவூட்டம் பெறாதோர் பழைய தடங்களிலேயே சென்று கொண்டிருப்பர். பழைய வகிபாகங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பர்.

குறிப்பாக ஆசிரியர்கள் பழைய குறிப்புக்களை மீளவும் மாணவருக்கு வழங்குவோராய் இருப்பதனை பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். (இதற்கு கல்விப்புல விரிவுரையாளர்களும் விதிவிலக்கல்ல) அறிவின் புதிய பாய்ச்சல்களை இவர்களால் கண்டுகொள்ள முடியாதிருப்பதுடன் புதிய அறிவைத் தேடும் ஆற்றலற்றவர்களாகவும் இருக்கின்றனர். மாணவர்களை வழிநடத்துவதற்கும் புதிய ஆய்வுகளை நோக்கி திசைதிருப்புவதற்கும் வளம் குன்றிய நிலையில் வலுவூட்டம் அற்றவர்களாக இருப்பவர்களால் பெரும் எதிர்விளைவுகளை நாம் சந்திக்க நேரிடுகின்றது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சேவைக் கால வகுப்புக்களும் செயலமர்வுகளும் வலுவூட்டலை எந்தளவுக்கு மேற்கொண்டு வருகின்றன என்பது குறித்தும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய காலம் நமக்கு கனிந்துள்ளது. ஆசிரியர் கல்வியில் மேற்கொள்ளபடும் ஆய்வுகள் ஆசிரியருக்கான வலுவூட்டலில் பங்களிப்புச் செய்யாத நிலையே காணப்படுகின்றது. தெரிந்ததை தெரிவிக்கும் ஆய்வுகளாகவே பெரும்பாலானவை அமைந்து வருகின்றன. புதியவற்றைக் கண்டுபிடிக்கும் ஆய்வுகள் பொதுவாக இடம்பெறுதல் இல்லை.

**தெ.மதுசூதனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எஸ்.சந்திர மௌலி



# பால்பாயிண்ட் பேனாவுக்கு விடை கொடுப்போம்?

இது பால்பாயிண்ட் பேனா யுகம். பள்ளி மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை பால்பாயிண்ட் பேனாக்களைப் பயன்படுத்துவதையே சவுகரியமாகக் கருதுகிறோம். ∴ பவுண்டன் பேனாக்களில் இங்க் நிரப்பிப் பயன்படுத்துவது நேர விரயம் என நினைக்கிறோம். ஆனால் பிளாஸ்டிக்கினால் ஆன பால்பாய்ண்ட் பேனாக்கள் எத்தகைய சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என யோசித்திருக்கிறோமா?

**கவனிக்கப்படாத பாதிப்பு?**

பிளாஸ்டிக் பைகள், பாட்டில்கள் குறித்து மக்கள் மத்தியில் இன்று ஓரளவுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதால், அவற்றின் ஒரு பகுதியாவது மறுசுழற்சிக்குப் போகிறது. ஆனால், பால்பாயிண்ட் பேனாக்களைப் பொறுத்தவரை, உலோகத்தாலான பேனா முனை, மீதமுள்ள மை, பிளாஸ்டிக் பேனா பகுதி இவற்றையெல்லாம் பிரித்தெடுப்பது சிரமம் எனச் சொல்லி, மறுசுழற்சி பற்றி யோசிப்பதே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மை தீர்ந்த பிறகு அவற்றை அப்படியே தூக்கி எறிந்துவிடுகிறோம். ஆனால், "பால்பாயிண்ட் பேனாக்களால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பு அதிகமானது. "கேரளாவில் மட்டும் மாதந்தோறும் மூன்று கோடி பால்பாயிண்ட் பேனாக்கள் பயன்படுத்தப்பட்டு, தூக்கி எறியப்படுகின்றன" எனச் சுட்டிக்காட்டுகிறார் "பியூர் லிவிங்" தொண்டு நிறுவனத்தை நடத்திவரும் சமூக ஆர்வலரும் ஓவியருமான லட்சுமி மேனன்.

மாணவர்கள் மத்தியிலிருந்து, பால்பாயிண்ட் பேனாவை முற்றிலுமாக அகற்றிவிட்டு, முந்தைய தலைமுறையினரைப் போல இங்க் பேனாவைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை இவர் முன்னெடுத்துவருகிறார். இத்தகைய சமூக அக்கறை கொண்ட நடவடிக் கையை முன்மொழிந்தது கேரள மாநில அரசாங்கம்.

### தூர எறிந்துவிடும் கலாச்சாரம்?

மக்கள் வாழ்க்கை இயற்கை சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கேரள அரசு அறிவித்த திட்டம்தான் "ஹரித கேரளம்" அதன்படி, பள்ளிக் கல்வித் துறையானது கேரளாவில் உள்ள அனைத்துப் பள்ளி, கல்லூரி களில் பிளாஸ்டிக்கினாலான பால்பாயிண்ட் பேனாக்களுக்குப் பதிலாக இங்க் பேனாவைப் பயன்படுத்தும்படி அறிவுறுத்தியது. அரசின் இந்த உத்தரவைக் கேரளப் பொதுமக்களும், பள்ளிகளும், கல்லூரிகளும் செயல்படுத்துவதற்கு ஆர்வத்துடன் முன்வந்தன. சில தொண்டு நிறுவனங்கள் பள்ளிகள், கல்லூரிகளுடன் கை கோத்து, இதனைச் செயல்படுத்துவதற்குக் களமிறங்கின.

கொச்சி பினாலே அமைப்புடன் இணைந்து இந்தப் பணியைப் பெரிய அளவில் மக்கள் மத்தியிலும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மத்தியிலும் கொண்டு சென்றார் லட்சுமி மேனன். "இந்த முயற்சி, பால்பாயிண்ட் பேனாக்களுக்கு எதிரானதல்ல. அண்மைக் காலமாகச் சமூகத்தில் பெருகிவரும் பயன்படுத்திவிட்டு, தூர எறிந்துவிடும் நவீன கலாச்சாரத்துக்கு எதிரானது" என்கிறார் லட்சுமி.

### மறுசுழற்சி நினைவுச் சின்னம்?

இதற்கான விழிப்புணர்வு யாத்திரையை நடத்திய லட்சுமி இதுவரை பல்வேறு பள்ளிகள், கல்லூரிகளுக்குச் சென்று, மாணவ, மாணவி களைச் சந்தித்திருக்கிறார். யாத்திரை தொடங்கியபோது, பயன்படுத்திய பால்பாயிண்ட் பேனாக்கள் பத்தாயிரம் சேகரிக்க வேண்டும் என்பது அவரது திட்டம். ஆனால், யாத்திரை முடிந்தபோது, அவர் திரட்டிய பால்பாயிண்ட் பேனாக்களின் எண்ணிக்கை ஏழு லட்சத்தைத் தொட்டுவிட்டது.

இந்தப் பழைய பால்பாயிண்ட் பேனாக்களை என்ன செய்வதாக உத்தேசம்? என்று கேட்டால், "பால்பாயிண்ட் பேனாக்களுக்கு விடை கொடுப்போம். இங்க் பேனாக்களைப் பயன்படுத்துவோம் சுற்றுச்சூழல் பாதுகாப்போம் என்று தொடர்ந்து வலியுறுத்தும் விதமாகக் கொச்சியில் நினைவுச் சின்னம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டிருக்கிறோம். நாங்கள் சேகரித்த ஏழு லட்சம் பழைய பால்பாயிண்ட் பேனாக்களை மறுசுழற்சி செய்து அது உருவாக்கப்படும்" என்கிறார்.

இவருடைய கேரள விழிப்புணர்வு யாத்திரை பற்றி அறிந்து, லண்டனிலும் இதேபோல ஒரு இங்க் பேனா விழிப்புணர்வை ஏற்படுத்த அழைப்பு வந்துள்ளதாம். கேரளாவின் பல ஊர்களிலும், ஊர் பஞ்சாயத்துகளே பள்ளிக்கூட மாணவர்களுக்கு இங்க் பேனாக்களை வழங்கி, மாணவர்களை ஊக்குவித்துள்ளன.

### பரஸ்பரம் சொல்லித்தரும் பேனா?

இந்த விழிப்புணர்வில் ஈடுபட்ட அனை வருக்கும் வழிகாட்டியாக இருந்தவர் கேரளா பல்கலைக்கழகத்தின் பயோ இன்ஃபர்மேடிக்ஸ் துறை பேராசிரியர் முனைவர் அச்சுத்சங்கர் நாயர். பால்பாயின்ட் பேனா சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது ஒரு பக்கம் என்றால், இங்க் பேனாவுக்கென்று ஒரு பாரம்பரியம், கலாச்சாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இங்க் பேனா பயன்படுத்துவது வாழ்க்கையில் ஒரு ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கும். தினமும் பேனாவில் இங்க் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். குறைவாக இருந்தால், மை நிரப்ப மறக்கக் கூடாது.

வகுப்பில் ஒரு மாணவனின் பேனாவில் மை தீர்ந்து போனால், பக்கத்து மாணவர் கொஞ்சம் போலத் தன் பேனாவிலிருந்து மையைப் பகிர்ந்து கொடுப்பார். இது பரஸ்பரமாக உதவும் பழக்கத்தை இளமையிலேயே ஏற்படுத்தும். பால்பாயிண்ட் பேனா இதற்கு நேரெதிர். பயன்படுத்திவிட்டு, இனிமேல் அதனால் பயனில்லை என்று தெரிந்ததும் தூக்கி எறிவது என்ற மனப்பான்மையை வளர்த்துவிடும். இது வாழ்க்கைக்கு வளம் சேர்க்காது என்கிற சிந்தனையை முன்வைக்கிறார்.

கேரளாவின் பள்ளிகளில் செயல்படுத்தப் படும் இந்தத் திட்டமானது விரைவில் தனியார் நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று நம்பிக்கை அளித்திருக்கிறார் கேரளக் கல்வி அமைச்சர் சி.ரவீந்திரநாத். இவரும் பால்பாயிண்ட் பேனாவுக்கு விடைகொடுத்துவிட்டு, இப்போது இங்க் பேனாவைத்தான் பயன்படுத்திவருகிறார்.



**காகித பென்சிலால் மரங்களைக் காக்கும் மாணவர்கள்**

விண்வெளிக்கு எடுத்துச் செல்லும்போது, அங்கே புவியீர்ப்பு விசை இல்லாததால் மை பேனாவை பயன்படுத்த முடியாததால், அமெரிக்கர்கள் பால் பாயிண்ட் பேனாவைக் கண்டுபிடித்தனர். ஆனால் ரஷ்யர்கள் அப்படி எதையும் கண்டுபிடிக்காமலேயே எழுதினார்கள் அவர்கள் பயன்படுத்தியது பென்சில்.

கையில் பிடித்துக்கொண்டு எழுதுவதற்கு வசதியாகக் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் எழுதுபொருள் பென்சில். இதற்காக உலகெங்கும் ஆண்டுதோறும் 60 ஆயிரம் மரங்கள் வெட்டப்படுகின்றன. இப்படி மரங்களை வெட்டுவதற்குப் பதிலாக, பழைய காகிதத்தைக் கொண்டு பென்சில் தயாரிக்கும் முறையைக் கண்டறிந்திருக்கிறார்கள் மதுரை பள்ளி மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காகிதப் பென்சில்

மதுரை நரிமேடு கேந்திரிய வித்யாலயா பள்ளியின் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் பி.நரசிம்ஹன், ஆர்.தீபு விஜய் காந்தி, ஏ.ஜவஹர்லால் நேரு ஆகியோர்தான் அந்த மூவரும். பென்சில் தயாரிப்புக்கு மரம் பயன்படுத்தப்படுகிறது. காடழிப்பைக் குறைக்க வேண்டும் என்றால், பென்சில் தயாரிப்புக்கும் மாற்றுவழி கண்டறிந்ததாக வேண்டும். பென்சிலின் நடுப்பகுதியில் உள்ள எழுதுபொருளான கிராபைட் குச்சியின் மீது பழைய காகிதத்தைக் கெட்டியாகச் சுருட்டி, நேர்த்தியாக ஒட்டி இந்தப் பென்சிலை இவர்கள் தயாரித்திருக்கிறார்கள். இது மரத்தைப் போலவே கெட்டியாகவும் நேர்த்தியாகவும் உள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் பாராட்டப்படுகிறது.

### சூழல் நண்பன்

மரங்களை வெட்டுவதைக் குறைக்கக் காகிதங்களை மறுசுழற்சி செய்யச் சொல்கிறார்கள். மறுசுழற்சிக்கும் வேதிப்பொருட்கள், எரிசக்தி போன்ற தேவைகள் இருக்கலாம். அதனால் மறுசுழற்சியைவிட மறுபயன்பாடே சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாக இருக்கும். "அதனால், படித்துவிட்டுத் தூக்கி வீசுகிற பழைய பத்திரிகைகளை நாங்கள் பென்சில் தயாரிப்புக்குப் பயன்படுத்தி இருக்கிறோம். கொஞ்சம் கவனமாக உருட்டினால், இந்தப் பென்சிலையும் மர பென்சிலைப் போல ஷார்ப்னர் கொண்டு சீவ முடியும். பின்பக்கம் அழிக்கும் ரப்பரையும் பொருத்திக்கொள்ள முடியும்" என்கின்றனர்.

இந்தக் கண்டுபிடிப்புக்கு இவர்களுடைய ஆசிரியை கௌரியும் உதவியிருக்கிறார். இப்போது சுற்றுச்சூழலுக்கு நட்பான *(Eco Friendly)* பொருட்கள் பிரபலமாகி வருகின்றன. இந்த பென்சில்களை, இயந்திரங்களைக் கொண்டு பெரிய அளவில் தயாரிக்கலாம். பென்சில் தயாரிப்பில் முன்னணியில் உள்ள எச்.பி. நிறுவனத்தை இதற்காக அணுக உள்ளோம் என்கின்றனர். காகிதத்தால் தயாரிக்கப்பட்ட "ரீபிள் பேனா"க்களை அறிமுகப்படுத்தும் திட்டமும் இவர்களிடம் உள்ளது.

### மேலும் திட்டங்கள்


தாங்கள் தயாரித்த காகித பென்சில்களை மதுரை மாவட்ட வன அலுவலர் நிஹர் ரஞ்சனிடம் இந்த மாணவர்கள் காட்டியுள்ளனர். வியந்து போய் மாணவர்களை அவர் பாராட்டி இருக்கிறார்.

நிலத்தைப் பாழ்படுத்தும் சீமைக் கருவேல மரங்களை எரித்துத் தூவுவதன் மூலம் நிலத்தின் ஈரப்பதத்தைத் தக்க வைப்பது, நெய்வேலியில் காற்றில் மிதக்கும் கார்பன் துகள்களை எளிமையான முறையில் பிரித்தெடுத்து வருமானம் ஈட்டுவது போன்று சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பல்வேறு திட்டங்களையும் இந்த மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அன்பு ஜவஹர்ஷா



# இலங்கை ஆசிரியர் சேவை 23 வருடங்களாக தொடக்கப் புள்ளியில்

1994.10.31 ஆம் திகதிய 843/4 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் 1994.10.06 ஆம் திகதி முதல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை உருவான வரலாறு பற்றி புதிய தலைமுறை ஆசிரியர்களுக்கு தெரியாது இருக்கலாம்.

எந்த பதவி உயர்வோ உயரிய சம்பளமோ இல்லாது உதவி ஆசிரியராக சேவையில் சேரும் ஒருவர் 30 அல்லது 40 வருட காலச் சேவைக்குப் பின்னர் அதே பதவியுடன் சம்பள முறையில் உள்ள வருடாந்த சம்பள ஏற்றங்களை மட்டும் பெற்றுக்கொண்டு ஓய்வு பெறும் நிலையே 1994.10.06க்கு முன்னர் காணப்பட்டது.

சகல தொழில்சங்கங்களினதும் கூட்டான, நீண்டகாலப் போராட்டத்தின் பின்னர் தேர்தல் வாக்குறுதி போன்ற அரசியல் அழுத்தங்களால் ஒருவாறு உயர்தர முகாமைத்துவ சேவைகளுக்கு சமாந்தரமாக இலங்கை ஆசிரியர் சேவை ஸ்தாபிக்கப்பட்டது. 1995.04.03 திகதிய 865/3 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் முழுமையான இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பு வெளியிடப்பட்டது. பின்னர் 1997.03.11 ஆம் திகதிய 966/5 ஆம் இலக்கம் கொண்டதும், 1997.05.14 ஆம் திகதியுமான 975/6 ஆம் இலக்கம் கொண்டதுமான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் இது திருத்தப்பட்டது. பல பிரிவுகளாக இருந்த ஆசிரியர் வகுதிகளை மூன்று வகுப்புக்கள் உள்ளடக்குவது தொடர்பான சிக்கல் காரணமாகவும், 2.97, 06/2006 ஆம் இலக்கங்கள் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளினால் உண்டான சம்பள முரண்பாடு தொடர்பாகவும் பல்வேறு கலந்துரையாடல்கள், போராட்டங்கள், அடிப்படை மீறல் வழக்குகள் உட்பட பல்வேறு வகையான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. சேவை முரண்பாடு, பதவி உயர்வு, சம்பள முரண்பாடு போன்றவையே இவைகளின் பிரதான காரணமாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்சொல்லப்பட்ட விடயங்களில் நாடாளாவிய சேவைகளின், விசேடமாக இலங்கை நிருவாக சேவை அதிகாரிகளே தீர்மானம் எடுக்கும் நிலையில் இருந்தமையாலும், அவர்களின் கையில் அகப்பைகளும் இருந்தமையாலும் இறுதியில் தமது சேவையின் மூன்றாம் வகுப்பு சம்பளத்தையோ, அவர்களது உரிமைகளையோ மீறாத வகையில் அவர்கள் சட்டங்களையும் ஆக்கிக்கொண்டார்கள். இதன்படியே 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் அமைந்தது. 2016.01.01ஆம் திகதி முதல் செயல்படும் 03/2016ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையும் இதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இங்கு ஆராயப்படவுள்ள விடயம் இது தொடர்பானது அல்ல.

பதவி உயர்வும், உயரிய சம்பளமும் ஆசிரியர் பக்க தேவையாக இருந்தாலும் உண்மையில் இலங்கை ஆசிரியர் சேவையின் அடிப்படை நோக்கம் இன்னும் பரந்ததாகும்.

பண்புசார் ஆசிரியர் சேவை என்பது தனியே சம்பளத்தையும், பதவி உயர்வையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது என்பதால் அவர்களின் தொழில்வாண்மை மேம்படுத்துவதற்காக இலங்கை ஆசிரியர் சேவையில் தொழில்சார் வாண்மை விருத்தி தொடர்பான விடயங்கள் முதலாவது இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

கடந்த 23 வருட காலமாக பதவி உயர்வுக்கு வருட எண்ணிக்கை மட்டுமே போதும் என்ற மனப்பாங்கு வளர்ந்துவிட்டபடியால் ஆண்டுகளை கடத்தி பதவி உயர்வு பெறும் நிபந்தனையை மட்டுமே ஆசிரியர்கள் அறிந்து கொண்டு உள்ளார்கள். எந்தவித தொழில்சார் மீளாய்வும் இல்லாமல் கடந்த 23 வருட காலமாக பதவி உயர்வும் வழங்கப்பட்டு வருவதால் சிறப்பாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும், கடமைக்காக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் ஒரு விலையே பேசப்படுகின்றது. நிர்ணயிக்கப்படுகின்றது. இது இலங்கை ஆசிரியர் சேவையின் குணாம்ச அல்லது பண்புசார் தொழில் விருத்திக்கு பாதகமாகவே அமைந்து வருகின்றது.

முதலாவது இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் மட்டுமல்ல 2008.07.01 தொடக்கம் செயல்படும் 2014.10.23 ஆம் திகதிய 1885/38 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிலும் பண்புசார் விருத்தி தொடர்பான விடயங்கள் உள்ளன. தொழில்சார் மீளாய்வு தொடர்பாக ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்றுக்கொள்வதற்காக முறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த பிரமாணக் குறிப்பு திருத்தம் வெளியிடப்பட முன்னர் 20 வருடங்களாக இருந்த பிரமாணக் குறிப்பிலும் பதவி உயர்வுக்கு இப்படியான தொழில்சார் மீளாய்வு தொடர்பான விடயங்கள் இருந்தன. ஆனால் எதுவுமே அமுல் நடத்தப்படாமையால் பல சுற்றறிக்கைகள் மூலம் திருத்தங்கள் செய்யப்பட்டு வருடங்கள் முடிந்தவுடன் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

2014.10.23 அன்று வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட பிரமாணக் குறிப்பில் தொழில்சார் மீளாய்வு தடைதாண்டல் பரீட்சைகள் போன்ற விடயங்கள் உள்ளன. 2017.10.23 வரை மூன்று வருட காலக்கெடு விதிவிலக்கு அளிக்கப்பட்டு அதற்கு முன்னர் பதவி உயர்வு பெற உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகின்றன. 2017.10.23 க்கு பின்னர் 3-I ல் இருந்து 2-II க்கு செல்லவும் 2-II ல் இருந்து 2-I க்கு செல்லவும் 2-I ல் இருந்து வகுப்பு - 1 க்குச் செல்லவும் இந்த தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவது கட்டாயமானதாகும். மூன்று தடைதாண்டல் பரீட்சைகளுக்குப் பின்வரும் 20 மொடியூல்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினைத்திறன் தடைதாண்டலுக்கான மொடியூல்கள்

| | | |
|---|---|---|
| மொடியூல் 01 | தாபன விதிக் கோவையில் ஆசிரியருக்குரிய அடிப்படை விடயங்கள் மற்றும் அரச சேவையில் உள்ள உத்தியோத்தர் ஒருவரினால் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விடயங்கள் மற்றும் நிதிக் கோவையின் சுருக்கமான விடயங்கள் விளக்கமான பாட உள்ளடக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது) | |
| மொடியூல் 02 | ஆசிரியர்களின் விழுமியங்கள் | 1ஆம் வினைத்திறன் தடைத்தாண்டல் |
| மொடியூல் 03 | வகுப்பறை முகாமைத்துவம் மற்றும் மாணவர்களை இனங்காணுதல் | |
| மொடியூல் 04 | சமர்ப்பிப்பு கலை சார் முறை (பிரயோகச் செயற்பாடுகள் உட்பட) | |
| மொடியூல் 05 | நாட்குறிப்பில் வாரக் குறிப்புக்கள் தவணைக் குறிப்புகள் மற்றும் பாடக் குறிப்புகளை தயாரித்தல் மற்றும் பேணல் | |
| மொடியூல் 06 | உற்பத்தித் திறன் மற்றும் தர கலைசார் முறை | |
| மொடியூல் 07 | கல்விக்கான தகவல் தொழில்நுட்பம் | |
| மொடியூல் 08 | கல்வியுடன் தொடர்புபட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் கல்வி வரலாறு | |
| மொடியூல் 09 | ஆங்கில பயன்பாடுகள் | 2ஆம் வினைத்திறன் தடைத்தாண்டல் |
| மொடியூல் 10 | பாட இணை செயற்பாடுகள் மற்றும் பாடசாலை செயற்றிட்டம் | |
| மொடியூல் 11 | அலுவலக முறை மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு சாதன இணைப்புக்களை நடாத்தி பின்பற்ற வேண்டிய செயற்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களை எடுத்தல் | |
| மொடியூல் 12 | சிறுவர் சுகாதார மற்றும் போசாக்கு | |
| மொடியூல் 13 | விளையாட்டு மற்றும் உடற்கல்வி அறிவு | |
| மொடியூல் 14 | மனோவியல் ஆலோசனை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மொடியூல் 15 | கல்வித் துறையில் காணப்படும் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு மற்றும் அதற்கான தொடர்புகளை பேணல். உயர்கல்வி, மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழில்சார் கல்வி |
| மொடியூல் 16 | ஆராய்ச்சி மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி முறைகள் |
| மொடியூல் 17 | நபர்களுக்கிடையிலான இணைப்புக்கள் மற்றும் சிந்தனைத்திறன் அபிவிருத்தி |
| மொடியூல் 18 | மானிட வள முகாமைத்துவம் |
| மொடியூல் 19 | முறைசாரா கல்வி மற்றும் மென்பொருள் திறமை |
| மொடியூல் 20 | நேர முகாமைத்துவம் மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை |

3ஆம் வினைத்திறன் தடைத்தாண்டல்

2. வகுப்பு II தரத்திற்கு நேரடியாக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்காக முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை

| | |
|---|---|
| மொடியூல் 01 | தாபன விதிக்கோவையில் ஆசிரியருக்குரிய அடிப்படைக் கோவை மற்றும் அரச ஊழியர் ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை தகவல்கள் மற்றும் நிதிக்கோவையின் சுருக்கமான விடயங்கள் (விளக்கமான பாட உள்ளீட்டை தயாரித்தல்) மற்றும் ஆசிரியர் விழுமியங்கள் |
| மொடியூல் 02 | உற்பத்தித்திறன் மற்றும் தர முறைமை |
| மொடியூல் 03 | கல்விக்கான தகவல் தொழில்நுட்ப வகுப்பறை முகாமைத்துவம் மற்றும் மாணவர்களை இனங்காணுதல் |
| மொடியூல் 04 | ஆங்கிலப் பயன்பாடு |
| மொடியூல் 05 | நாட்குறிப்பில் வாரக் குறிப்புக்கள் தவணைக் குறிப்புகள் மற்றும் பாடக் குறிப்புக்களை தயாரித்தல் மற்றும் பேணல் |
| மொடியூல் 06 | சமர்ப்பிப்பு கலை சார் முறை (பிரயோகச் செயற்பாடுகள் உட்பட) |
| மொடியூல் 07 | அலுவலக முறை மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு சாதன இணைப்புக்களை நடாத்தி பின்பற்ற வேண்டிய செயற்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களை எடுத்தல். |

1ஆம் வினைத்திறன் தடைத்தாண்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி உயர்விற்கான வினைத்திறன் தடைதாண்டல்கள்

*8. வினைத்திறன் தடைதாண்டல்:*

*(அ)* சேவையின் ஆசிரியர்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினை பூரணப்படுத்த வேண்டும்.

| எவ்வகையான வினைத்திறன் தடை தாண்டல் என்பது தொடர்பாக | தரம் | வினைத்திறன் தடைதாண்டல் சித்தியடைய வேண்டியது எத்தனை வருடங்களுக்கு முன்னர் | பூரணப்படுத்த வேண்டிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை | பூரணப்படுத்த வேண்டிய மொடியூல் |
|---|---|---|---|---|
| I வது வினைத்திறன் தடைதாண்டல் | 3-II | 3-II தரத்திற்கு நியமனம் பெற்று 3 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் | 96 மணித்தியாலம் | ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் 1-7 (I) |
| | 3-I | 3-I தரத்திற்கு நியமனம் பெற்று 3 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் | | |
| | 2 வகுப்புII தரத்திற்கு நேரடியாக சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் | 2-II தரத்திற்கு நியமனம் பெற்று 3 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் | 96 மணித்தியாலம் | 1-7 (II) |
| II வது வினைத்திறன் தடைதாண்டல் | 2 வகுப்பு II தரம் I கட்டத்தில் நிலைப்படுத்தப் பட்டோருக்காக | நான்கு வருடங்கள் கடப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டும் | 112 மணித்தியாலம் | 8-14 |
| | 2 வகுப்பு II தரத்தில் 3 வது கட்டத்தில் தாபிக்கப்பட் டோருக்காக | நான்கு வருடங்கள் கடப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டும் | 112 மணித்தியாலம் | 8-14 |
| | 2வகுப்பு II தரத்திற்கு 5ம் சட்டத்தில் தாபிக்கப் பட்டோருக்காக | நான்கு வருடங்கள் கடப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டும் | 112 மணித்தியாலம் | 8-14 |
| குறிப்பு8- பிரமாணக்குறிப்பில் 13.8 ல் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமாணி பட்டத் தகைமைக்கமைய சேவையில் 2ம் வகுப்பில் II தரத்திற்கு நேரடியாக சேர்த்துக் கொள்ளப்படும். ஆசிரியர்களைத் தவிர ஏனைய ஆசிரியர்களுக்காக மாத்திரம் 2வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை உரியதாகும். | III வது வினைத்திறன் தடைதாண்டல் | 2-I தரத்தில் பதவி உயர்வு பெற்று நான்கு ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டும் | 112 மணித்தியாலம் | 15-20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற விடயங்களை செயல்படுத்துவதில் கடந்த 23 வருட காலமாக கல்வியமைச்சு காட்டும் உதாசீனதன்மை ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்திக்கு பெரும் தடையாக உள்ளது. பாரிய விளம்பரத்துடன் *Smart Class Room* போன்ற விடயங்கள் பேசப்பட்டாலும் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு தேவையான பிரமாணக்குறிப்பில் உள்ள தொழில்சார் மீளாய்வு தொடர்பான விடயங்களில் கல்வி அமைச்சின் அக்கறையீனம் குறைவாக உள்ளது.

புதிய பிரமாணக் குறிப்பு வெளியாகி 3 வருடங்கள் நெருங்கும் நிலையில் இலங்கையில் உள்ள 108 ஆசிரியர் நிலையங்கள் ஊடாக அமுல் நடத்த வேண்டிய இந்த மொடியூல் வகுப்புக்கள் ஆமை வேகத்தில் நடக்கின்றன. பலவற்றில் இன்னும் ஒரு வகுப்புக்கள் கூட நடைபெறவில்லை.

இலங்கையின் பல பாகங்களில் நடைபெறும் ஆசிரியர் சேவை தொடர்பாக கலந்துரையாடல் களில் கலந்துகொள்ளச் செல்வதால் பல உண்மைகள் அப்பட்டமாகத் தெரிகின்றன. பல பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் இப்படி ஒன்று இருப்பதையே அறியாத நிலையில் உள்ளார்கள். 20 மொடியூல்களில் இதுவரை 6 மொடியூல்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டு உள்ளன. சில ஆசிரியர் மத்திய நிலையங்களே இவைகளை கிரமப்படி நடத்தி வருகின்றன.

கல்வியமைச்சு 2015 ஆம் ஆண்டு 23/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கையை வெளியிட்டு அண்மையில் தினசரிகளிலும் கல்வியமைச்சு இணையத்தளத்திலும் விளம்பரப்படுத்தி இருந்தாலும் இதற்காக அடிப்படை கருமங்கள் நடைபெறவில்லை. 6 மொடியூல்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் சில வகுப்புக்கள் நடத்தப்பட்டு உள்ளதால் 3-I தரத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு மட்டுமே இது அவசியம் என்ற கருத்தே மேலோங்கி உள்ளது. முதலாவது தடைதாண்டல் பரீட்சை 7 மொடியூல்கள் மட்டும் உள்ளடக்கப்படுவதால் 2017.10.22 என்ற திகதி காலக்கெடு 2-II தர பதவி உயர்வை பெறவுள்ள ஆசிரியர்களுக்கு மட்டுமே பொருத்தமானதாக அமையும்.

வடக்கிலும், கிழக்கிலும் பல ஆசிரியர் நிலையங்களில் இது தொடர்பான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தாலும் வட, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ள தமிழ்பேசும் ஆசிரியர்களுக்கு இந்த வாய்ப்பு பெரும்பாலும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. பெயருக்கு வளவாளர்கள், பொறுப்பாளர்கள் சில இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளார்கள் சில இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் இவர்களுக்கு பயிற்சியோ, கைநூல்களோ வழங்கப்படவில்லை. பெரும்பாண்மை மொழி ஆசிரியர்களுக்கும் இந்த மொடியூல் வகுப்புக்கள் பாரிய அளவில் நடை பெற்று வருவதாக அறியக் கிடைக்கவில்லை.

2-II தர பதவி உயர்வை 2017.10.23 க்குப் பின்னர் பெறவுள்ள ஆசிரியர்களின் நிலை என்ன? 2-I வகுப்பு பதவி உயர்வுகளை உள்ள மாற்று ஏற்பாடு என்ன? என்பது தொடர்பாக எந்தவித விளக்கமும் இல்லை. பழைய குருடி கதவை திறவடி என்ற நிலையில் மீண்டும் இவைகளில் இருந்து விதிவிலக்கு அளித்து சுற்றறிக்கை வெளியிட்டு பதவி உயர்வு வழங்கினால் ஆசிரியர்களின் பண்புசார் தொழில்வாண்மை விருத்தி என்ற விடயம் புஸ்வானமாகிவிடும்.

இந்த 20 மொடியூல்களின் தலைப்புகளைப் பார்த்தால் இவை ஆசிரியர்கள் தமது தொழிலை குணாம்ச தன்மையுடன் செய்வதற்கு எவ்வளவு முக்கியமானது என்பதை தெரிந்துகொள்ளலாம்.


பொதுப் பரீட்சை நடத்தல் பெறுபேறு வெளியிடல், தரம் 1க்கு மாணவர்களை சேர்க்க சுற்றறிக்கை வெளியிடல் போன்ற நடைமுறை விடயங்களோடு கல்வியமைச்சின் பணிகள் சுருங்கி விடுவதால் கல்வியின் பண்புசார் அபிவிருத்தி முக்கியமான ஆசிரியர்களின் தொழில்வாண்மையை விருத்தி செய்தல் போன்ற கவனிக்கப்படாமல் போகின்றன. தொழில் வழிகாட்டலுக்குத் தேவையான உரிய ஏற்பாடுகளை செய்யாமல் பெறுபேறுகளை மட்டுமே உச்ச அளவில் எதிர்பார்ப்பாக கேலிக்குரிய விடயமாகும்.

அத்தோடு உயரிய நோக்கத்தோடு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையை தனியே சம்பள, பதவி உயர்வு போராட்டங்களுக்கு மட்டும் சுருக்கிக் கொள்வது கவலைக்குரிய விடயமாகும். இந்நிலை தொடர்ந்தால் தொழில்வாண்மை எப்படி ஏற்படும் என்ற கேள்வியே இறுதியாக தொக்கி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சபா.ஜெயராசா



# சமகாலக் கல்வி

கல்வி என்பது சமூக இயல்பின் குறிகாட்டி, ஒடுக்குமுறைச் சமூகத்திலே கல்வியும் ஒடுக்கு முறைக்குரிய வடிவமாகவே கட்டியெழுப்பப் பட்டிருக்கும். இன்னும் விரிவாகச் சொல்லப் போனால், சமூக பொருளாதார அடிக்கட்டு மானத்தின் இயல்புக்கு ஏற்ற முறையில் மேலமைந்த வடிவமாகக் கல்வி ஏற்பாடுகள் அமைந்திருக்கும்.

சமூக ஏற்றத்தாழ்வுகள் மீளமீள உருவாக்கப் படுவதற்கு ஏற்படுத்தப்பட்ட செயல்வடிவமாக அரசால் பராமரிக்கப்பட்டு வரும் வடிவமே கல்வி, அரசு என்பது அதிகாரத்தின் ஏகபோக உரிமையைக் கொண்ட வடிவம். அதிகாரத்தின் நுண்மையான அலகுகள் கல்விச் செயற்பாட்டின் நுண்ணிய அலகுகள் வாயிலாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்.

கல்விச் செயல்முறையில் தனியார் முதலீடுகளையும் பங்கு பற்றலையும் ஏற்படுத்துதல் அரசின் அதிகாரத் தனியுரிமையைக் கட்டுப்படுத்தி விடும் என்று கூறுதல் தவறானது.

ஆட்சி செய்வோரும் தனியார் நிறுவன உரிமையாளர்களும் வர்க்க நிலையில் ஒரே பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு உடந்தையாக வரன்முறைப்பட்ட மத நிறுவனங்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கும். சமூக நியதியை மாற்றியமைக்காது, ஏற்றத்தாழ்வுகளைத் தொடர்ந்து பராமரித்துக் கொள்வதை வரன்முறைப்பட்ட சமய நிறுவனங்கள் இயக்கிய வண்ணமுள்ளன.

தேசிய முதலாளியம், உலக முதலாளியம், இனத்துவ மேலாதிக்கம், வன்முறை ஆகியவற்றின் கூட்டான இணைப்பின் அழுத்தங்களை எதிர்கொண்டது தமிழர்களின் கல்வி.

தாய்மொழி வழிக்கல்வியின் அறிமுகம் சிங்களம், தமிழ்மொழிக் கல்வி பயில்வோருக்கு அனுகூலங்களை விளைவித்தது. கிராமப்புற வறியவர்களிடத்தே நிலைக்குத்தான சமூக அசைவிய ஏற்றத்தை அது வருவித்தது. ஆயின் அதன் அனுகூலங்களைச் சிங்கள சகோதரர்கள் பெற்ற அளவுக்குத் தமிழ் மாணவர்களால் பெற்றுக் கொள்ள முடியாமற்போனமை துன்பத்தை விளைவித்தது.

முதலாளியம், இனத்துவ மேலாதிக்கம் தமிழர் என்ற அடையாளத்துக்கு எதிரான வன்முறை ஆகியவற்றின் கூட்டிணைப்பு *"புலச்சிதறல்" (Diaspora)*என்ற அவலத்தைத் தோற்றுவித்து. கல்வியிலும் பார்க்க உயிர்ப்பாதுகாப்பே முக்கியமாகக் கருதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே செல்கின்றோம் என்ற நிலையறியாது தஞ்சமளித்த நாடுகளுக்குள் இளைஞர் புகுந்து கொண்டனர்.

புலச்சிதறல் உலகில் இரண்டு வகையாக நிகழ்ந்துள்ளது. ஒன்று உயிர்ப் பாதுகாப்பை நோக்கி மேற்கொள்ளப்பட்ட நகர்ச்சி. மற்றையது, தொழில் தேடிய பொருண்மிய முதன்மையைக் கொண்ட நகர்ச்சி. முப்பது ஆண்டுக்காலப் போரில் முதலாவது வகை நகர்ச்சியே பெருமளவில் நிகழ்ந்தது.

தமிழ் இளைஞரின் கல்வியை அது நேரடியாகப் பாதித்தது. அதன் தொடர்ச்சியாக கல்வி பற்றிய முன்னைய உளநோக்கு *(Attitude)* மாற்றமடையலாயிற்று. அதாவது ஊன்றிய கற்றல் ஈடுபாடும் கற்றலால் இந்நாட்டிலேயே உயர் பதவிகளைப் பெறலாம் என்ற உளநோக்கிலே தகர்ப்பு ஏற்பட்டது.

வெளிநாடுகளுக்குப் புலம் சிதறிச் சென்றால் உயிர்ப்பாதுகாப்பும் தொழிற் பாதுகாப்பும் கிடைக்கும் என்ற புதிய உளநோக்கு கல்வி மீதான அக்கறையைக் குறைக்கச் செய்தது. மரபுவழியான கல்வி நோக்கங்களும் பிரித்தானியர் காலத்தில் முகிழ்த்த புதிய கல்வி நோக்கங்களும் தளம்பல் நிலைகளை அடைந்தன.

கல்விவழி ஈட்டல்கள் முக்கியமானவை யன்று வெளிநாடு செல்வதே உயர்ந்த குறிக்கோள் என்ற நிலை தோற்றம் பெற்றது. உயிர்ப் பாதுகாப்போடு இணைந்த அந்த இலக்கில் தவறு உண்டென்று கூற முடியாது. இனமோதல்கள் உக்கிரமடைந்த காலத்தில் மாணவர் மட்டுமன்றி பெற்றோரும் அதனையே விரும்பினர். பிள்ளைகளைப் பிரிந்திருந்தாலும் பரவாயில்லை அவர்கள் எந்த நாட்டிலாவது பாதுகாப்பாக இருந்தால் போதும் என்ற நிலையில் பெற்றோர் வாழ்ந்தனர்.

அந்நிலையில் கல்வி பற்றிய மரபுவழி விழுமியங்களும், பிரித்தானியர் காலத்தில் உருவாக்கம் பெற்ற உயர்கல்வி மற்றும் கல்விவழித் தொழில்களும் சார்ந்த விழுமியங் களும் வீழ்ச்சியடையத் தொடங்கின.

அரசதுறைகளில் தமிழரின் விகிதாசார அளவுக்கேனும் தொழில் வழங்கப்படா நிலையும், முன்னதாக பல்கலைக்கழக நுழைவில் அறிமுகம் செய்யப்பட்ட தரப்படுத்தல் திட்டமும் தமிழ் மாணவரிடத்து விரக்தியைத் தூண்டின. அதன் தொடர்ச்சி நீண்டு கொண்டே சென்றது.

மாகாண சபை முறை எதிர்பார்த்த இலக்குகளுக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் அமையவில்லை. கலைத்திட்ட ஆக்கமும், பாட ஏற்பாடுகளும், பொதுப் பரீட்சைகளும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அரசின் உரிய கையேடுகளும், வழிகாட்டிகளும் தமிழ்மொழியில் உடனடியாகக் கிடைப்ப தில்லை. அதுவும் தமிழ்ப் பிரதேசங்களின் கல்விப் பின்னடைவுக்கு ஒரு காரணியாயிற்று.

தமிழில் உடனடியாக அவற்றைத் தயாரித்து வழங்குவதற்குப் போதிய அலுவலர்கள் இல்லை என்று விடை சொல்லப்படுகின்றது. அதற்கும் அரசே பொறுப்புக்கூற வேண்டியுள்ளது.

மேலும் உயர் கல்வி மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளமையால் மாகாண சபைகள் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளன. அந்த இறுக்கமும் தமிழ் மாணவரிடத்து விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்ப் பாடநூல்களிலே வழுக்கள் காணப்படுதலும், மாணவரின் கற்றல் பற்றிய புலக்காட்சியிலே தாக்கங்களை விளைவிப்ப துடன் அதன் தாக்கம் ஒழுக்கப் பிறழ்விலும் நீட்சி கொள்கின்றது. தமிழ் பாடம் பற்றிய குறைவிழுந்த காட்சி மாணவரிடத்தே தோற்றம் பெறுகின்றது.

தமிழ்மொழி தொடர்பான நம்பிக்கையற்ற காட்சி தோற்றுவிக்கப்படுகின்றது.

மேலும் ஆங்கிலமொழி மூலக் கல்வியின் அறிமுகம் தமிழ் மற்றும் சிங்கள மாணவரிடத்தே தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்துகின்றது. தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகள் தாழ்வானவை என்ற மறைமுகமான கருத்தேற்றம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. தேசிய மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் மனவுளைச்சலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

அரசியல் ஏமாற்றங்களுடன் புதிய நுகர்ச்சிக் கோலச் சிக்கல்கள் இணைந்து கொள்கின்றன.

மாறிவரும் எதிர்மறையான சூழலில் ஆசிரியரிடத்தும் மாணவரி டத்தும் ஒழுக்கப் பிறழ்வுகள் ஆங்காங்கே எழத் தொடங்கியுள்ளன.

அத்தகைய பின்புலத்தில் *"பள்ளிக் கூடங்களின் செயலிழப்பு"* என்ற செயற்பாடும் இடம்பெறத் தொடங்கியது. தமிழ்ப் பிரதேசங்களில் நிகழ்ந்த செயலிழப்புக்கு தனியார் கல்வி நிலையங்களும் பொறுப்பாகின்றன. பள்ளிக்கூடங்களில் கற்காமல் தனியார் கல்வி நிலையங்களிலே கற்றுப் பொதுப் பரீட்சைகளிலே சித்தி எய்தலாம் என்ற "மாயைத் தோற்றம்" தமிழ்ச் சூழலிலே உருவாக்கப்பட்டது.

தென் - இலங்கையிலே அத்தகைய அவலமான நிலை தோற்றம் பெறவில்லை. அங்கு மாணவர் பள்ளிக்கூடத்திலே முழுமையாகப் பங்கேற்றனர். கலைத்திட்டச் செயற்பாடுகளிலே முழுமையாக ஈடுபடுகின்றனர். பள்ளிக்கூடம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மட்டும் தனியார் கல்வி நிலையங்களைப் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் தமிழ்க் கல்விப் பின்புலத்தில் மாணவர்கள் பள்ளிக்கூடத்தைப் புறக்கணித்து விட்டுத் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. க.பொ.த உயர் வகுப்புக்களில் இச்செயற்பாடு பெருமளவிலே இடம்பெறுகின்றது.

தனியார் கல்வி நிலையங்களிலே கற்றல் என்பது ஒரு தலைப்பட்சமான பித்து *(Mania)* என்ற நிலையை எட்டியுள்ளது. பள்ளிக்கூடங்கள் அந்த அறைகூவலுக்கு உறுதியாக முகம் கொடுக்க முடியாத நிலையில் நலிவடைந்துள்ளன.

கற்றல் - கற்பித்தலை முன்னெடுக்க வேண்டிய பள்ளிக்கூடங்கள் அரச திணைக் களத்தின் சாயலை நிகர்த்த வகையில் இயங்கத் தொடங்கியுள்ளன.

மாணவர் ஒவ்வொருவரையும் வினையாற்ற லுடன் ஈடுபடுத்தக் கூடிய வளமான கலைத்திட்டச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படா மையினால் அவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மாணவரும் ஆசிரியரும் ஓர் அரச பணிமனைக்குச் சென்று வருவது போல் பள்ளிக்கூடம் சென்று வருகின்றனர். அத்தகைய சூழலில் வினைத்திற னுடன் பணியாற்றும் ஆசிரியர்களும் விரக்திக்கு உள்ளாகின்றனர்.

ஆசிரியத்துவத்தை ஒரு தொழிலாக அன்றி வாண்மை நிலைக்கு உயர்த்துவதற்கு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சரிவில் முடிவடைந்துவிட்டன. வெறுமனே குறிப்புக்க ளுடன் உறவாடிச் சான்றிதழும் பட்டமும் பெறலாம் என்ற நிலை இலங்கையில் உருவாகி விட்டது. வாண்மையை மேம்படுத்துவதற்கான களப் பயிற்சிகள் உரிய முறையில் ஒழுங்கமைக்கப்படவில்லை.

வாண்மைக்கல்வி பரீட்சைக்காக அன்றி நடைமுறைக்கு அல்ல என்ற கண்ணோட்டமும் மேற்கிளம்பியுள்ளது. வாண்மை நிலையை எய்துவதற்கு வேண்டப்படும் நடைமுறைப் பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்ற பயிற்சியும் ஆசிரியர்களுக்குத் தரப்படுதல் இல்லை. மருத்துவம், பொறியியல் முதலாம் வாண்மைக் கல்வியில் நடைமுறைப் பிரச்சினை களையும் சவால்களையும் எவ்வாறு கையாள்வது என்பவை தொடர்பானவற்றுக்குக் கூடுதலான களப்பயிற்சிகள் வழங்கப்படுதலை இங்கு ஒப்புநோக்க வேண்டியுள்ளது.

ஆசிரிய வாண்மைக்குரிய உளச்சார்பும் ஊன்றிய விருப்பமும் அற்றவர்கள் ஆசிரியத்தில் கூடுதலாக உள்ளீர்க்கப்பட்டமையும் வாண்மைத்து வத்தின் சரிவுக்கு அடிகோலியுள்ளது.

"தொழிலுக்காக வந்தோம்" என்ற நிலையிலே பலர் தொழிற்பட்டுக் கொண்டி ருத்தலும் நடப்புநிலை வெளிப்பாடாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து (2005) பின்வரும் காட்சிகள் வெளிப்படுகின்றன.

1. பெரும்பாலான ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலை விட்டு நீங்கி கல்வி நிர்வாக சேவையிலும் அதிபர் சேவையிலும் இணைந்துகொள்ளும் ஆர்வம் கொண்டவர்களாக இருத்தல்.

2. தனியார் கல்வி நிலையங்களில் இணைந்து பொருளீட்டும் விருப்புடையோராய் இருத்தல். நவீன போட்டிப் பொருளாதாரத்தில் இது தவிர்க்க முடியாதது என்று அவர்களே குறிப்பிடுகின்றனர்.

3. ஆசிரியத் தொழிலுடன் வேறு ஒரு தொழிலையும் செய்யும் ஆர்வமுடையோராய் இருத்தல். இதற்கும் மேற்கூறிய காரணமே எடுத்தியம்பப்படுகின்றது.

மேற்கூறிய எதிர்விசைகளினூடே கற்றலையும் கற்பித்தலையும் மேம்படுத்தப்படக் கூடிய "எட்டும் இடைவெளிகள்" உண்டு.

"எட்டும் இடைவெளி" என்பது ஆசிரியரது முயற்சியாலும், ஆசிரியருக்குக் கொடுக்கப்படும் ஊக்குவிப்பு முயற்சிகளாலும், அடையப்படக் கூடிய விருத்தி வலயம் *(Development Zone)* ஆகும்.

எட்டும் இடைவெளியை ஆசிரியர்கள் எட்ட முடியாமலிருப்பதற் குரிய முக்கிய காரணிகளுள் ஒன்று அவர்களிடத்தே காணப்படும் வாசிப்புப் பண்பாட்டின் வீழ்ச்சியாகும். வாசிப்பும் அதன் பிரயோகமும் கற்றல் கற்பித்தலில் நேரடியான எழுச்சியை ஏற்படுத்த வல்லவை. வாசிப்பில் ஈடுபட முடியாதிருப்பதற்குரிய முக்கிய காரணம் "நேரம் கிடைப்பதில்லை" என்பதாகும் (2016). அந்நிலையில் ஆசிரியர்களிடத்து நேர முகாமைத்துவ ஆற்றலும் குன்றிய நிலையில் இருத்தலும் கண்டறியப்பட்டுள்ளது.

வாசிப்புக் குன்றிய நிலையில் இருக்கும் பொழுது கல்வி உள்ளடக்கக் கையளிப்பும் குன்றிய நிலையில் இருக்கும் என்பது வெளிப்படை.

கல்வி தொடர்பான எழுத்தாக்கங்களில் ஆசிரியர்களை ஈடுபடச் செய்தால் வாசிப்பு ஆற்றல் இயல்பாகவே அவர்களிடத்து மேலுயர முடியும். பல்கலைக்கழகங்கள் ஆசிரியர்களின் எழுத்தாக்கங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை பள்ளிக்கூட நிர்வாகமும் மாகாண மற்றும் மத்திய கல்வியமைச்சுக்கள் கொடுப்பதில்லை.

பள்ளிக்கூட நிர்வாகமும் கச்சேரி நிர்வாகத்தின் நீட்சியாகவே அமைந்து வருகின்றது. அரசு பள்ளிக்கூடங்களை உடமையாக்கிய காலத்திலிருந்து பள்ளிக்கூடத்தின் சுயாதீன இழப்புத் தொடர்ந்து வருகின்றது. பள்ளிக்கூடங்களுக்கு வலுவூட்டல், பள்ளிக்கூட மட்ட முகாமைத்துவம் ஆகியவை கச்சேரி நிர்வாகத்தின் நீட்சிகளாகவே இருக்கின்றனவேயன்றி கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிலும் ஆசிய வாண்மை உயர்ச்சியிலும், கலைத்திறன் இயக்கவினைப்பாட்டிலும் ஈட்டிய பெறுகைகள் தாழ்நிலையிலேதான் உள்ளன.

நவீன உலக மயமாக்கற் சூழலும் வெளிநாட்டுப் பணவரவின் பாய்ச்சலும் பள்ளிக்கூடக் கவிநிலை சமூகக் கவிநிலையிலும் பாரிய ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. வசதி படைத்தோருக்கும் வசதி குன்றியோருக்குமிடையேயுள்ள இடைவெளி மேலும் அகற்சியுறத் தொடங்கியுள்ளது.

அந்த இடைவெளி வசதிபடைத்தோரிடத்து ஒருவிதமான பிறழ்வு நடத்தைகளையும், வசதியற்றோரிடத்து இன்னொரு விதமான பிறழ்வு நடத்தைகளையும் உருவாக்கி வருகின்றது. பணமுடைய மாணவரின் பிறழ்வு நடத்தை ***அந்தஸ்துச் சின்னங்களுடனும் (Status Symbols) மேலெழுகை உளச்சிக்கலுடனும்*** *(Superiority Complex)* தொடர்புடையவை. பாலியல் நெறிப்பிறழ்வு அவர்களிடத்து ஒப்பீட்டளவிற் கூடுதலாகக் காணப்பட்டாலும் அவைவெளித் தோன்றாத தணிப்புக்குப் பெருமளவில் உள்ளாக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ் வருமானம் கொண்ட மாணவரின் பிறழ்வு நடத்தை பொருண்மிய அனுகூலங்களை எட்ட முடியாத மனமுறிவிலிருந்து மேலெழு கின்றது. தொழில் வாய்ப்புக்களை எட்டும் "செல்வாக்கு" அற்றவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

மாணவரிடத்தே காணப்படும் விழுமியப் பிறழ்வுகளையும் பிறழ்வு நடத்தைகளையும் பொருளாதார அடுக்கமைவுடன் *(Hierarchy)* தொடர்புபடுத்திப் பார்த்தல் முக்கியமானது.

போருக்குப் பின்னரான சூழலும் இனத்துவ மேலாதிக்கத்தின் நீள்கரங்களும், தாம் இழந்த கிராமங்களுக்கும் வீடுகளுக்கும் மீளச் செல்ல முடியாத அவலங்களும், மாணவரின் நடத்தை களிலே தாக்க விளைவுகளை ஏற்படுத்துதலை நிராகரிக்க முடியாதுள்ளது.

காணாமற் போன உறவுகளைக் கண்டறிய முடியா ஏக்கம் தொடர்கிறது. போரின் உடல், உளப்பொருள் இழப்புக்களையும் உறவினர் இழப்புக்களையும் தாங்கிக் கொள்ள முடியாத சீராக்கல் பிறழ்வுகளுடன் கற்றல் கற்பித்தலை வினைத்திறனுடன் முன்னெடுத்தல் கடினமான பணி என்பதற்குப் பதிலீடு இல்லை.

உரிய தீர்வுகள் கிடைக்குமோ என்ற எதிர் பார்ப்புத் தகர்ந்துள்ளது. சமூக நிலை குலையச் செய்யும் பேரினவாதத்தின் மீள்எழுச்சி பற்றி மாணவர் அறிந்துகொள்ளும் விரிவடைந்தவற்றை சூழலும் மனநிலையைப் பாதிப்படையச் செய்கின்றது.

மேற்கூறியவற்றின் எழுபுலத்திலேதான் சமகாலத்து ஒருசில மாணவரினதும் ஓரிரு ஆசிரியரதும் ஒழுக்கப் பிறழ்வுகளைக் கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது. எதிர் நடத்தைகளை ஒற்றைப் பரிமாணத்தில் நோக்கித் தீர்வுகளைக் கண்டறிய முடியாது. கூறப்பட்டவற்றைத் தொகுத்தும், கூர்ந்தும் நோக்கும் பொழுது மாணவரதும் ஆசிரியரதும் ஒழுக்க வீழ்ச்சியிலே பன்முகக் காரணிகள் ஊடறுத்து நுழைந்து செல்வாக்கு விளைவிப்பதைக் காணலாம்.

பொருண்மியம், சமூகம், அரசியல், பண்பாடு, நிர்வாகம் ஆகிய துறைகளில் நேர் மாற்றங்களை அல்லது அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தாது, புத்தி சொல்லலாலும் சீர்மியத் தாலும், வழிகாட்டலாலும் மாணவரை மீட்டெடுக்க முடியும் என்று கருதுதல் கற்பனாவாதத்தின் உச்ச நிலையாகவே இருக்கும்.

அத்தகைய பின்புலத்தில் அறவொழுக்கங் களைக் கற்பித்தலைக் கைவிட்டுவிட முடியாது. நடத்தை மேம்பாடுகளை உருவாக்குதலையும் புறக்கணித்து விட முடியாது.

நடைமுறைகளில் இருந்து கோட்பாட்டு ஆக்கத்தை நோக்கி நகர்ந்து செல்லல் அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றது. பிரச்சினைகளில் இருந்து மேலெழும் கருத்தாக்கமாக "மீட்புக்குரிய கல்விக் கோட்பாடு" *(Theory of Educational Recovery)* முன்வைக்கப்படுகின்றது.

மேலாதிக்கம், அரச அதிகாரம், கல்விச் செயற்பாடுகள் ஆகியவை ஒன்றிணைந்துள்ள நிலையில் ஆட்சி மாற்றங்கள் கல்வியிலும் சமூகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று கருதுதல் தவறு. ஏனெனில் ஆளுவோர் மாறுகின்றனர் ஆளும் வர்க்கம் நிலைத்த வண்ணமேயுள்ளது.

அந்நிலையில் மீட்புக்குரிய கல்வியை, ஒடுக்கப்பட்டோர், விளிம்புநிலையினர், சீர்மிகு ஆசிரியர்கள், கருத்தியல் தெளிவுள்ள மக்கள் ஆகியோர் மற்றும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டியுள்ளது. அந்த நடவடிக்கை "கல்வி மட்டும்" என்ற ஒற்றைப் பரிமாணத்தை மட்டும் கொண்டிராது பொருளாதாரம், அரசியல், பண்பாடு ஆகிய வற்றை உள்ளடக்கிய பெரும் வினைப்பாட்டுடன் இணைந்த முன்னெடுப்பாக இருத்தல் வேண்டும். அதனை வலியுறுத்துவதே மீட்புக்குரிய கல்விக்கோட்பாடு.

கட்டுரையாளர் :
கல்வியியல் துறைப் பேராசிரியர் (ஓய்வு)
பன்னூல் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சோ.சந்திரசேகரன்



# கருத்துகளின் மையமாகும் பல்கலைக்கழகக் கல்வி

1942இல் தொடங்கிய இலங்கைப் பல்கலைக்கழக முறைமையின் கடந்த 70 ஆண்டுகால வரலாற்றில், அதன் ஒரு பிரதான அம்சம், அது ஒரு பிரச்சினைக்குரிய மையமாக இருந்து வருவதுதான், இரு உதாரணங்களை மட்டும் எடுத்துக்கூறலாம். ஒன்று 1970களில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அனுமதிக் கொள்கையால் ஏற்பட்ட பிரச்சினைகள், 1942 முதல் திறமைச் சித்தியின் அடிப்படையில் மாணவர் அனுமதி சுமுகமாக நடைபெற்று வந்தது. ஆனால் 1970ஆம் ஆண்டளவில் பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் வாய்ப்புள்ள கற்கை நெறிகளில் அனுமதி பெறும் மாணவர்களில் 40 சதவீதத்துக்கும் அதிக மாணவர்கள் தமிழர்களாக இருந்தனர். இது இன வீதாசாரத்துக்கு முரணானது என்பதால், சிங்கள மாணவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படல் வேண்டும் என்பதற்காகப் புள்ளிகள் தரப்படுத்தப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. இதனால், திறமைச் சித்தி அனுமதி கைவிடப்பட்டு தமிழ் மாணவர் அனுமதியும் குறைக்கப்பட்டது.

வடபகுதியில் உள்ள தமிழ் மாணவர்கள் தாம் பாகுபாடாக நடாத்தப்படுவதாகக் கருதி விரக்தியுற்றனர். வடபகுதி அரசியலில் தீவிரவாதப் போக்குகளும் இளைஞர் இயக்கங்களும் தோன்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான அனுமதிக்கொள்கை மாற்றமே காரணம் எனப்பல ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பல்கலைக்கழகக் கல்வியும் அது தொடர்பான அனுமதிக் கொள்கை மாற்றங்களும் தேசிய அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு கடும் வாதப் பிரதிவாதத்துக்குள்ளாகி இருந்தன.

### ஜே.வி.பி. கிளர்ச்சிகள்

இரு சந்தர்ப்பங்களில் (1971, 1988-89) ஏற்பட்ட ஜே.வி.பியினரின் கிளர்ச்சிக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் தொடர்பிருந்தது. பல்கலைக்கழகங்களிலேயே இக்கிளர்ச்சிகளுக்கான ஆலோசனைகள் நடைபெற்றன; கிளர்ச்சிக்காரர்கள் சில பல்கலைக்கழகங்களை மையமாகக் கொண்டே இயங்கினர் என்ற முறைப்பாடும் இருந்தது. 1988-90 காலப்பகுதியில், இக்கிளர்ச்சியோடு தொடர்புபடுத்தி ஓராண்டு காலத்துக்கு மேலாகப் பல கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்தன என்பது வரலாறு. தற்போதும் பல்கலைக்கழக மாணவர்கள் பிரச்சினைகளுக்கு வலுவான இடதுசாரிப் பின்னணி உண்டென்பது யாவரும் அறிந்த விடயம், மாணவர்கள் புலமை சார் விடயங்களில் அன்றி அரசியல் பாங்கான விடயங்களில் அதிகம் ஈடுபடுவதாக முறையான உண்டிராமலும் பல்கலைக்கழக மாணவர் மத்தியில் மாற்று அரசியல் கருத்துக்களுக்கு அதிகம் இடமளிக்கப்படாது, ஒருகட்சி அரசியலே ஆதிக்கம் செலுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

### மாணவர்கள் கிளர்ச்சிகளின் விளைவு

1971ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் தீவிர அரசியலில் ஈடுபட்டதால் ஏற்பட்ட விளைவுகளின் காரணமாக, கிளர்ச்சிகள் அடக்கப்பட்டதும் 1972 இல் பல்கலைக்கழக முறைமை மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி, ஒரே பல்கலைக்கழக அமைப்பொன்று உருவாக்கப்பட்டு, பல்கலைக்கழகங்கள் ஒரு துணைவேந்தரின் கீழ் வளாகங்களாக இயங்கின. இவ்வளாகங்களுக்குத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். 1974 இல் ஏற்படுத்தப்பட்ட யாழ். பல்கலைக்கழகம் ஒரு வளாகமாகவே இயங்கியது. இத்தகைய அமைப்பு, ஒரு தலைமையின் கீழ் மத்திய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1978இல் புதிய பல்கலைக்கழகச் சட்டம் கொண்டு வரப்பட்டு தன்னாட்சியுடைய பல்கழலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறான புதிய அமைப்பு இன்று வரை நீடித்து வருகின்றது. மாணவர் அரசியல், அவர்கள் காட்டிய எதிர்ப்பின் காரணமாகச் சில பல்கலைக்கழகச் சீர்திருத்த முயற்சிகள் அறிமுகம் செய்யப்பட்டுப் பின்னர் அரசாங்கத்தால் கைவிடப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

1965-1970 காலப்பகுதியில் இரியகொல்ல கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1977இல் புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்ட போது, இச்சீர்திருத்தம் கைவிடப்பட்டது. 1990இல் ஜே.வி.பி கலவரம் அடக்கப்பட்ட பின்னர், பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டன. நடைமுறையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களை வைத்துக்கொண்டு, பல்கலைக்கழகக் கல்வியை விரிவு செய்ய முடியாது. அதற்குப் பிறநாடுகளில் போன்று பல்கலைக்கழகக் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கருதப்பட்டது. இந்தியாவில் இவ்வாறான ஏற்பாடு உண்டு. அங்கு 700 பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்பட்ட 35000 கல்லூரிகள் உண்டு. மாணவர்கள் இக்கல்லூரிகளிலேயே அனுமதி பெறுகின்றனர். பல்கலைக்கழகங்கள் இக்கல்லூரிகளின் பாட ஏற்பாட்டை வழங்கும், இறுதிப் பரீட்சைகளை நடாத்தும். இணைப்புக் கல்லூரிகளின் மாணவர்களுக்கான பட்டங்களைப் பல்கலைக் கழகங்களே வழங்கும். அவை முதற்பட்டக் கற்கை நெறிகளை விடுத்து உயர்பட்டக் கற்கை நெறிகளையே (முதுநிலைப் பட்டம், கலாநிதி பட்டம்) நடாத்தும். இத்தகைய முறையில் நாடெங்கும் பல்கலைக்கழகக் கல்லூரிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கும் முயற்சி இலங்கையில் 1972 இலும் பின்னர் 1992 இலும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விரு சீர்திருத்த முயற்சிகளும் இரு அரசியல் மற்றும் ஆயுதக் கிளர்ச்சிகளின் விளைவாகவும் அவற்றின் பின்னரும் மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது (1971, 1988 கிளர்ச்சிகளின் பின்னர்). இளைஞர் கிளர்ச்சிகளின் விளைவாகச் செய்யப்பட்ட இச்சீர்திருத் தங்கள் பின்னர், பல்கலைக்கழக மாணவர் காட்டிய எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் தாம், பல்கலைக்கழகங்களிலேயே அனுமதிக்கப்படல் வேண்டும். கல்லூரி முறைமை பொருத்தமானது அல்ல எனக் கோரினர். இவ்வாறு மாணவர்களின் கிளர்ச்சி களும் இலங்கையில் பல்கலைக்கழக வளர்ச்சிப் போக்கினைத் தொடர்ந்து பாதித்து வந்துள்ளன. ஜே.வி.பியின் ஆயுதம் ஏந்திய கிளர்ச்சிகள் அடக்கப்பட்டாலும், மாணவர் இயக்கங்களின் செல்வாக்கு குறைந்து விடவில்லை.

**தனியார் உயர்கல்வி**

மாணவர் இயக்கங்கள் தொடர்ச்சியாக உயர்கல்வித் துறையில் தனியார் துறையினரின் பங்கேற்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்ட வடகொழும்பு தனியார் மருத்துவக்கல்லூரியும் மாணவர் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட நேர்ந்தது. கட்டணம் அறவிடும் தனியார் உயர்கல்வி நிலையங்கள் இலாப நோக்கின் அடிப்படையில் இயங்குவன. இதனால் உயர்கல்வி வர்த்தக மயப்படுத்தப்படுகின்றது. வசதியான மாணவர்களுக்கு மட்டுமே உயர்கல்வி வாய்ப்புகள் வழங்கப்படும். இதனால் இலவசக் கல்வி என்ற நியாயத் தன்மைமிக்க ஏற்பாடு கடுமையாகப் பாதிக்கப்படும். தொழிற்சந்தை யிலும் கூட தனியார் உயர்கல்வி நிலையங்களில் பட்டம் பெறுவோர் முன்னுரிமை பெறுவர்.

மாணவர் இயக்கங்கள் இது போன்ற வாதங்களை முன்வைத்து, தனியார் துறையினர் உயர்கல்வியில் பங்கு கொள்வதைத் தடை செய்து வந்துள்ளன.

எவ்வாறாயின் இதற்கான எதிர்க்கருத்து பின்வருமாறு வெளிப்படுகின்றது. நாட்டின் பொருளாதாரத்துறையில் தனியார் துறையினரின் பங்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார முறை தாராளமயமாக்கப்பட்டு தனியார் துறையினரின் முதலீட்டுக்கு இடமளிக்கப்பட்டு விட்டது. சேவைத்துறையில், குறிப்பாக சுகாதாரத் துறையில் தனியார் பங்களிப்பு இன்று உறுதியாகிவிட்டது. வேலை வாய்ப்புகளில் 35 சதவீதம் தனியார் துறையினராலேயே வழங்கப் படுகின்றது. அரசாங்கத்துறை வேலைவாய்ப்புகள் 15 சதவீதத்துக்கு சுருங்கிவிட்டன.

உயர்கல்வித் துறையைப் பொறுத்தவரையில், பல்கலைக்கழகக் கல்வியை இதற்கு மேல் விரிவு செய்ய முடியாது. 14 பல்கலைக் கழகங்களில் 85000 மாணவர்கள் வரை பயிலுகின்றனர். ஆண்டுதோறும் க.பொ.த உ/நி தகுதிபெறும் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் இல்லை. 20000 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகின்றனர்.

உள்நாட்டில் உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெற முடியாததால் 10000 மாணவர்கள் வரை வெளிநாடுகளில் பயிலுகின்றனர். இதனால் 800 கோடி ரூபாய் வரை வெளிநாட்டுச் செலாவணி விரயமாகின்றது. இந்தியா. மலேசியா, தாய்லாந்து முதலிய வளர்முக நாடுகள் கூட தனியார் பல்கலைக்கழகங்களுக்கும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கும் இடமளித்துள்ளன.

மேலும் பொதுவுடைமை நாடான சீனாவிலும் தனியார் உயர்கல்வி நிலையங்கள் அமைந்துள்ளன. இதனால் இலங்கையிலும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு இடமளிக்க வேண்டும். அதற்கான சட்ட ஏற்பாடுகளை விரைவில் செய்ய உள்ளோம் என்பது அரசாங்கத்தின் வாதம். வளர்முக நாடுகளின் உயர்கல்விப் போக்குகள், எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் உயர்கல்வித்துறையில் வாய்ப்புக்களை விரிவு செய்ய முடியாத பிரச்சினை, உயர்கல்விக்கான கேள்வி அதிகரித்துச் செல்லும் நிலை என்பவற்றை வைத்துப் பார்க்கும் போது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மறுத்துக் கூறுவது கடினமாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்குச் சரியான பதிலைத் தராவிட்டாலும், உயர் கல்வித்துறையில் தனியாரின் பங்கேற்பையும் தனியார் மயத்தையும் கடுமையாக எதிர்க்கின்றன. இவ்விடயமும் கடுமையான வாதப் பிரதிவாதத்துக்கு உட்பட்டு விட்டது. மாணவர் எதிர்ப்பின் காரணமாக வடகொழும்பு தனியார் மருத்துவப் பல்கலைக்கழகம் நிறுத்தப்பட்டுவிட்டாலும், இன்று நாட்டில் ஏராளமான மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்கள் தோன்றியுள்ளதை மாணவர் இயக்கங்களால் தடை செய்ய முடியவில்லை.

இன்று பல இந்தியப் பல்கலைக்கழகங்கள் (காமராஜ், அண்ணாமலை போன்றன) தமது தொலைக்கல்விக் கற்கை நெறிகளை இலங்கையில் விரிவு செய்து வருகின்றன. வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கு (இலண்டன், அவுஸ்திரேலியா) ஆயத்தம் செய்யும் பல உயர்கல்வி நிலையங்கள் தோன்றி உள்ளன. பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் இயங்கும் அபிவிருத்திக் கற்கை நிலையம் (SLIDA), அக்குவினாஸ் கல்லூரி, சமூக சேவை நிறுவகம், இலங்கைத் தகவல் தொழில் நிறுவகம், அளவையியல் *(Survey)* நிறுவகம் என்பவற்றுக்குப் பட்டங்களை அந்தஸ்தைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது. அக்குழுவினால் கல்லூரி ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் அரசாங்க அல்லது அரசாங்கம் சார்ந்த *(Semi)* நிறுவனங்களாகும். மாணவர்களின் இயக்கங்கள் இந்தப் புதிய ஏற்பாடுகளுக்குப் பெரிய அளவில் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இந்த ஏற்பாடுகளின் காரணமாகப் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பற்ற க.பொ.த உ/தரக் கல்வி பயின்றோர் பல உயர்கல்வி வாய்ப்புகளைப் பெற முடிகின்றது. இதனால் பல்கலைக்கழகக் கல்வியை அரசாங்கம் விரிவு செய்வதற்கான அழுத்தங்களும் சற்று குறைந்துள்ளதாகத் தெரிகின்றது.

அத்துடன் இலவசமாக பாடசாலைக் கல்வியையும் உயர்கல்வியையும் பெற்று வந்த இலங்கைச் சமூகம், தற்போது எழுச்சி பெற்று வரும் தனியார் கல்வி நிலையங்கள் காரணமாகக் கட்டணஞ் செலுத்தப் பழகிக் கொண்டு வருகின்றது என்பதும் உண்மையே. மாணவர் இயக்கங்களின் தனியார் உயர் கல்வி பற்றிய பிரதான கண்டனம், அது பின்தங்கிய மக்களுக்கான இலவசக் கல்வி ஏற்பாட்டைச் சிதைத்து விடும்.

இலவசக் கல்வியைப் படிப்படியாக அழிப்பதற்கான முன்னேற்பாடுதான் உயர்கல்வித் துறையில் தனியார் துறையினருக்கு இடமளிப்பது என்பது மாணவர் இயக்கங்களின் வாதமாகும். அத்துடன் தனியார் துறை உயர்கல்வி வலையங்களில் கட்டணஞ் செலுத்தி ஆங்கில மொழி வழியில் கல்வி பெறுவோர், தனியார் துறையினரின் வேலை வாய்புகளில் முன்னுரிமை பெறுவர். இதனால் அரச பல்கலைக் கழகங்களில் கல்வி பெற்றுப் பட்டம் பெறுவோர் பாதிக்கப்படுவர் என்பது மாணவர் இயக்கங்கள் கருதுகின்றன.

தற்போது பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் புதிய மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் வழங்கப்படும் "தலைமைத்துவப் பயிற்சி" ஏற்பாடுகளையும் மாணவர் இயக்கங்கள் பெரிய அளவில் விமரிசித்து வந்துள்ளன. எவ்வாறாயினும் அரசாங்கம் மாணவர் இயக்கங்களின் கோரிக்கைகளுக்கும் கண்டனங்களுக்கும் செவிசாய்க்காது, தனது தனியார் மயமாக்க முயற்சிகளையும் தலைமைத்துவப் பயிற்சிகளையும் முன்னெடுத்துச் செல்கின்றது.

கட்டுரையாளர் :
கல்வியியல் துறைப் பேராசிரியர் (ஓய்வு)
பன்னூல் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* க.பழனித்துரை

# உயர்கல்விக்குத் தேவை உயர்தலைமை

அண்மையில் அகில இந்திய அளவில் துணைவேந்தர்கள் மாநாடு ஒன்று ஹைதராபாத் நகரில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு மத்திய - மாநில அரசின் நிதி பெறும் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர். அந்தக் கருத்தரங்கம் "நிதி, ஆசிரியர்கள் நியமனம் மற்றும் தன்னாட்சி" என்றத் தலைப்பில் நடைபெற்றது.

ஏறத்தாழ 170-க்கும் குறையாமல் துணைவேந்தர்கள் வந்திருந்தனர். ஒரு சிலர் மலேசியாவிலிருந்தும், நேபாளத்திலிருந்தும் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

அந்த மாநாட்டில் விவாதத்திற்கு வைக்கப்பட்ட கருத்துகள் பல. அவற்றில் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டவை - ஒன்று, நிதிப்பற்றாக்குறை, இரண்டு, ஆசிரியர்கள் நியமனம், மூன்று பல்கலைக்கழகச் செயல்பாட்டில் சுயாட்சி. இவை பற்றித்தான் அதிகமான விவாதங்கள் இருந்தன.

அந்த மாநாட்டில் பேசிய ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானோர் நிதிப்பற்றாக்குறை பற்றியும், ஆசிரியர் பற்றாக்குறை பற்றியும், சுயாட்சி செய்ய இயலாத சூழல் பற்றியும்தான் விவாதித்தனர்.

இந்தத் துணைவேந்தர்களின் கூக்குரல்களை கேட்டுக்கொண்டிருந்த நீதி ஆயோக்கின் உறுப்பினரான டாக்டர் விஜயகுமார் சுரஸ்வத், தன் உரையில் மிகத் தெளிவாக நிதானமாக நம் உயர்கல்வியின் தாழ்நிலையை அப்பட்டமாக படம்பிடித்துக் காட்டி, மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டு நம் பல்கலைக்கழகங்கள் சரிவர வழி நடத்தப்படவில்லை என்பதை எடுத்துக்கூறினார்.

தரமற்ற ஆராய்ச்சி, சமூகத் தேவைக்கு தொடர்பில்லா ஆராய்ச்சி, தகுதியில்லா மாணவர்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடமான உயர்கல்விச் சாலைகள், ஊழல் மிகுந்த நிர்வாகம், சமூகத் தணிக்கையற்ற கல்விச் செயல்பாடுகள் என அடுக்கடுக்கான பிரச்சினைகளை முன் வைத்து இந்திய உயர்கல்வி நிறுவனங்களை சீர் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதனை விளக்கினார். அந்த உரைதான் வழிகாட்டுவதாக இருந்தது.

இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் வெளிநாட்டு மாணவர்களைப் பெருமளவு ஈர்த்திருக்க வேண்டும். அதைச் செய்ய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து குறைந்தபட்சம் நம் நாட்டு மாணவர்களை வெளிநாட்டுக்கு செல்லுவதைத் தடுத்து நிறுத்தி அவர்களை ஈர்த்து இங்கு பயிலும் சூழலையாவது ஏற்படுத்தி இருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை. அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும், ஐரோப்பாவிற்கும் நம் நாட்டு மாணவர்களை உயர்படிப்புக்குச் செல்லும் சூழலை உருவாக்கியது நம் உயர்கல்வி நிறுவனங்கள்தான் என்பதை எடுத்துக்கூறி, அதன் காரணம் என்ன என்பதை கண்டறிந்து, அதைக் களைந்து பெருமளவில் நம் நாட்டு முதல்தர மாணவர்களை நம் உயர்கல்வி நிறுவனங்கள் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு மிக முக்கியக் காரணமாக அவர் கூறியது, இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான எந்த ஆராய்ச்சியும் நடைபெறுவது இல்லை என்பதுதான்.

நம் உயர்கல்வி நிறுவனங்களில் பல வசதிகள் இருந்தும் மாணவர்கள் வெளிநாட்டில் படிக்க விரும்புவதற்குக் காரணம், புதிய கண்டுபிடிப்புகளுக்கான சூழல் அங்குதான் உள்ளது என கூறுகின்றனர்.

மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் மேற் பட்டப்படிப்பிற்கு அந்த நிறுவனங்களுக்கு வரத் தயாராக இல்லை. அதிக பணம் செலுத்தி வெளிநாட்டில் படிக்க முயல்கின்றனர். இதற்கான காரணத்தை நாம் கண்டறிய வேண்டும்.

நம் உயர்கல்வி நிறுவனங்கள் கல்விக் கூடங்களில், குறிப்பாக, மாணவர்கள் வகுப்பறை யில் செய்ய வேண்டிய பணிகளை வீட்டில் செய்யச் சொல்லிவிடுகின்றனர். மாணவர்கள் வீட்டில் செய்ய வேண்டியப் பணிகளை வகுப்பறையில் ஆசிரியர்களின் துணையோடு செய்கின்றனர். இந்த முறைதான் நம் கல்வித் திட்டத்தை பாழ்படுத்தியுள்ளது.

மாணவர்களின் சிந்தனை வளர்ப்புத் திறன் வகுப்பறையில் நடைபெற வேண்டும். அந்த நிகழ்வு நம் உயர்கல்வி நிறுவனங்களில் நடைபெறுவது இல்லை. இதற்கு ஆசிரியர் வகுப்பெடுக்க வேண்டியது கிடையாது. மாணவர்களுக்கு கற்றுக்கொள்ளும் முறைமையை பயிற்றுவிப்பதுதான் ஆசிரியரின் முக்கியமான கடமையாகும்.

இந்தச் செயல்பாட்டை மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர் வகுப்பறையில் நடத்திட வேண்டும். செய்திகளையோ, புள்ளிவிவரங் களையோ, கருத்துகளையோ மாணவர்களுக்குப் பரிமாறுவது அல்ல. வகுப்பில் பயிற்சிகள் நடத்திட வேண்டும்.

மூளையைக் கசக்கிப் பிழியும் பயிற்சிகள் தந்து, மாணவர்கள் கற்றுக்கொள்வதை அவர்களுக்கு காண்பிப்பதில்தான் ஆசிரியரின் திறன் உள்ளது. ஆசிரியர் தம் அறிவை மாணவர்களுக்கு காட்டுவது அல்ல ஆசிரியப் பணி. மாணவர் களுக்கு அறிவை வளர்த்துக்கொள்ளும் முறை மையை கற்றுக்கொடுத்து, அவர்களின் ஆற்றலைப் பெருக்குவதற்கு உதவி செய்வதுதான் ஆசிரியப் பணி.

நம் நாட்டில் உள்ள உயர்கல்வி நிலையங்களில் நடத்தப்படும் ஆய்வுகளால் சமூகப் பொருளா தாரப் பிரச்னைகளுக்கு எந்தத் தீர்வும் கிடைக் காது. அவ்வளவும் வெற்றுக் காகிதங்களாகவே இருக்கின்றன.

ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு வருடத்தில் சுமார் 500 ஆய்வுப்பட்டம் வழங்கப்பட்டுள்ளதை அந்தப் பல்கலைக்கழகத்தின் சாதனையாக, அந்தப் பல்கலைக்கழக துணைவேந்தர் தன் பட்டமளிப்பு விழா அறிக்கையில் குறிப்பிட்டுப் பேசி பெருமைப்பட்டுக் கொண்டார்.

ஆனால் அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த சிறப்பு விருந்தினர் அது குறித்து ஒரு கேள்வியைக் கேட்டார். இந்தப் பல்கலைக்கழகத்தால் இந்த ஆண்டு வழங்கப்பட்ட 500 ஆய்வுப்பட்டம் பெற்றவர்களில் யாராவது ஒருவர் தான் செய்த ஆராய்ச்சியில் எதாவது ஒரு சமூகப் பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வு உள்ளது என்று கூற முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கூட்டத்தில் இந்தக் கேள்விக்கு ஒருவர் கூட பதிலளிக்கவில்லை. அந்தச் சூழலைப் பார்த்த சிறப்பு விருந்தினர், நம் ஆராய்ச்சி என்பது வெறும் காகிதப்புலிதான். அதற்குமேல் ஒன்றும் கிடையாது என்று கூறினார்.

இது நம் நாட்டில் உள்ள உயர்கல்வி நிலையங்களில் மாணவர்களின் ஆராய்ச்சி எப்படி உள்ளது என்பதைப் படம்பிடித்து காட்டியுள்ளது. இதை நாம் நம் மனதில் நிறுத்தி, இந்தச் சூழலை எப்படி மாற்ற வேண்டும் என்று திட்டமிட வேண்டும்.

நம் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் மனிதவள மேம்பாட்டுத்துறை என்பதே உருவாக்கப்படவில்லை. அப்படி உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை எந்தத் துணைவேந்தருக்கும் வரவில்லை என்பதுதான் மிகவும் வேதனையான ஒன்று. இன்றைக்கு நம் பல்கலைக்கழகங்களில் இருக்கும் கட்டமைப்பு வசதிகளையும் மனித வளத்தையும் வைத்து கொண்டே மிகப்பெரிய சமூகப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்.

நிதிக்கு அரசையே எதிர்பார்ப்பது என்பது, நம் பல்கலைக்கழகங்கள் மற்ற திசையில் இருக்கும் நிதியைப் பற்றி எந்தப் பார்வையும் இல்லாமல் இருப்பதையே உணர்த்துகின்றது. சந்தைக்குத் தேவையான ஆராய்ச்சியை நடத்த நம் பல்கலைக்கழகங்கள் தயாராக இருந்தால் நிதிப்பற்றாக்குறை கிடையாது. அதைப் பற்றிய சிந்தனை நம் பல்கலைக்கழகங்களில் இல்லை என்பதுதான் நிதர்சனம்.

அடுத்து நம் உயர்கல்வி நிறுவனங்களில் படித்து வெளியேறும் மாணவர்களில் 78 விழுக்காட்டினர் வேலைக்குத் தகுதியில்லாதவர்கள் என்று அறிக்கைகள் தொடர்ந்து தெரிவிக்கின்றன. இதனை மாற்ற நாம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அனைத்துப் பிரச்னைகளுக்கும் யாரையாவது காரணம் காட்டி நாம் தப்பித்துக்கொள்ள முனைவது நல்ல தலைமைத்துவத்திற்கு அழகு அல்ல.

இந்தியப் பல்கலைக்கழகங்களில் உலகத் தரத்திற்கு உயர்கல்வியை இட்டுச் செல்ல தகுதிவாய்ந்த தலைவர்கள் நம் பல்கலைக் கழகங்களில் இல்லை.

அறிவுத்தளத்தில் உயர்நிலையில் உள்ளவரையும், ஒழுக்கம் மற்றும் நாணயமான நடத்தையைக் கொண்டவர்களையும் பொதுவாழ்வில் கடுமையான ஒழுக்கங்களுடன் நடந்து கொள்பவர்களையும் நாம் நம் உயர்கல்வி நிறுவனங்களுக்குத் தலைவராக நியமிப்பது இல்லை என்ற கசப்பான உண்மையை நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

இன்றுள்ள சூழலில் பணம் இல்லை என்பதோ, தகுதியான ஆசிரியர்கள் இல்லை என்பதோ பிரச்னை அல்ல, நல்ல தலைமை இல்லை என்பதுதான் இன்றைய பிரச்னை.

தரமான ஆசிரியர்களை ஊழலின்றி நியமிப்பதும், தேவையான நிதியைப் பெருக்குவதும், உலகத்தரமான கல்வியை தருவதும் நல்ல தலைமைதான் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் தங்களுடைய பிரச்னைகளை மனுதாரர்கள்போல் அடுக்கி புலம்பித் தவித்தனர். அத்தனைக்கும் பதிலளிக்கும் வகையில் தேவை நல்ல தலைமை என்பதை நாசூக்காக வியஜ்குமார் சுரஸ்வத் கூறிச் சென்றது அந்த மாநாட்டில் முத்தாய்ப்புப் பேச்சாக இருந்தது.

உயர்கல்வி உயர உயர்தலைமை தேவை. அதுதான் உயர்கல்வியை உயர்த்தும். நம் அரசுத் தலைமை இதை உணருமா?

கட்டுரையாளர் :
பேராசிரியர், தமிழ்நாடு, பன்னூல் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* க.சுவர்ணராஜா

# பாடசாலை உள்ளக மேற்பார்வை குறித்த ஆசிரியர்களின் புலக்காட்சி

பள்ளி மாணவர்கள் குறிப்பிட்ட வேளையின் பல்வகைப்பட்ட அனுபவத் தொகுதியொன்றின் விளைவுக்குள்ளாகின்றனர். இந்த அனுபவம் ஒரு பறவையின் ஒலியாக இருக்கலாம். ஒரு மலராய் இருக்கலாம். வசீகரமான நண்பனொருவனாய் இருக்கலாம். ஆசிரியரின் குரலாய் இருக்கலாம். இவ்வாறு இந்த அனுபவங்கள் பல வகைப்படும்.

பள்ளி மாணவரும், பசியாகவோ, தாகமாகவோ, களைப்பாகவோ, தூக்கமாகவோ இருக்கலாம். பள்ளி மாணவர் ஒருவரல்ல. அவர்களின் தொகை 20,30 அல்லது அதற்கு மேலாக இருக்கலாம். வகுப்பறையில் உள்ள இக்குழுவினருக்கே ஆசிரியர் தெரிவு செய்த அனுபவங்களை முன்வைக்கின்றார். இது கதைத்தல் முதல் எளியதொரு செய்து காட்டல் வரை வேறுபடலாம். குறிப்பாகத் தெரிவு செய்த அனுபவம் எதுவாயிருப்பினும் பள்ளி மாணவரின் கவனத்தை ஈர்த்து பாடத்தை கவனிக்கச் செய்தலே ஆசிரியரின் மூலாதாரப் பிரச்சினையாகும். பள்ளி மாணவர்கள் ஆசிரியருடன் யாதவது செய்து கொண்டிருந்தால் கவனத்தை இழுத்து வைத்திருக்கும் பணி எளிதில் சாத்தியமாகும்.

வினைத்திறனுள்ள கற்பித்தல் நிலைபேறான கற்றலுக்கு வழிசெய்யும் படிப்படியாகக் குறிக்கப்பட்ட தகமைகளும் பொதுவான தகமைகளும் விருத்தி செய்யப்படுகின்றன. இந்த செயற்பாடு பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியுடனும் தொடர்புடையது. (தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை 1992)

மேற்கண்ட பரந்த நோக்கில் வகுப்பறைத் தொழிற்பாடுகள் நோக்கப்படல் வேண்டும். இவ்வாறு நோக்குவதற்கு பாடசாலையின் உள்ளக மேற்பார்வை என்ற நுட்பம் பொதுவாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

உள்ளக மேற்பார்வை என்பது பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், பிரிவுத் தலைவர்கள், பாடத் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், வகுப்பு பொறுப்பாசிரியர்கள் உள்ளிட்டவர்கள் அடங்கிய குழுவினரால் பாடசாலை மட்டத்தில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படும் மேற்பார்வைச் செயற்பாடாகும். இது பெரும்பாலும் பாடசாலைகளின் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மையமாகக் கொண்டதாக காணப்படும்.

உள்ளக மேற்பார்வை என்பது பாடசாலை யில் தொடர்ச்சியாக நிகழும் செய்முறையாகும். பாடசாலையின் உள்ளக மேற்பார்வை பொதுவாக பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தரமான கற்றல் - கற்பித்தல் செய்பாடுகள் வகுப்பறையில் நிகழ்வதை உறுதி செய்தல்.

2. வகுப்பறை கற்றல் - கற்பித்தல் தொடர்பான பலம், பலவீனங்களை இனங்காணல்.

3. வகுப்பறைக் கற்பித்தலில் உருவான பிரதான ஆசிரியரின் வாண்மைத்துவத்தை விருத்தி செய்தல்.

4. பரிகாரக் கற்பித்தலுக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

5. கற்றல் - கற்பித்தலுக்கான பௌதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

6. ஆசிரியரின் வினையாற்றலை கணிப்பீட்டிற் குள்ளாக்குதல்.

7. மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலை உறுதி செய்தல்.

8. வகுப்பறைக் கற்பித்தல் தொடர்பான பதிவுகளையும், அறிக்கைகளையும் பொருத்தமாக பேணுவதற்ககு வழிகாட்டுதல்.

9. கலைத்திட்டதிற்கு அமைவாக பாடத் திட்டம் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்தல்.

10. உயர்ந்த அடைவு மட்டத்தினை பெறு வதற்காக மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பின் அளவை உயர்த்துதல்.

பொதுவாக ஒரு வகுப்பறையில் நிகழும் கற்பித்தல் பின்வரும் நியதிகளைக் கொண்டிருக்க வேண்டுமென ஆய்வுகள் கூறுகின்றன. அவை:

1. மாணவர்களை சிறந்த பிரசைகளாக மாற்றுவதற்கான செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

2. கற்பித்தல் சூழமைவை பெறுமதிமிக்கதாக மாற்றியமைத்தல்.

3. சட்டங்கள், ஒழுங்கு விதிகளை விழுமிய ரீதியான நீதிசார்ந்த நெறிமுறைகளை மாணவர்கள் பின்பற்றும் வகையில் முன்மாதிரியான செயற்பாடுகளை வகுப்பறைக் கற்பித்தலுடன் இணைத்தல்.

4. தாம் கற்பிக்கும் பாடத்தை நிபுணத்து வத்துடன் முன்வைத்தல்.

5. வகுப்பறைச் செயற்பாடுகளை ஏற்கெனவே திட்டமிட்டு, ஒத்திகைபார்த்து நடை முறைப்படுத்தல்.

6. கலைத்திட்ட உள்ளடக்கம் மற்றும் குறிக்கோள்களை பாடங்களில் அர்த்த முள்ள கற்றல் செயற்பாடுகளாக மாற்றுதல்.

7. மாணவரின் கற்றல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பலவகையான தொழிநுட்பங்களைப் பிரயோகித்தல்.

8. மாணவரின் முன்னேற்றம் பற்றிய தகவல் களைச் சேகரித்தலும், தொடர்ச்சியான ஊக்குவிப்பும்.

9. மாணவர்களை தொடர்ச்சியாக கணிப்பீடு செய்தல்.

10. தொடருறு காலம் முழுவதும் ஆசிரியர் கற்பிப்பவராகவும், கற்பவராகவும் இருத்தல்.

மேற்படி அமையும் கற்பித்தலுக்கான நியதிகள் பொருத்தமாக நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா? என்பதை உறுதிப் படுத்துவதை உள்ளக மேற்பார்வை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

பொதுவாக பாடசாலையில் உள்ளக மேற் பார்வையின் போது பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். அவையாவன :

1. திட்டமிடலும் ஆயத்தமும்.
2. போதனைகள்சார் ஒழுங்கமைப்பு.
3. போதனைசார் முன்வைப்பு.
4. பொருத்தமான வகுப்பறைச்சூழல்.
5. மாணவர்களை ஊக்குவித்தல்.
6. பதிவுகளும் அறிக்கையிடலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மாணவர் அடைவு மட்டக் கணிப்பீடு.

8. வகுப்பறை விசேட செயற்றிட்டங்கள்.

*பாடசாலை உள்ளக மேற்பார்வையில் கட்டாயம் இடம்பெற வேண்டிய விடயங்களாவன:*

1. உள்ளக மேற்பார்வை முன்னரே திட்டமிடப்பட்டதாகவும், முன் அறிவிப்பு செய்யப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

2. உள்ளக மேற்பார்வை என்பது மேற்பார்வை செய்யபவரும், மேற்பார்வைக்கு உள்ளாகுபவரும் பரஸ்பர வாண்மை விருத்தியை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. உள்ளக மேற்பார்வையில் ஈடுபடும் ஆளணியினர், அவர்களின் தகுதி, அனுபவம் என்பன பற்றி மேற்பார்வைக்கு உட்படுவோர் அறிந்திருக்க வசதி செய்திருத்தல் வேண்டும்.

4. உள்ளக மேற்பார்வையின் ஊடாக தரமான கற்றல்-கற்பித்தலுக்கு மேலும் வழங்கப்பட வேண்டிய வசதிகள், பயிற்சிகள், தரமான உள்ளீடுகள் தொடர்பான தரவுகளை திரட்டுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

5. உள்ளக மேற்பார்வை மேற்பார்வைக்கு உள்ளாகுபவர்கள் விரும்பி அழைக்கப் படும் ஒன்றாகவும் அமைதல் வேண்டும்.

6. உள்ளக மேற்பார்வையின் ஊடாக குறைகளை மட்டும் துருவித் துருவி ஆராய்வதாக இல்லாமல், குறைகளுக்கான காரணங்கள், நிறைவாகக் காணப்படும் விடயங்கள் என்பவற்றை தேடியறிதலாக இருத்தல் வேண்டும்.

7. உள்ளக மேற்பார்வை மேற்பார்வை யாளருக்கு உள்ளாகுபவருக்கு உடனடிப் பின்னூட்டலை பெறக்கூடிய வாய்ப்பைத் தருவதாக இருத்தல் வேண்டும்.

8. உள்ளக மேற்பார்வையின் ஊடாக, பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்திக்குத் தேவையான தரவுகளை திரட்டுவதற்குரிய ஏற்பாடுகள் முன்னரே திட்டமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

9. உள்ளக மேற்பார்வையின் ஊடாக ஆசிரிய ஆளணியினர் மேற்பார்வை தொடர்பான பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படல் வேண்டும்.

***பாடசாலை உள்ளக மேற்பார்வையாளர் கொண்டிருக்க வேண்டிய திறன்கள்.***

1. உன்னிப்பாக செவிமடுத்தல்.

2. இலகுவாக அணுகக் கூடியவராக இருத்தல்.

3. தெளிவான இலக்குடையவராக இருத்தல்.

4. வெளிப்படைத்தன்மை கொண்டவராக இருத்தல்.

5. அதிகாரப் பகிர்வில் விருப்பமுடைவராக இருத்தல்.

6. பொறுப்பேற்கும் தன்மை கொண்டிருத்தல்.

7. யதார்த்தவாதியாக இருத்தல்.

8. எதையும் மாற்றமுடியும் என்ற நம்பிக்கை கொண்டிருத்தல்.

9. மற்றவர்களின் அழுத்தங்களை குறைக்க உதவுதல்.

***உள்ளக மேற்பார்வை தொடர்பாக பாடசாலை ஆசிரியர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் சில பின்வருமாறு:***

1. உள்ளக மேற்பார்வையாளர்கள் பலர் உயர்ந்த தொடர்பாடல் திறன் குறைந்தவர்களாக உள்ளனர். பெரும்பாலான உள்ளக மேற்பார்வையாளர்கள் தமது தொடாபாடலின் ஊடாக மேற்பார் வைக்குட்படுபவர்களை எரிச்சலடையச் செய்தல்.

அவர்களின் கருத்துக்களை கேட்காமல் தமது கருத்தினை நிலைநாட்ட முயலுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மாணவர்களின் முன்னிலையில் அவமானப்படுத்தல்.

* மேற்பார்வை பட்டடியலில் உள்ள விடயங்களை மட்டும் தேடுதல். ஏனைய விடயங்களைப் புறக்கணித்தல்.

* அவசரப்படுதல்.

* புரியாத மொழியில் உரையாடுதல்.

* பாடவிடய நிபுணத்துவமின்றி கருத்துக்களை முன்வைத்தல்.

* சிறுபிழைகளையும் பெரிதுபடுத்தல்.

இவை போன்ற ஆரோக்கியமற்ற நிலைமைகளை உருவாக்குகின்றனர் என ஆசிரியர்கள் கருத்துரைக்கின்றனர்.

2. உள்ளக மேற்பார்வையாளர்கள் பலர் மாற்றங்களை உள்வாங்காதவர்களாக உள்ளனர். இதனால் மேற்பார்வைக்குட்படுபவர்களின் ஆக்கபபூர்வ தன்மையை கவனிக்காதிருத்தல்

* புதிய மாற்றங்களை உட்புகுத்தத் தயங்குதல்.

* மரபு ரீதியான விடயங்களுக்கே அதிக அழுத்தம் கொடுத்தல்.

* மரபுரீதியான ஆசிரியாகளை மட்டும் முன் மாதிரியாக கொண்டு ஏனையோரை வழிப்படுத்தல்.

* கற்பித்தலில் நவீன தொடர்பாடல் சாதனங்களை பயன்படுத்துதல் தொடர்பாக எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தல்

* அவர்களின் சந்தேகங்களுக்கு உரிய விடை அளிக்காது மழுப்புதல்

இவை போன்ற சிக்கல்களையும் உருவாக்குகின்றனர் எனவும் ஆசிரியர்கள் கருத்துரைக்கின்றனர்.

3. உள்ளக மேற்பார்வையாளர்கள் பலர் பரஸ்பரம் மதிப்பளிக்காதவர்களாக உள்ளனர். இதனால் மேற்பார்வைக் குட்படுபவர்களின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடுதல்

* அவர்களின் சேவையின் பெறுமதியை மதிக்காது விடுதல்

* வயது, அனுபவம், தொழில்வாண்மை என்பவற்றை கருத்திற் கொள்ளாது நடத்தல்

* அவர்களின் கருத்துக்களை ஆலோசனைகளை புறக்கணித்தல்

இவை போன்ற செயற்பாடுகளின் மூலமும் மேற்பார்வைக்குட்படுபவர்கள் மத்தியில் தொழில் விரக்தி,சலிப்பு நிலை போன்றவற்றை உருவாக்கி விடுகின்றனர்.

4. உள்ளக மேற்பார்வையாளர்கள் தமது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மட்டும் மேற்பார்வை வழிகாட்டலை வழங்குகின்றனர்.

ஆய்வு ரீதியான முடிவுகள் மற்றும் கல்வி கொள்கை மற்றும் நடைமுறை தொடர்பாக காலத்திற்கு காலம் வெளிவரும் சுற்றுநிருபங்கள் என்பவற்றை கவனத்திற் கொள்ளாது மேற்பார்வைக்குட்படுபவர்களுக்கு ஆலோசனை வழங்க முற்படுகின்றனர். இதனால் மேற்பார்வையாளருக்கும், மேற்பார்வைக்கு உட்படுவோருக்கும் இடையில் பல்வேறு முரண்பாடுகள் எழுகின்றன. இவ்வாறு எழும் முரண்பாடுகள் உடனே தீர்வு செய்யப்படாமல் பல்வேறு வடிவங்களில் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு பழிவாங்கல்களாக இடமாற்றங்களாக மாற்றமடையும் நிலைகளும் எற்படுகின்றன.


அத்துடன் உள்ளக மேற்பார்வையாளர்கள் பலர் தவறுகளை கண்டுபிடிப்பதை மட்டுமே நோக்காகக் கொண்டு செயற்படும் நிலைமையும் ஏற்படுகின்றது. உள்ளக மேற்பார்வை தொடர்பில் அறிவார்ந்த புரிதலும் விளக்கமும் நடைமுறைக்கு ஏதுவான பிரயோக அம்சங்களும் கொண்டிருத்தல் அவசியமாகின்றது.

கட்டுரையாளர் :
முதுநிலை விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கி.புண்ணியமூர்த்தி



# பிரச்சினைகளைத் தீர்ப்பவராக ஆசிரியர்

ஒரு ஆசிரியரின் திறன்கள், நடத்தைப் பண்புகள் மாணவரில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துவன. மாணவர் முழுவதுமாக ஆசிரியரையே நம்புகின்றனர் ஆசிரியர் பிழையாகக் கூறுவதை நம்பும் மாணவர் சரியாகக் கூறும் தாயை நம்ப மறுக்கின்றார். இந்த நம்பிக்கையை ஆசிரியர்கள், அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆசிரியர்கள் கவனம் செலுத்தாமை பாரிய குறைபாடாகக் கல்வியியலாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆசிரியர்கள் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுடன் மாத்திரம் தம்மை வரையறுத்துக்கொள்வதால் மாணவர்கள் தமது பிரச்சினைகளை, ஆசிரியர்களிடம் பகிர்ந்துகொள்வதற்குத் தயங்குகின்றனர். நடைமுறையில் ஆரம்ப வகுப்பு மாணவர்களைவிட, இடைநிலை வகுப்பு மாணவர்கள் அதிகளவு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குடும்பம் தொடர்பான பிரச்சினைகள் (உடலியல், உளவியல் சார்ந்த பிரச்சினைகள்)

* கலைத்திட்டம் தொடர்பான பிரச்சினைகள் (பாடத் தெரிவு, பாடநெறித் தெரிவு, சில பாடங்கள் கஷ்டமானவை எனக் கருதுதல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்),

* கட்டிளமைப் பருவத்தில் தோற்றம் பெறும் பிரச்சினைகள் (காதல், பாலியல் இச்சைகள், மனவெழுச்சிகளைக் கட்டுப் படுத்த முடியாமை, உடலியல் மாற்றங்கள், போதைவஸ்துப் பாவனை, சமவயதுக் குழுக்கள்)

* தொழிநுட்ப முன்னேற்றம் காரணமாக உருவாகும் பிரச்சினைகள் (மலினமான ஆபாசப் படங்கள், வரையறையற்ற வகையில் தொலைக்காட்சி பார்த்தல், அத்துமீறிய கைபேசிப் பாவனை, முறைகேடான இணையப் பாவனை)

* பல்வேறு இயற்கை, செயற்கை அனர்த்தங் களின் காரணமாக உருவாகும் பிரச்சி னைகள் (சுனாமி, வெள்ளம், யுத்தம்),

* சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினைகள் (உடலியல் சார்ந்த துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், மனவெழுச்சி சார்ந்த துஷ்பிரயோகம், உழைப்புச் சுரண்டல் தொடர்பான துஷ்பிரயோகம், கவனியாது விடுதல் தொடர்பான துஷ்பிரயோகம்,யுத்தங்களில் ஈடுபடுத்துதல்)

* தொழில் சந்தை தொடர்பான பிரச்சினைகள் ( இயல்பூக்கங்கள், தொழில் தெரிவுகள், வேலை வாய்ப்புக்கள், வேலைவாய்ப்புக் குப் பொருத்தமான பாட, பாடநெறித் தெரிவுகள்)

மேற்குறிப்பிட்ட பல பிரச்சினைகளுக்கு மாணவர்கள் முகங்கொடுக்கின்றனர். இச் சந்தர்ப்பங்களில் ஒரு ஆசிரியர் தனது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பவராக எவ்வாறு தொழிற்படலாம் என சிந்தித்தல் வேண்டும்.

ஆசிரியர் இதற்கு தான் ஒரு பயிற்சி பெற்ற ஆலோசகராக இருக்க வேண்டிய அவசியமில்லை. நடைமுறையில் ஒரு வழிகாட்டலுக்குப் பொறுப்பான ஆசிரியர்தான் மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல் வேண்டும் என்னும் மனப்பாங்கில் பல ஆசிரியர்கள் காணப்படு கின்றனர். அதற்குத் தேவையான பயிற்சியைத் தாம் பெறவில்லை என்கின்றனர்.

ஆனால் அவர்கள் தமது ஆசிரியர் பயிற்சியின் போது அல்லது கல்விமாணிப் பாடநெறியைப் பின்பற்றும்போது பெற்ற பயிற்சியைக் கொண்டு அல்லது பட்டப் பின்படிப்புக் கல்வி டிப்ளோமாப் பயிற்சியின் போது பெற்ற அனுபவங்களைக் கொண்டு அல்லது நடைமுறை வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகளைத் தீரத்ததன் மூலம் தாம் பெற்ற அனுபவங்களைக் கொண்டு அல்லது வழிகாட்டல் ஆலோசனை தொடர்பான அறிவினைப் பெற்றவர்களுடன் உரையாடுவதன் ஊடாகப் பெற்ற அனுபவங்க ளைக் கொண்டும் இப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். இதற்காகப் பிரயோகிக்கத்தக்க சில நுட்பங்கள் நமக்கு உதவியளிக்கும் நோக்கில் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

**1. அவதானம்**

குறிக்கோளுடன் உற்று நோக்குதல் அவதானம் எனப்படும். இது மிக இலகுவானதும் எளிமையானதுமான ஒரு முறையாகும். இதனை பிரச்சினை தீர்ப்பதற்கான ஒரு ஆரம்பச் செயற்பாடாகவும் கொள்ள முடியும். முதலில் நீங்கள் உங்களது அவதானத்தை மாணவர் தொடர்பில் விரிவுபடுத்திக்கொள்ளுதல் வேண்டும். பிரச்சினைக்குரியவராக நீங்கள் கருதும் மாணவரை முதலில் உற்று அவதானித்தல் வேண்டும். அவர் ஆடை அணிந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை, காலணிகளை அணிந்துள்ள முறைமை, முகத்தோற்றம், அணிந்துள்ள ஆபரணங்கள், தலை சீவியுள்ள முறைமை, அவரது வேறு நடத்தைக் கோலங்கள் போன்றவற்றை உற்று அவதானித்தல் வேண்டும். ஆனால் இந்த அதானிப்பு மறைமுகமாக அமைதல் பொருத்த மானதாகும்.

## 2. ஏற்றுக்கொள்ளல்

ஆசிரியரை நாடி ஒரு மாணவர் வரும் போது ஆசிரியர் அதிகார தோரணையை வெளிப்படுத்துவதை நாம் காண்கிறோம். அவரை நிற்க வைத்தே பேசுகிறோம். ஒருமையிலேயே அழைக்கின்றோம். இது தொடர்பில் ஒரு ஆசிரியர் கூறும்போது "அதிகமாக இடம்கொடுத்தால் தலைக்குமேல் போய்விடுவார்கள் அவர்களை வைக்க வேண்டிய இடத்தில்தான் வைக்க வேண்டும்" என்றார்.

ஆனால் வெளிநாடுகள் சிலவற்றில் ஒரு ஆசிரியரை நாடி ஒரு மாணவர் வரும்போது ஆசிரியர் இருக்கையிலிருந்து எழுந்து சென்று அவரை அழைத்து வருவதை நாம் காண்கின்றோம். இந்த ஏற்றுக்கொள்ளும் தன்மை நம்மில் அவருக்கு உயர்ந்த மதிப்பை ஏற்படுத்துமல்லவா? இதன் மூலம் அவரது வெட்கம், பயம் போன்றவை அகல்வதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

சில வேளைகளில் மாணவர் வந்து காத்திருக்க, ஆசிரியர் தொடர்ச்சியாக கைபேசியில் உரையாடுவதை அல்லது வேறு ஆசிரியர்களுடன் கதைத்துக்கொண்டிருப்பதை அல்லது பத்திரிகை வாசிப்பதை அல்லது விடைத்தாள்களைத் திருத்துவதை நாம் அவதானிக்கின்றோம். இது மாணவரிடம் ஆசிரியர் பற்றிய பிழையான மனப்பான்மையைத் தோற்றுவிக்கும்.

மாறாக மாணவரைக் கண்டதும் நமது கைத்தொலைபேசியை அணைத்துவிட்டு அவரை வரவேற்று அவரது பிரச்சினைகளைச் செவிமடுப் போமானால் நாம் அவரை மரியாதையாக ஏற்றுக்கொள்வதாகக் கருதுவார். பிரச்சினைக் குட்பட்ட மாணவரை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ளுதல் ஆசிரியரின் கடப்பாடாகும். இது பெற்றோர் தமது பிள்ளை களில் வைக்கும் அன்புக்குச் சமமானதாகும். அத்துடன் ஒவ்வொரு பிள்ளையையும் ஆசிரியர் சமமான கண்ணோட் டத்துடனேயே நோக்குதல் வேண்டும்.

## 3. கண்தொடர்பும் விசாரணையும்

ஒரு ஆசிரியர் மாணவரைக் கவனியாது வேறெங்கோ பார்வையைச் செலுத்துவதற்குச் சமமானதாகவே மாணவரை நேருக்கு நேர் தொடர்ச்சியாகப் பார்த்துக்கொண்டிருப்பதும். எனவே தொடர்ச்சியாக மாணவரைப் பார்த்துக் கொண்டிருப்பதையும் தவிர்த்தல் வேண்டும்.

அத்துடன் தவறு செய்ததாகக் கருதப்படும் மாணவரை நம்மில் சிலர் ஏனைய மாணவர் களுக்கு முன்னிலையில் வைத்து விசாரிப்பதை காண்கிறோம். குறிப்பாகக் கட்டிளமைப் பருவத்து மாணவர்களை எதிர்ப் பாலாரின் முன்னிலையில் விசாரிக்கும்போது அவர்கள் பாரிய மனக்கிலேசத்துக்குட்படுவர். சிலர் இப் பாதிப்பால் தற்கொலை செய்த சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் நாம் மாணவர்களை தனியி டத்தில் வைத்து விசாரித்தலே பொருத்த மானதாகும்.

தனியிடத்தில்கூட சில ஆசிரியர்கள் மாணவ ருக்கு முன்னால் நேருக்கு நேர் அமர்ந்திருந்து மாணவரை முகத்துக்கு முகம் பார்த்துக் காவல் நிலையத்தில் விசாரணை நடாத்துவதுபோல் விசாரிப்பதை நாம் காண்கிறோம். இது மாணவரிடம் ஒருவித பீதியையே உருவாக்கும். பொலிஸ் நிலையத்தில் அல்லது நீதிமன்றத்தில் குற்றவாளியிடம் வாக்குமூலம் பெறும்போது இம்முறை கையாளப்படும். இது குற்றவாளியிடம் பயத்தை உருவாக்கி அவர் பொய்கூறாமல் இருப்பதற்காகப் பயன்படுத்தும் முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரது கண்களுக்கு அதிகளவு சுதந்திரம் தரும் வகையிலேயே ஆசிரியர் அமர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஆசிரியர் அமர்ந்திருக்கும் இடம் ஒளி நிறைந்ததாகவும் அமைதியான சூழ்நிலையைக் கொண்ட தாகவும் சாளரத்துக்கு வெளியே அழகான இயற்கைக் காட்சிகள் நிறைந்ததாகவும் அல்லது பாட சாலைத் தோட்டம், அல்லது மலர்த் தோட்டத்தை மாணவர் பார்க்கக்கூடிவாறு அமர்ந்திருத்தல் வேண்டும் அல்லது வெறுமையான வானத்தையாவது அவன் பாரக்கக்கூடியவாறு ஒழுங்கமைத்தல் வேண்டும்.

அவ்வாறான வசதிகள் எதுவும் இல்லையாயின் சுவர்களில் அழகான படங்களைக் கொண்ட நாட்காட்டியையாவது *(Calendar)* மாட்டி விடலாம். அது தொடர்பில் ஒரு ஆசிரியர் கருத்துக்கூறும்போது "பாடசாலையில் மாணவர் களது வகுப்பறைகளுக்கே இடமில்லை. தனியறைக்கு எங்கு செல்வது" என்றார். இச் சந்தர்ப்பத்தில் வழிகாட்டல் ஆலோசனைக்கான அறையைப் பயன்படுத்தலாம். வழிகாட்டல், ஆலோசனைக்கான அணுகுமுறைகள் குறித்த அக்கறையும் நுட்பங்களும் ஆசிரியருக்கு இருக்க வேண்டும். மேலும் பொறுப்பான ஆசிரியரது உதவி அல்லது ஆலோசனைகளைக்கூடப் பெற்றுக்கொள்ளலாம்.

### 4. அமைதியைக் கலைத்தல்

ஆசிரியருடன் ஒரு மாணவர் தனது பிரச்சினைகள் தொடர்பில் முதன் முதலில் பேச வரும்போது எவ்வாறு பேச்சை ஆரம்பிப்பது என்பது தொடர்பில் அவரிடம் பயம், வெட்கம், கூச்சம் போன்ற உணர்வுகள் காணப்படலாம். இச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் தானாகவே பேச்சை ஆரம்பிப்பது குறிப்பிட்ட மாணவருக்கு உதவுவது போல் அமையும்.

எனினும் நேரடியாகப் பிரச்சினை தொடர்பில் பேசாமல் பொதுவாக காலநிலை தொடர்பிலோ அல்லது ஊர் நிலமைகள், நாட்டு நடப்புக்கள் தொடர்பிலோ அல்லது பொதுவான பாடசாலை நிகழ்வுகள் தொடர்பிலோ பேச்சை ஆரம்பிக்க லாம். ஆனால் இவை யாவற்றையும் ஒரே தடவையில் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டு செல்லுதல் பொருத்தமானதல்ல. அத்துடன் ஆசிரியர் பேசுவதற்கு அவசரப்படவும் கூடாது. தொடர்ச்சியாகப் பேசாமல் இடையிடையே அரை நிமிடமளவில் அமைதியாக இருப்பதும் அவசியமாகும். இது மாணவரைப் பேசுவதற்குத் தூண்டுவதாக அமையும்.

மாணவர் தொடர்ந்தும் அமைதியாக இருந்தால் "நீங்கள் ஏன் என்னிடம் வர விரும்பினீர்கள்" அல்லது "நான் உங்களுக்கு எவ்வாறான உதவியை வழங்கலாம்" என்பது போல் ஆசிரியரே மாணவருடன் உரையாடலை ஆரம்பிப்பதற்கு ஊக்கலை வழங்கலாம். அதைத் தொடர்ந்தும் அவர் அமைதி பேணினால் ஆசிரியர் தன்னைப் பற்றிய நம்பிக்கையை மாணவரிடம் உருவாக்கும் வகையில் உரை யாடுதல் வேண்டும். குறிப்பாக மாணவரைப் பற்றிய விபரங்கள் இரகசியமாகப் பேணப்படும் என்ற நம்பிக்கையை அவரிடம் ஏற்படுத்துதல் வேண்டும். ஆனால் மாணவர் அமைதியாக இருக்கும்போது மாணவரைப் பேசுமாறு ஆசிரியர் பலாத்காரப்படுத்தக்கூடாது. மாணவர் தானாகவே அமைதியைக் கலைத்துப் பேச்சை ஆரம்பிக்கும் வகையில் ஆசிரியர் அமைதி காப்பது அவசியமாகும்.

### 5. தொனி

தனது பிரச்சினையைக் கூற வரும் மாணவரின் குரல் ஓங்கி ஒலித்தால் மாணவரது பிரச்சினை கனதியானது என்பதையும் அதனால் அவர் அதிக மனக்கிலேசத்துக்குட்பட்டுள்ளார் என்பதையும் ஆசிரியர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அதேபோல் தொனி வேறுபாட்டை யும் அவதானித்தல் வேண்டும்.

குறிப்பாக சாதாரணமாகப் பேசும்போது சொற்களிடையே காணப்படும் இடைவெளிக் குரிய நேரத்தைவிட இடைவெளி குறைவாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுமானால் அதாவது வேகவேகமாக மாணவர் பேசுகின்றார் என்றால் மாணவரது பிரச்சினை உக்கிரமானது என்பதுடன் இலகுவில் தீர்வு காணமுடியாதது மாகும் என்பதையும் ஆசிரியர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அதேபோல் மாணவர் கோபத்துடன் பேசுகிறாா என்றால் மாணவரது தொனி உயர்வானதாகவும் துக்கத்துடன் பேசினார் என்றால் மாணவரது தொனி கீழ்நிலையிலும் இருக்கும் என்பதாகவும் புரிந்துகொள்ள வேண்டும். இடையிடையே தொனி உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்குமானால் குறிப்பிட்ட மாணவர் பயத்துடன் இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

எனவே மாணவரின் தொனியின் தன்மையைக் கொண்டு மாணவரது பதகளிப்பு நிலையைப் புரிந்துகொள்ள முடியும். ஆசிரியரும் மாணவருடன் உரையாடும்போது தமது தொனியை மிகத் தாழ்ந்த நிலையிலேயே வைத்திருத்தல் வேண்டும். மாணவர் தமது பிரச்சினையைக் கூற ஆரம்பித்தால் ஆசிரியர் செவிமடுப்பதிலேயே கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். மாணவரது பேச்சின் ஓட்டத்தைத் தடை செய்வதாக ஆசிரியரின் செயற்பாடு அமைதல் கூடாது.

ஆசிரியரின் தொனி தேவைக்கு அதிகமானதாக அல்லது வேகமானதாக அல்லது கடுமையானதாக இருந்தால் மாணவர் பயப்படக்கூடும். தெளிவற்ற குரலில் பேசினாலும் மாணவரின் கண்களைப் பார்த்துக்கொண்டே பேசினாலும் ஆசிரியர் தொடர்பில் மாணவர் வெறுப்படையும் சூழ்நிலை ஏற்படலாம். எனவே மத்திய குரலில் பேசுவதற்கு ஆசிரியர் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மாணவரைப் பொறுத்தவரையில் ஆசிரியர் தேவையான விடயங்களை மாத்திரம் பேசுகின்ற உயர்ந்த குணப் பண்புகளைக் கொண்ட ஒரு தலைமைத் துவத்தை வகிக்கின்ற ஒருவர் என்றவாறாக அமைதல் வேண்டும்.

### 6. வெளிப்படுத்தலுக்கான அணுகுமுறை

பிரச்சினைக்குரிய மாணவரின் பிரச்சினையைத் தீர்ப்பதானால் மாணவரைப் பிரச்சினையின் திசையை நோக்கி நகர்த்திச் செல்லுதல் வேண்டும். அதற்கு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது. அதாவது மாணவர் தமது பிரச்சினை பற்றி விபரிக்கும்போது பிரச்சினையுடன் தொடர்புபடாத விடயங்களைக்கூட விபரிக்க முற்படுவார். இதனால் பிரச்சினைக்குரிய தீர்வை அடைய முடியாது போய்விடலாம். இச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் "ஆம்" அதற்குப் பின்னர் என்ன நடந்தது, "உங்களது தொடர்பை அறிந்ததும் பெற்றோர் என்ன சொன்னார்கள்", "ம்,ம்" என்றவாறு ஆசிரியர் பிரச்சினையின் திசையை நோக்கி நகர்ந்து செல்ல வழிப்படுத்துதல் வேண்டும். அதற்கிடையில் ஆசிரியர் எந்த வினாக்களையும் கேட்கக் கூடாது.

பிரச்சினைக்குரிய மாணவர் விடயத்திற்கு வெளியே சென்றால் மாணவரது மனம் புண்படாதவாறு மீண்டும் விடயத்திற்கு அழைத்து வருவதற்கான திறனை ஆசிரியர் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். பிரச்சினைக்குரிய மாணவர் கூறும் ஒவ்வொரு விடயத்தையும் கவனமாகச் செவிமடுப்பதுடன் முக்கியமானவற்றை நினைவிலிருத்திக் கொள்ளுதல் வேண்டும். செவிமடுக்கும்போதே பிரச்சினையைத் தீரப்பதற்கு அவதியுறுதல் கூடாது. இச் சந்தர்ப்பத்தில் பிரச்சினையைத் தெளிவாக விளங்கிக்கொள்வது மாத்திரமே இடம்பெறுதல் வேண்டும்.

வினைத்திறன்மிகு செவிமடுத்தல் எந்தளவு முக்கியமோ அந்தளவுக்குத்தான் செவிமடுப்பது தொடர்பில் குறிப்பிட்ட மாணவருக்குப் புலப்படுத்துவதும் அவசியம். இச் சந்தர்ப் பத்தில் குறிப்பிட்ட மாணவரது சொற்களை மாத்திரம் செவிடுமடுப்பதுடன் நின்றுவிடாமல் சொல்சாரா தொடர்பாடலிலும் ஆசிரியர் கவனம் செலுத்துதல் வேண்டும். கண் தொடர்பாடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளுதல், குறியீட்டுப் பயன்பாடுகளை வெளிப்படுத்துதல் (தலையாட்டுதல்) போன்றவற்றையும் பயன்படுத்தலாம். சொல்சார் தொடர்பாடலை மேற்கொள்ளும்போது "ம்", "ஆம்" ஆகிய சொற்களைப் பயன்படுத்துவது பொருத்தமானதாகும்.

**7. ஒட்டுணர்வு**

பிரச்சினைக்குரிய மாணவர் பெற்ற அனுபவத்தை அல்லது துன்பத்தைத் தான் பெற்ற அனுபவமாக அல்லது துன்பமாகக் கொள்வதை ஒட்டுணர்வு எனலாம். இது அனுதாபம் என்னும் சொல்லிலிருந்து மாறுபடும். ஆசிரியர் தொடர்பான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப இது உதவுவதாக அமையும். இதன் மூலம் பிரச்சினைக்குட்பட்டவரின் மன எண்ணத்தைப் புரிந்து கொள்வதற்கும் அவருடன் தொடர்பாட லைக் கட்டியெழுப்புவதற்கும் அவரது பிரச்சினையைத் தான் புரிந்துகொண்டதை வெளிப்படுத்துவதற்கும் உதவுவதாக அமையும்.

ஆசிரியர், தனது ஒட்டுணர்வை வெளிப்படுத்தும்போது பிரச்சினைக்குரிய மாணவர் கூறுபவற்றை மீண்டும் கூறும் நிலமை ஏற்படும். உதாரணமாக "நடந்த சம்பவத்தை என்னால் மறக்க முடியாதுள்ளது" என மாணவர் குறிப்பிட்டால் ஆசிரியரும் "ஆம் உண்மையிலே மனதைப் பாதித்த சில சம்பவங்களை மறப்பது சிரமமானதுதான்" எனத் தெரிவித்தலைக் குறிப்பிடலாம். அத்துடன் "நடந்தவற்றை மறந்துவிடுவதுதான் நல்லது. அது நிறைவேறவில்லை, அது தொடர்பில் பேசும்போது நீங்கள் எவ்வளவு துன்பமடைகிறீர்கள். எனவே அதை மறந்துவிடுவதுதான் நல்லது" என்றவாறு ஆசிரியர் தனது உரையாடலை வளர்த்துச் செல்லுதல் வேண்டும்.

**8. மதிப்பளித்தல்**

பிரச்சினைக்குட்பட்ட மாணவர்களுக்கு ஆசிரியர் நிபந்தனையற்ற வகையில் உடன்பாடான மதிப்பளித்தல் அவசியமாகும். இச் சந்தர்ப்பத்தில் அவர்களின் சாதி, குல, மத வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளுதல் கூடாது. அவர்களைக் கருணையுடனேயே நோக்குதல் வேண்டும். அவர்கள் கூறும் விடயங்களை மிகவும் இரகசியமாகப் பேணுதல் வேண்டும். மாணவர்களுடன் எந்தவித தனிப்பட்ட தொடர்புகளையும் பேணுதல் கூடாது. அவர்களிடம் எந்தவித தனிப்பட்ட இலாபங்களையும் எதிர்பார்த்தல் கூடாது. மாணவர்கள் அசௌகரிய நிலைக்குட்படும் வகையிலோ அகௌரவத்துக்குட்படும் வகையலோ கடுமையாக நடந்துகொள்ளுதல் கூடாது.

**9. வினாக் கேட்டல்**

பிரச்சினைக்குட்பட்ட மாணவரிடம் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆசிரியர் வினாக்கேட்கும் நுட்பத்தைப் பயன்படுத்த முடியும். சந்தர்ப்பத்துக்கேற்ற விதத்தில் சரியான சொற்களைப் பயன்படுத்தி வினாக்கைளைக் கேட்டல் வேண்டும். பொருத்தமற்ற ஒரு வினா ஆசிரியரின் முழுமையான முயற்சியையே பாதிக்கக்கூடும். செவிமடுத்தலினூடே வினாக்களைக் கேட்டலே பொருத்தமானதாகும். கேட்கப்படும் வினாக்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப மூடிய வினாக்களாகவோ திறந்த வினாக்களாகவோ அமையலாம்.

மூடிய வினாக்களைக் கேட்கும் போது அதிகளவு வினாக்களைக் கேட்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். உதாரணமாக "உங்களுக்குப் பரீட்சை என்றால் பயமா"? எனக் கேட்கும் போது ஆம், இல்லை அல்லது சிறிதளவு என்னும் விடையே வரும். இது பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதல்ல. ஒரு வைத்தியர் நோயாளியிடம் கேட்பதுபோல் அதிகளவு வினாக்களைக் கேட்கும்போதே வெளிக்காட்டப்படும் துலங்கல்களைக் கொண்டு பொருத்தமான தீர்வுக்கு வரமுடியும். இச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் மிக அவதானமாக வினாக்களைக் கேட்டல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த வினாக்களைப் பொறுத்தவரையில் விரிவான துலங்கல்கள் வெளிப்படுத்தப்படுவதால் பிரச்சினைக்குத் தெளிவான தீர்வுகாண உதவுவதாக இருக்கும். உதாரணமாக "பாடசாலைக்குச் செல்வதற்கு ஏன் விருப்பம் இல்லாமலுள்ளது", "பரீட்சையில் தோல்விய டைந்தபோது என்ன நினைத்தீர்கள்" என்பன போன்ற வினாக்களைக் குறிப்பிடலாம்.

### 10. எதிர்வாதம்

பிரச்சினைக்குட்பட்ட மாணவர் அசாதாரணமான கருத்துக்களை வெளியிடும்போது அல்லது பரஸ்பர விரோதமான கருத்துக்களை வெளியிடும்போது ஆசிரியர் எதிர்வாதம் செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம். இது மாணவரிடம் இருக்கும் தப்பபிப்பிராயங்கள், தர்க்கரீதியற்ற கருத்துக்களைப் போக்கும் நோக்கத்தை மையமாகக் கொண்டதாக அமைதல் வேண்டும். இது மாணவருக்கு எதிரானதாகவோ அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதாகவோ அமைதல்கூடாது.

### 11. பொழிப்பு

பிரச்சினைக்குட்பட்ட மாணவர் நடந்த சம்பவங்களைக் கூறிக்கொண்டு செல்லும்போது இடையில் நிறுத்தினால் ஆசிரியர் சம்பவத்தின் சாராம்சத்தை அல்லது முக்கிய விடயங்களை மீளக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட மாணவர் மனக்கிலேசத்துக்குட்பட்டிருந்தால் தான் எதைக் கூறினோம் அல்லது எதைக் கூறவில்லை என்பது தெரியாதவனாக இருப்பார். இச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் பொழிப்பைக் கூறும்போது மாணவர் கூறியவற்றைத் தவிர்த்து கூறாதவற்றைக் கூற முயற்சிப்பார். இது குறிப்பிட்ட சம்பவத்தைத் தொடர்ச்சியாகவும் கோர்வையாகவும் கூறுவதற்கும் முன்நோக்கிச் செல்வதற்கும் உதவுவதாக அமையும்.

அத்துடன் தான் கூறியவற்றை ஆசிரியர் மிகவும் சிரத்தையுடன் செவிமடுத்துள்ளார் என்ற எண்ணத்தையும் தனக்கு இவர் உதவுவார் என்ற நம்பிக்கையையும் மாணவருக்கு ஏற்படுத்தும். பொழிப்பு பிழையானதாக அமையின் விளைவு எதிர்மறையானதாக அமையலாம்.

### 12. அறிக்கையிடல்

பிரச்சினைக்குட்பட்ட மாணவருடன் ஆசிரியர் கலந்துரையாடிய பின்னர் கலந்துரையாடலில் இடம்பெற்ற விடயங்களின் சாராம்சத்தைக் குறிப்பெடுத்தல் மிகவும் முக்கியமானதாகும். இடையிடையே குறிப்பெடுப்பதை விட இறுதியில் குறிப்பெடுத்தல் பொருத்தமானதாக அமையும். இதனால்,

* ஒவ்வொருவராக தனித்தனியே ஞாபகம் வைத்திருக்க உதவும்.
* தமது ஆலோசனையின் பேரில் மாணவரில் ஏற்படும் நடத்தை மாற்றங்களைக் கண்டறிய உதவும்.
* ஆசிரியர் தாம் பெற்ற தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு உதவும்.
* ஆசிரியர் தமது குறிக்கோள்கள் நிறைவேற்றப் பட்டனவா? என்பதைக் கண்டறிய உதவும்.

### 13. தனியாள் இடைத்தொடர்பைக் கட்டியெழுப்புதல்

ஆசிரியர் பாடசாலையின் அதிபர் மற்றும் ஏனைய ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களுடன் சிறந்த இடைத் தொடர்பைப் பேணுதல் வேண்டும். அதேபோல் பாடசாலைக்கு வெளியில் சமூகத்துடனும் சிறந்த தொடர்பைப் பேணுதல் வேண்டும். குறிப்பாக வைத்திய அதிகாரிகள் சுகாதார உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் போன்றோருடன் சிறந்த இடைத் தொடர்பைப் பேணுதல் வேண்டும்.

திறந்த மனதுடன் செயற்படுதல், ஏனையவர்களின் கருத்துக்களை எற்றுக்கொள்ளுதல், பொறுமையைக் கடைப்பிடித்தல், கோபத்தைக் கட்டுப்படுத்துதல் போன்றவை தனியாள் இடைத்தொடர்பை விருத்தி செய்ய உதவுபவையாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. முடிவுக்கு வருதல்

மாணவரின் பிரச்சினையைப் பொறுத்தே ஆசிரியர் முடிவுக்கு வருதல் வேண்டும். சில பிரச்சினைகள் ஒரு நாளில் முடிந்துவிடும். இன்னும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பல நாட்கள் தேவைப்படலாம். மீண்டும் ஒரு நாள் பிரச்சினைக்குட்பட்ட மாணவரை அழைப்பதானால் ஆசிரியர் செல்லும்போது "நான் உங்கள் பிரச்சினையை நன்கு விளங்கிக் கொண்டேன். நான் உங்கள் பக்கம்தான் உள்ளேன். மீண்டும் ஒரு நாள் நாம் சந்தித்து இப் பிரச்சினைக்கு என்ன செய்ய முடியும் எனப் பார்ப்போம்" என்றவாறு நம்பிக்கையை ஏற்படுத்தி மாணவரை அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது "நான் உங்கள் பிரச்சினையை நன்கு விளங்கிக்கொண்டேன். நாம் மீண்டும் ஒரு நாள் சந்தித்து இன்னும் பேசுவோம். இப்போது நான் சிறு, சிறு வேலைகள் தருகிறேன். அவற்றை வீட்டுக்குச் சென்று செய்து வாருங்கள்" என வரும் நாளை, நேரத்தை உறுதியாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். அல்லது "உங்களுக்கு என்னிடம் இன்னும் சொல்ல வேண்டிய விடயங்கள் இருந்தால், வரும்போது குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டு வாருங்கள். தினக்குறிப்பு மாதிரி எழுதாமல் சிறு குறிப்பு மாதிரி எழுதி வாருங்கள்" எனக் கூறலாம்

பிரச்சினைக்குட்பட்ட மாணவரிடம் ஆசிரியர் தேவைக்கு அதிகமான ஈடுபாட்டைக் காட்டுதல் கூடாது. அது எதிர்மாறான விளைவை ஏற்படுத்தும். இறுதியில் "இப்போது நீங்கள் உங்கள் பிரச்சினையை நன்கு விளங்கிக் கொண்டுள்ளீர்கள். இனிமேல் வரவேண்டிய தில்லை. அவசியமானால் மாத்திரம் வாருங்கள். நான் கூறிய செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்யுங்கள்" எனக்கூறி அனுப்புதல் வேண்டும்.

பிரச்சினைக்குட்பட்ட மாணவர் தொடர்பில் ஆசிரியரால் வழிகாட்ட முடியாத சந்தர்ப்பத்தில் அல்லது ஆசிரியர் தொடர்பில் மாணவர் அதிருப்தியடையும் சந்தர்ப்பத்தில் அல்லது தனது செயற்பாடுகளால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை என ஆசிரியர் கருதும் சந்தர்ப்பத்தில் "என்னால் உங்களுக்கு சரியாக வழிகாட்ட முடியாது என நான் நினைக்கிறேன். அதனால் வேறு சிறந்த ஒரு ஆலோசகரை நான் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். அவரால் உங்களது பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணமுடியும் எனக் கூறிப் பொருத்தமான ஒரு ஆலோசகரிடம் அனுப்பி வைத்தல் வேண்டும்."

எனவே ஒரு ஆசிரியர் தன்னால் இயலுமான வழிகாட்டல் ஆலோசனையை வழங்குவதன் மூலம் அவர் ஒரு சிறந்த ஆசிரியராகத் திகழ முடியும். அத்துடன் ஆலோசக ஆசிரியரின் வேலைப்பழுவையும் குறைக்க முடியும். மிகப் பெரியதொரு பாடசாலையில் உள்ள தனி ஒரு ஆலோசக ஆசிரியரால் பெருமளவு மாணவர் களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அதுதவிர தற்போது அனேகமான பாடசாலைகளில் சாதாரண பட்டதாரி ஆசிரியர்களே ஆலோசக ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை அவர்களில் பலருக்கு முழு நேர நேரசூசியும் வழங்கப்பட்டுள்ளது.

நீங்கள் முயற்சி செய்தால் சில ஆலோசனை நுணுக்கங்களைப் பின்பற்றினால் அவர்களை விடச் சிறந்த வழிகாட்டல் ஆலோசனையை வழங்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதுதவிர "என்னால் முடியாது" என முற்றிலுமாகத் தவிர்ப்பதைவிட இயன்றளவு உங்களது வரையறைக்குட்பட்ட வகையில் ஆலோசக வகிபாகத்தை ஏற்றுச் செயற்படுவது நல்லது. இதன் மூலம் மாணவர்களின் பொதுவான பிரச்சினைகளைத் தீர்த்து மாணவர்களை சிறந்த அடைவுமட்டத்தை நோக்கி இட்டுச் செல்ல முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கட்டுரையாளர் :
முதுநிலை விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சு.பரமானந்தம்

# நெறிபிறழ்வான மாணவர்களுக்கான வகுப்பறை முகாமைத்துவ நுட்பங்கள்

அண்மைக் காலங்களில் நாடுகளின் கல்வித்தரம் பற்றி பேசப்படுகின்ற வேளைகளில் எல்லாம் ஆசிரியர்கல்வி பற்றியும் கூடவே பேசப்பட்டு வருகின்றது. நாடுகளின் கல்வியின் தரம் விருத்திசெய்யப்படுவதற்கும் கல்வி முறைகளில் ஏற்படுத்தப்படும் சீர்திருத்தங்களும் சரியான முறையில் நடைமுறைப்படுவதற்கும் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை முழுமையாக அடைவதற்கும் ஆசிரியர்கல்வி, ஆசிரியர்களின் தொழில் வாண்மை தேவைகளுக்கேற்ப விருத்திசெய்யப்படவேண்டும் என கருத்துக்கள் கூறப்படுகின்றன.

இலங்கையின் கல்வி நூற்றாண்டு மலரில் "எந்தக் கல்வி முறையும் அதன் ஆசிரியர்களுடைய தரத்தைவிட உயர்ந்ததாக இருக்க முடியாது" எனக் குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம், இலங்கையிலும் ஆசிரியர் கல்வியின் தேவையை வலியுறுத்தி நிற்கின்றன. எவ்வாறாயினும் ஆசிரியர் வாண்மைவிருத்தி பற்றி பொதுவாகவோ, திணைக்கள அரசரீதியாகவோ, கல்வியியலாளர்கள் சிந்திக்கின்ற அளவுக்கு அல்லது வலியுறுத்துகின்ற அளவுக்கு ஆசிரியர் சமூகத்தினால் சிந்திக்கப்படுவதில்லை என்பது அனுபவ ரீதியான உண்மையாகும்.

ஒரு நாட்டின் கல்வித்தரம் உயர்த்தப்பட வேண்டுமாயின் அதனை நடைமுறைப்படுத்துகின்ற ஆசிரியர்களின் தரம் உயர்த்தப்பட வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் அதிகரித்து வருகின்ற தொழிலுக்காக ஆசிரியர்களாக வருகின்ற தொகையினருக்கு வாண்மைப் பரிமாணங்கள், அவற்றிற்கு அனுசரணையான கோலங்கள், அதிகம் தெரிந்திருக்காத நிலையில் அத்தகைய நியமங்களை அறிந்திருக்க வேண்டிய தேவை யாவும் முக்கியம் பெறுகின்றன.

இலங்கையிலும் காலத்துக்குக்காலம் ஏற்படுத்தப்பட்டு வந்த பொதுக்கல்வி புத்தாக்கங்களிலும் மறுசீரமைப்புக்களிலும் ஆசிரியர் கல்விக்கான தனியிடம் கொடுக்கப்பட்டு வந்துள்ளன. அதன் அடிப்படையில் ஆசிரியர் கல்வியில் புதிய அறிமுகங்களும் மறுசீரமைப்புக்களும் முன்மொழியப்பட்டு அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆசிரியர் கல்வி, ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பாக முன்மொழியப்பட்ட செயற்திட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்களும் விலக்கப்படவோ தீர்க்கப்படவோ வேண்டியவை. இந்த கருத்துடன் நின்று விடுகின்ற நிலையில் அவ் ஆலோசனைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு கையாளக்கூடிய வழிவகைகள் அல்லது மாற்றுத் திட்டங்கள் சார்பான நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பூகோளமயப்படுத்தப்பட்ட முறையில் அதிக கவனத்திற்கு ஆசிரியர் கல்வி உட்படுத்தப் பட்டுள்ளது. ஆசிரியர் கல்வி பற்றிய சர்வதேச கல்வியியலாளர்கள் மற்றும் அறிஞர்களது நோக்கும், சிந்தனையும் விருத்தி பெற்று வருகின்றன. இதற்கு சமாந்தரமாக உள்ளூர் கல்வியியலாளர்கள் மற்றும் அறிஞர்களது நோக்கும் சிந்தனையும் கல்வியின் தர மேம்பாட்டுக்கு உதவிசெய்கின்றன. ஆகவே நமக்கு ஆசிரியர் கல்வி தொடர்பாகவும் சமகால கல்வி தொடர்பாகவும் உலகளாவிய செல்நெறி போக்குகளுடன் எம்மை தொடர்புபடுத்திக் கொள்வது முக்கியம்.

பொதுவாக வகுப்பறை ஒன்றை முகாமைப்படுத்தும் போது எவ்வாறு ஒரு ஆசிரியர் மாணவர்களிடையே தனிப்பட்ட இடைவினைத் தொடர்பை மேம்படுத்த முடியும் என்பதனை விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். ஒரு ஆசிரியருக்கு உறுதியான முகாமைத்துவ திறன் முக்கியம். இதற்கு ஆசிரியர் மாணவர்களுடன் முறையான உறவினை மேம்படுத்த வேண்டும். ஒரு நீண்டகால இலக்கை அடைவதற்கென திட்டங்கள், அறிவு, கல்வியின் திறன்கள், ஆலோசனை, உள ஆற்றுப் படுத்தல் போன்ற விடயங்களின் ஊடாக நாம் இந்த விடயத்தைப் புரிந்துகொள்வோம்.

### 1. உறவு முறையினூடாக மாற்றத்தைக் கட்டியெழுப்புதல்

நடுத்தர பாடசாலைகளின் ஆசிரியர்கள் அதிதீவிரமான சவால்களை தமது வகுப்பறைகளில் சந்திக்கின்றனர். பல்வேறு வகைப்பட்ட கற்போரின் தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தல் முறைகள் அமையப்பெற வேண்டும். வகுப்பறையில் மாணவர்களின் கற்கும் ஈடுபாட்டை அதிகரிக்க பல்வேறு நுட்பங்களை ஆசிரியர் தெரிந்திருக்க வேண்டும்.

ஆசிரியர் மாணவருடன் நேரான உறவு முறையினை அபிவிருத்தி செய்யும் போது ஒரு நாளையில் ஒரு ஆசிரியரிடமிருந்து சுமார் 200 (25 மாணவர் X 08 வகுப்பு) மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் உள்ளார்ந்த அறிகைத்திறன் சவால்களை முகங்கொடுக்கின்றனர். ஆசிரியர்கள் பல்வேறான திட்டங்களின் அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தி மாணவர்களின் இலக்குகளை அடைய உறுதிப்படுத்தும் அதேவேளை நேர உறவுமுறையை அபிவிருத்தி செய்யவும் கடமைப்பட்டுள்ளனர்.

கற்பித்தல் என்பது ஒரு தொகுதி அல்ல அதை வேறுப்படுத்தவோ, பிரிக்கவோ, குறைக்கவோ முடியாது. அத்துடன் ஒரே நேரத்தில் கட்டுப் படுத்தக் கூடிய வேலையும் அல்ல. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவைக் கொடுக்கும் அதேவேளை அவர்களின் உள்ளத்தை சுவிகரித்துக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட இடைவினை தொடர்பினூடாகவே இந்த உள்ளத்தை வெற்றிக்கொள்ளுதல் நடைபெறுகின்றது என *Herberman* என்பவர் விதந்துரைத்துள்ளார்.

### 2. வகுப்பறை முகாமைத்துவமும் உறவைக் கட்டியெழுப்புதலும்

மாணவர்களுக்கிடையேயும் ஆசிரியர்களுக் கிடையேயும் ஒரு தமரமான உறவு முறையை விருத்தி செய்வதே சிறந்த வகுப்பறை முகாமைத்து வத்திற்கான திறவுகோலாகும். *Murzana* 2003 இன் கருத்துப்படி அதன் அறிக்கையின் சிறந்த தரமான உறவு முறையை வளர்த்துக்கொள்ளும் ஆசிரியர்கள் 31% ஒழுக்காற்று பிரச்சினைக ளையே சந்தித்துள்ளனர்.

உறவைக் கட்டியெழுப்பு வதில் கடினமான பகுதி என்பது கற்பவரை புரிந்துகொள்வதும் அறிந்துகொள்வதும் அதற்கேற்ப செயற் பாடுகளை ஆசிரியர் நடுத்தர மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமான திறமைகளை புரிந்துகொள்ள கற்றுக்கொள்ள முன்வரவேண்டும். அவர்கள் தங்களின் உணர்வுகளை மறைக்கக் கூடியவர்கள். எனவே அவர்களின் மனக்கிலேசங்களை சந்தேககங்களை வெளிக்கொணரும் வகையில் நேர்மனப்பாங்கான தொடர்பாடலை வளர்த்துக் கொள்ளதுடன் வன்முறையற்ற தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடிய வகுப்பறை கவின் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

நடத்தை மனப்பான்மை, குடும்பங்களின் அர்த்தமுள்ள பங்களிப்பு, பாடசாலை, குழு, சுய வரையறைக்கான சந்தர்ப்பம் போன்றவற்றை இவர்கள் ஒத்த வயதுடையவர்களுடனும் வயது வந்தவர்களுடனும் நேரான இடைவினைத் தொடர்பை மேற்கொள்கின்றனர். இதனால் அதிக விருப்பம் உடையவர்களாக நடுத்தர மாணவர்களின் கற்பித்தல் விருத்தி பெறும். இதில் தனித்துவ மானது. நடுத்தர ஆசிரியர்கள் சட்டங்களை பாரம்பரியமாக கடைபிடித்து வந்த சில விடயங் களையும் உடைத்தெறிக்கும் விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும்.

ஒரு சிறந்த வகுப்பறை முகாமைத் துவத்திற்கான திறன்களை கொண்டவராகவும் ஒரு நடிகன் எவ்வாறு நடிப்பு துறையில் அனைத்தும் அறிந்தவராக இருக்கின்றார். அதேபோல் ஆசிரியர் ஆனவர் மாணவர்களின் உயர்ந்த தேவைகளை அறிந்தவராக சிறந்த நுட்ப முறைகளுடன் மாணவர்களின் தேவைகளைச் சந்திக்க வேண்டும்.

### 3.வகுப்பறை முகாமைத்துவம்

சிறந்த முறையான ஆசிரிய மாணவ தொடர் பானது ஆசிரியரின் ஆளுமையுடன் தொடர்பு பட்டதோ அல்லது ஆசிரியர், மாணவர்களால் விருப்பம் உடையதாய் இருத்தலோ அல்ல.

இது ஆசிரியர்களால் தெளிவுப்படுத்தப்பட வேண்டும். இவ்வணுகுமுறையானது மாணவர் களை தனிப்பட்ட முறையில் அணுகுதலாகும். அதாவது தெளிவான கற்றல், இலக்குகள், உறுதியான மாதிரிகள், சமத்துவம், நேரான நடத்தை, பொருத்தமான சமூகத் திறன்கள் உள்ளிட்ட பண்புகளை கொண்டவராக காணப்பட வேண்டும். பொதுவாக ஒரு சிறந்த செவிமடுப்பவராக ஆசிரியர் விளங்குவாராயின் மாணவர்களின் பிரச்சினைகளை தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக அமையுமென ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

### 4. ஒத்துணர்வைக் கட்டியெழுப்புதல்

நேரான உதவும் உறவு முறையின் முக்கிய மான எதிர்பார்ப்பானது உதவி பெறுபவரின் ஒத்துணர்வு பயிற்சியென்பது மாணவர்களின் உணர்வை புரிந்துகொள்ளுதலாகும். பரிவுணர்வு கொண்ட உறவு முறையானது கூடுதலாக கடினமான நிலையில் உள்ள வளர்ந்தவருக்கே அவசியம். பரிவுணர்வு எனும் எண்ணக் கருவானது இன்று துர்திஸ்டவசமாக அன்பு காட்டுதல் எனும் முறையில் பிழையாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. பரிவுணர்வு என்பது அதுவல்ல.

பரிவுணர்வு எனப்படுவது பிறரின் நிலையிலிருந்து அவர்களின் உணர்வுகளை, தேவைகளை புரிந்துக்கொள்வதாகும். பரிவுணர்வு காட்டுதல் என்பதன் கருத்து மற்றவர்களின் உணர்வுகளை தனது உணர்வுகளினால் புரிந்துக் கொள்ளுதல் ஆகும். தன்னிடமுள்ள தனிப்பட்ட மற்றும் கலாசார உணர்வுகளை புரிந்துக்கொண்ட ஆசிரியர்களே, பரிவுணர்வினை மாணர்களிடையே அபிவிருத்தி செய்யமுடியும்.

பெரும்பாலான ஆசிரியர்கள் இலகுவாக தங்களின் மாணவர்களின் பிரச்சினைகளை, புரிந்துகொண்டு அவை குறித்து முடிவெடுக்க முடியாத சூழ்நிலைகள் தோன்றும் . உதாரண மாக ஒரு விரக்தி நிலையில் காணப்படும் ஓர் ஆசிரியரிடம் ஒரு நடுத்தரத்தில் கற்கும் சிறுமி ஒருவர் சென்று ஆசிரியரிடம் இவ்வாறு கூறுகின்றார். "வீட்டுக் கஸ்டத்தினால் கல்வி கற்பதற்கு கடினமாக உள்ளது" எனக் கூறுகிறார். அதற்கு ஆசிரியர் கூறுகின்றார், "நல்லது நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியாவது படித்து சித்திப் பெற வேண்டும். உனக்கு நான் படிக்க உதவி செய்கின்றேன். அதை தவிர என்னிடம் எதையும் கூற வராதே என்கிறார் ஆசிரியர். எனவே அம்மாணவி எவ்வகையிலும் ஆசிரியரால் புரிந்துக்கொள்ளப்படவில்லை. எனவே ஆசிரியரால் மாணவி சோர்வு அடைகின்றார். பரிவுணர்வில்லாத பதிலால் மாணவி மேலும் தேக்கக் கருத்துக்களை உருவாக்கிக்கொண்டு தனிமையடைய தூண்டப்படுகின்றாள்.

ஆசிரியரானவர் மாணவரின் கடினமான சூழ்நிலையை புரிந்துகொண்டார் என்பதை காட்டியிருந்தால் பிள்ளைக்கு தன்னிலையை உணர சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஒரு ஆசிரியரானவர் பரிவுணர்வுடன் மாணவருக்கு பதில் கூறும் போது தான் மாணவருக்கு தைரியமூட்டுபவராக இருக்க முடியும். இப் பதிலானது மாணவர் ஆசிரியரின் உறவுமுறையி னூடாக அவள் உன்னத மாணவர், அவர் உயர்தர மாணவர், மதிக்கத்தக்கவர் என்பதை இருவரிடையே உணரப்படுகின்றது. இவ்வகையான பதிலானது மாணவர்களுடன் ஆரோக்கியமான தொடர்பை / உறவை பேணுவதற்கு உற்சாக மூட்டுவதாக அமையும்.

**5. நேர்வகையான மனப்பாங்கு நடத்தைகளால் விருப்பம் கொள்ளுதல்.**

"நடத்தை சீர்செய்தல்" பற்றி அறிந்து எமக்கு இவ்வணுகுமுறையானது சிறிது குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால் நேர் உளவியலானது அதனூடாகவே கட்டியெழுப்பப்படுகின்றது. *(Selig man 1999)* நேர்முறையான நடத்தைகளை கொண்டவர்கள் அதனை ஒரு திறனாக கொண்டு பல ஆண்டுகளாக அதனை உள்வாங்கி கொண்ட வர்களாக இருக்கின்றனர். இத்திறன்கள் கூடுதலாக அப்பிள்ளைகள்/மாணவர்களின் குடும்பங்களிலே தொடங்குகின்றது. பின் அவர்கள் பாடசாலைகளில் அதே நேர்வகையான திறன்களை கொண்டு வருகின்றனர்.

சில மாணவர்கள் எதிர்வகையான மனப் பாங்குகளுடன் செயற்படுவதைக் காணலாம். அவர்களுக்கு தண்டனை கொடுத்து திருத்த வழிப்படுத்துவதை விட அவர்களின் செயற் பாடுகளினால் ஏற்படும் விளைவுகளை உணரச் செய்து அவர்கள் அவ்வகையான திறன்களிலி ருந்து விடுபடவும் மீள் வலியுறுத்தவும் கடினமாக உழைக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பிள்ளை கற்றுக்கொண்ட நேர்வகை விடயத்தை / திறனை தொடர்ந்தும் பயிற்சி பெற சிறிது காலம் கொடுக்க வேண்டும். அதுவும் ஓர் ஆசிரியரானவர் மாணவர்களுக்கு காட்டும் பரிவுணர்வாக கருதலாம். அத்திறனை ஏற்றுக் கொண்ட பின்னர் அத்திறன்களை மீள் ஒழுங்கு படுத்தி, மீள வழிநடத்தப்படுவதன் மூலம் நடத்தையில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தலாம். எட்டுவயதிற்கு பின்பான காலப்பகுதியில் நடத்தையில் மாற்றமேற்படுத்துவதானது நிபந்தனைப்படுத்தலின் அடிப்படையிலேயே நிகழ்கின்றது.

**6. தேவையற்ற பேச்சுக்களை விட்டு விடுங்கள்**

தீய நடத்தைகள், பிரச்சினைகள் போன்ற வற்றிற்கு மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய முடிவுகளை எடுப்பதற்கு ஆசிரியருக்கு அல்லது பாடசாலை நிர்வாகத்திற்கு அதிகாரம் உள்ளது. அதன் மூலம் ஒரு உண்மையான உறவை மாணவரோடு பேண முடியும். இன்றைய இளம் சமுதாயத்தினர் உயர்ந்த திறனுடையவர்களாக இருப்பதால் ஆசிரியர்களைப் பற்றி அறிந்து கொள்வதிலும் அவர்களை அடையாளம் காண்பதிலும் தங்களுக்குள்ளே ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்கின்றனர். பெரும்பாலான ஆசிரியர்கள் அல்லது பாடசாலை அதிபர்கள் வேலைப்பழு, அதீத எதிர்பார்ப்பு, இயலாமை, கவலை, கோபம், பணிவு, என்பவற்றில் தமது பொறுமையை இழக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களின் அல்லது அதிபர்களின் நடத்தைகள் மாணவர்களினால் விமர்சனத்துக்குள்ளாக்கப்படுவதுடன் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதான அவநம்பிக்கை ஏற்பட சந்தர்ப்பங்கள் உருவாகின்றன.

அதிகார திறனுடைய நேர்மனப்பாங்கான ஆசிரியர்களால் மட்டுமே இவ்வாறு எழும் பிரச்சினையைத் தீர்க்க முடியும். இதுவும் ஒரு கற்பித்தலில் அடிப்படையான உறவை உண்மையாக வளர்க்க கூடிய ஒரு செயன்முறையாகும். உணர்வுகளான கோபம், எரிச்சலூட்டல், அல்லது சந்தோசமின்மை போன்றவை ஆசிரியத்துவத்திற்கு வலுவற்றதாகும்.

எப்பொழுதும் ஒரு ஆசிரியர் தனிப்பட்ட முறையில் மாணவர்களை வலுவாண்மையோடு வழிநடத்தக் கூடியதாகவும், குழப்பத்தை விட்டு பின்பற்ற வழிகாட்டல் வேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களாகும் போது பல விடயங்களைப் பற்றி அறிந்துகொள்வார். பயிற்சி மூலம் வளர்ச்சியடைந்து அவர்களது தனிப்பட்ட திறமைகளை வளர்த்துக் கொள்வார். உணர்வுகளை வெளிக்காட்டுவதிலும் பெறுமதியான தீர்மானத்தை கொடுப்பதையும் வகுப்பறை வாசலிலேயே விட்டு விட வேண்டும். உணர்வுகள் ஒரு போதும் சவால்களுக்கு தீர்வைக் கொடுப்பதில்லை.

ஆசிரியர்கள் முன்வைப்பதை பயிற்சி செய்கின்றார்களா? என்று மாணவ சமுதாயத்தினர் கண்காணிப்பார். உதாரணமாக 7ம் தரத்தில் கல்விப்பயிலும் ஒரு மாணவரை மற்ற மாணவர்கள் ஒதுக்கி வைத்தனர். இதனால் அவர் மிகவும் பாதிக்கப்பட்டவராக காணப்பட்டார். ஆசிரியர் அதற்கு மாணவர்கள் கூறுவதைப் பற்றிக் கவலைப்படாதே அதனை அப்படியே விட்டுவிடு என்றார். இவ்வாறே ஆலோசகர்களும் கூறுகின்றனர். இது மாணவர்களை அவமரியாதை செய்வதாகவும், சோகப்படுத்துவதாகவும் காணப்படுகின்றது. அதிகாரத்தை பெற்றுக் கொள்ள விரும்பும் ஆசிரியர்களை விட சாதாரணமாக தங்களது இடத்திலிருந்து இறங்கி வருபவர்களுக்குரிய மரியாதையை மாணவர்கள் தானாக வழங்குவர்.

**முடிவுரை:**

மாணவர்களின் கற்பனாசக்தி எந்தத் திசையில் வளருமென்று ஆசிரியர்களாலும், பெற்றோராலும் சரிவரக் கூற முடியாது விட்டாலும் அவர்களின் சிந்தனை விருத்திக்கான, மாற்றத்திற்கான செயற்பாடுகளை நேர்மனப் பாங்கோடு திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆக்கபூர்வமாகச் சிந்திப்பது ஒரு கட்டம் மட்டமே. ஆசிரியர்களும் பெற்றாரும் எவ்வளவுதான மாணவர்களை வழிநடத்தினாலும் அவர்களில் பலர் சூழ்நிலையின் தாக்கத்திற்கு உள்ளாகின்றார்கள். அவர்கள் எமது கட்டுப்பாட்டில் இருப்பதாக ஆசிரியர்களும் பெற்றாரும் நினைத்தாலும் மாணவர்களின் மனம் அவ்வாறு இருப்பதில்லை. ஆக்கபூர்வச் சிந்தனைக்கு குழந்தைகளுக்கு ஓரளவு சுதந்திரமும் தேவைப்படுவதால் பிள்ளைகளின் சிந்தனைக் கோலங்களை அவதானித்து அவர்களை நேர்சிந்தனையுடன் நெறிப்படுத்தி வழிப்படுத்த வேண்டியதுடன் பெற்றோரும், ஆசிரியர்களும் அவற்றை முன்னுதாரணமாகக் கடைப்பிடிக்க வேண்டியது பிரதான கடமையாகும்.

குடும்பத்திலும், பாடசாலையிலும் நிகழும் சிறு சிறு மகிழ்சியான செயற்பாடுகளின் கருத்தாடல்கள் பிள்ளைகளின் சிந்தனை விருத்திக்கு உறுதுணையாகி எதிர்காலத்தில் வளமான சிந்தனாவாதிகளை உருவாக்கும். ஒவ்வொரு ஆசிரியரும், பாடசாலைச் சமூகமும், நேர்மனப்பாங்கு, பொருத்தமான பயிற்சி, தேடல்கள் மூலம் சமூக ஊடாட்டத்திறனும், சமூகப்பற்றும், சமூகஉணர்வும் அர்ப்பணிப்பும் கொண்டவர்களாக நிலைமாற்றம் பெற்று அவற்றை பயிற்சிப்படுத்தும் போது மட்டுமே மாணவர்களும் பல்துறை ஆற்றலுடன் நேர்மனப்பாங்கு கொண்டவர்களாக மாற்றமடைவதற்கான சந்தர்ப்பமாக எதிர்பார்க்க முடியும்.

கட்டுரையாளர் :
முதுநிலை விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெதுவான உளவளர்ச்சிப் போக்கும் ஆசிரியரின் விசேட செயற்பாடுகளும்

கல்வி அறிவியல் துரிதமாக வளர்ச்சி அடைந்துவரும் துறையாகும். உலகில் பத்தாண்டுக்கொருமுறை பல்வேறு புதிய கருத்துக்கள், பரிமாணங்கள் ஏற்படுவதைக் காண்கின்றோம். இதனால் கல்வித் துறையிலும் இம்மாற்றங்கள் பெரும் தாக்கங்களைக் கொடுக்கின்றன. இந்த வரிசையிலே இன்று கல்வித் துறைகளில் வளர்ச்சி அடைந்து வருகின்ற நவீன கல்விச் சிந்தனைகளில் விசேட கல்வித்துறை பிரதான இடத்தைப் பெறுகின்றது. உலகளாவிய முறையில் ஊடுருவிய மார்க்சிய சிந்தனைகளும் இதற்குச் சமாந்தரமாக கல்வி உளவியலில் ஏற்பட்ட முன்னேற்றகரமான ஆய்வுகள் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களிற்கு துணை நிற்கும் வழி வகைகளையும் நுட்பவியல்களையும் கண்டறியலாயின. ஆகவே இவர்களிற்கான கல்வி ஏற்பாடுகள் "சிறப்பார்ந்த கல்வி", "விசேட கல்வி" *(Special Education)* என்ற வகையில் உயர்ந்த நிலையான கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளமை கல்விச் சிந்தனைகளின் வெளிப்பாடாகும்.

கற்கும் வலுவில் பின்னடைவோர் என்ற காரணத்தினால் அவர்களைப் புறக்கணித்தல் அடிப்படை மனித உரிமைகளைப் புறக்கணித்தலாகும். இந்நிலையில் வகுப்பறையில் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாது காணப்படும் பிள்ளைகள் விசேட கல்வித் தேவைகளை உன்டயவராகக் காணப்படுகின்றார்கள். இவர் தம் வாழ்க்கைக்கு தயாராவதற்கும் வளர்ச்சியுறுவதற்கும் கூடுதலான உதவிகள் தேவைப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கூடுதல் உதவிகள் தேவைப் படுபவர்கள் விசேட கல்வித் தேவையுடையவர் களாகக் கருதப்படுகின்றார்கள். இந்த விசேட தேவைகள் உடல், உள, மனவெழுச்சி சார்ந்த வையாகக் காணப்படும். அவரவர் தேவையைப் பொறுத்து விசேட தேவை வகைக்குள் அடக்கப் படுவர். இவ்வாறு நோக்கும் போது வகுப்பறை யில் உள்ள பிள்ளைகள் அனைவரும் ஒத்த தன்மையினராக ஒரே தன்மையாக ஆற்றல் அறிவுடையவராக இருப்பதில்லை. மீத்திறன் உடைய குழந்தைகளும் அதேசமயம் பிரச்சினைக்குரிய குழந்தைகளும் இருக்கத்தான் செய்வர். இங்கே இவர்களை இனம் கண்டு சீரான வழியில் நெறிப்படுத்தும் பாரிய பொறுப்பு கல்விச் சமூகத்தைச் சார்ந்ததாகும். இந்த வகையில் இனம் காணல் அவசியமாகும்.

கதைத்தல், நடத்தல் முழந்தாளிடுதல் ஏனைய சுகாதாரப் பழக்கவழக்கங்கள் போன்ற செயற்பாடுகளிலும் இடம், காலம், பரிமாணம், தன்மை, விளக்கம், அறிவுசார் தொழிற்பாடு களிலும் எழுதுதல், வாசித்தல், கணித எண்ணக்கரு விளக்கம் பெறும் தொழிற்பாடு களிலும் ஏனைய பிள்ளைகளை விட மூன்று வருடம் அல்லது அதற்கு மேற்படக்கூடிய தெளிவான தாமதம் காட்டும் பிள்ளையை மெதுவான உள வளர்ச்சியுடைய பிள்ளை என கல்வி உளவியலாளர் குறிப்பிடுவர். நுண்ணறிவுத் திறன் அல்லது நுண்மதி ஈவு 70இற்கு குறைவான வர்கள் மூளை வளர்ச்சி குறைந்தோர் என்றும் 69-50 வரையானவர்கள் குறைவான மூளை வளர்ச்சி குறைபாடு என்றும் 49-35 வரையானவர்கள் மிதமான மூளை வளர்ச்சி குறைபாடுடையவர்கள் எனவும் வகுக்கப்பட்டுள்ளனர்.

இது பிள்ளையின் வளர்ச்சியில் மிகத் துலக்கமாகக் காட்டும் ஒரு நிலையாகும். மனிதர்களின் உடல் வளர்ச்சி சமனற்றதாயி ருப்பது போலவே உள வளர்ச்சியும் சமனற்றதாக இருக்கும். சிலர் உயரமாகவும், சிலர் குள்ளமாக வும் மெலிந்தவர்களாகவும் மொத்தமாகவும் பார்வையில் கூர்மையானவர்களாகவும், குறை பாடுடையவர்களாகவும் கேட்டல் நன்றாகவும் குறைவாகவும்திறமையானவராகவும் திறமை யற்றவர்களாகவும் காணப்படுவர். இவற்றைப் போலவே உள வளர்ச்சியும் வேறுபாட்டுக்குரிய ஒன்றாகும். மெதுவாக உள வளர்ச்சி அடைவது ஒரு நோயல்ல. இத்தன்மையானது பிள்ளையின் பிறப்பிற்கு முன்னரும், பிறக்கின்ற போதும், பிறப்பின் பின்னரும் குழந்தையாக இருக்கும் போதும் கூட ஏற்பட முடியும். அதாவது பிறப்ப தற்கு முன்னர் மெதுவாக உள வளர்ச்சியடையும் தன்மை ஏற்படுவது.

* பரம்பரை.
* உடம்பில் அடங்கியிருக்கும் நிறமூர்த்தங் களில் ஏற்படுகின்ற மாற்றங்கள்.
* கர்ப்பமுற்றிருக்கும் போது தாய் ஜேர்மன் சின்னமுத்து நோய்க்குட்படல்.
* கர்ப்பமுற்றிருக்கும் போது தாய் சக்தி வாய்ந்த மருந்துகளைப் பாவித்தல்.
* கர்ப்பமுற்றிருக்கும் போது எக்ஸ்றே தாக்கங்கள்.
* குருதி பொருந்தாமை.
* இரத்த உறவு முறையில் அமைந்த திருமணம்.
* ஏனைய நோய்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதேபோன்று பிரசவத்தின் போது மெதுவாக உள வளர்ச்சியடையும் தன்மை ஏற்படுவது.
* பிரசவத்தின் போது பயன்படுத்தப்படும் உபகரணங்களின் தாக்கம் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.
* 280 நாட்களுக்கு முன்பாக ஏற்படும் பிறப்பை குறைப் பிரசவம் என்கின்றோம். இவ்வாறு பிறக்கும் குழந்தையின் எடை, உடல் உறுப்புக்கள் சாதாரண குழந்தையை விட மாறுபட்டு இருக்கும். அடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசவத்தின் பின்னர் மெதுவாக உள வளர்ச்சியடையும் தன்மை ஏற்படுவது.

* மந்தபோசனை.
* எதிர்பாராத விபத்து.
* தொற்று நோய்கள்.
* ஏனைய சுற்றாடற் காரணிகளின் தாக்கம்.
* மருந்து வகைகளை பிழையான முறையில் அதிகம் பாவித்தல்.
* மூளைக்காய்ச்சல், மூளையில் நீர் இருத்தல்.
* உள வளர்ச்சிக்கான பொருத்தமான சூழல். காணப்படாதிருத்தல்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மெதுவாக உள வளர்ச்சியடையும் பிள்ளைகளின் மூளையின் சிறு பகுதியில் ஏற்படும் பாதிப்பு காரணமாக தசைநார் இறுக்கமடைவதால் பார்த்தல், கேட்டல் ஆகியவற்றுடன் சிந்தனையிலும் குறைபாடு ஏற்படும். மூளையில் ஏற்பட்ட பாதிப்பு பெரிதாக இருந்தால் குறைபாடுகள் பல்வகைப்பட்டதாக இருக்கும். இவ்வகையில் மூளையில் ஏற்படும் பாதிப்புக்கும் மெதுவாக உள வளர்ச்சியடைதலுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. மெதுவாக உள வளர்ச்சியடையும் பிள்ளைகளின் தொழிற்பாடுகளுக்கு ஏற்ப பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. A மட்டத்திலுள்ள பிள்ளைகள்
2. B மட்டத்திலுள்ள பிள்ளைகள்
3. C மட்டத்திலுள்ள பிள்ளைகள்

A மட்டத்திலுள்ள பிள்ளைகள் மொழியைப் பயன்படுத்துவதில் இடர்படுபவர்களாகவும் கண்ணாடியில் தன்னையே இனம் காண்பதில் இடர்படுபவர்களாகவும் எதிர்காலம், இறந்தகாலம் பற்றிய விளக்கமின்மை, இருக்குமிடத்தை மட்டும் அறியக் கூடியவர்களாகவும் சிரிக்கவும் பாடவும் அனுபவங்களைப் பெறக் கூடியவர்களாகவும் காணப்படுவர்.

B மட்டத்திலுள்ள பிள்ளைகள் படங்களை இனங்காணவும், பேச்சில் விளக்கம் உடையவர்களாகவும், இடம், சூழல் போன்றவற்றை அறியக் கூடியவர்களாகவும் காலத்தைப் பற்றிய அறிவுடையவர்களாகவும் இருப்பதுடன் காணாத, செய்யாத ஒன்றை கருத்தில் எடுக்க முடியாதவர்களாகவும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவர்களாகவும் காணப்படுவர்.

C மட்டத்திலுள்ள பிள்ளைகள் காலத்தை அடிப்படையாகக் கொண்டு யதார்த்தத்தை புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் எண்ணத்தை சொல்பவற்றை புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பதுடன் தொடர்புகள் பற்றிய சிக்கல் காணப்படுவதுடன் பிரச்சினைகளை தீர்க்க முடியாதவர்களாகவும் காணப்படுவர்.

**மெதுவாக உள வளர்ச்சியடையும் பிள்ளை தொடர்பாக ஆசிரியரின் விசேட பங்கு**

* மெதுவாக உள வளர்ச்சியடையும் பிள்ளைகள் நல்ல முறையில் இனம் காணுதல். அதாவது பிள்ளையின் வயது, மொழிப் பிரச்சினை, பேரியக்கத்திறன், நுண்ணியக்கத்திறன், சுய உதவித் திறன்கள், அடிப்படை கற்றல் திறன்கள், அழகியற் திறன், சமய விழுமியம் போன்றவற்றில் இவர்களின் நிலையினை மிக நன்று, நன்று, சராசரி, குறைவு, மிகக் குறைவு என்ற நிலையிலும் எவ்வாறு காணப்படுகின்றார் என்பதை அறிய வேண்டும்.
* வீட்டு ஆலோசனை மூலம் பிள்ளையை வகுப்புக்கும் பாடசாலைக்கும் ஆயத்தப்படுத்தல்.
* ஒவ்வொரு பிள்ளையினதும் விருத்தி மட்டத்திற்கு ஏற்ப கற்பித்தலையும் பயிற்சியளித்தலையும் மேற்கொள்ளல் வேண்டும்.
* சுய உதவித் திறன்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் நாளாந்த வாழ்க்கையை நடாத்துவதற்கான ஆற்றலைப் பெருக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆரம்பக் கல்வியைப் பெறக்கூடிய சகல பிள்ளைகளையும் அது தொடர்பாக ஆயத்தம் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் வேண்டும்.

* சகல பிள்ளைகளும் செயற்படத்தக்க விதமான பாடங்களைத் திட்டமிட்டு விசேட கற்பித்தல் முறைகள் மூலம் தன்னம் பிக்கையை உறுதிப்படுத்தல் வேண்டும்.

* அத்தகைய பிள்ளைகளை மற்றைய பிள்ளைகளுடன் ஒன்றிணைக்கத்தக்கதாக செயல்முறைகளை முறையாக ஒழுங்க மைத்தல் வேண்டும்.

* பொருத்தமான செவிப்புல, கட்புல சாதனங் களுடன் மகிழ்ச்சிகரமான வகுப்பறையை உருவாக்குதல் வேண்டும்.

*மெதுவாக உள வளர்ச்சியடையும் பிள்ளை களுக்கு மேலும் பின்வருமாறு உதவலாம்.*

1. பிள்ளையின் தவறான செயல்களுக்கும் பிழையான செயல்களுக்கும் தண்டனை வழங்கக்கூடாது.
2. முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா வேளைகளிலும் வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து செயற்படுவதற்கு உற்சாகப்படுத்தல்.
3. எதிர்பார்த்த நிலையினை அடையாத போது அவர்களை மேலும் உற்சாகப் படுத்தல்.
4. ஆசிரியர் தன் மீது அன்பு செலுத்துகின்றார் என்ற எண்ணம் ஏற்படக்கூடியவாறு பிள்ளையிடம் நடந்து கொள்ளல்.
5. பிழையான செய்கைகள் இருப்பின் கருணைகாட்டி அவற்றை படிப்படியாக நீக்குவதற்கான முயற்சிகளைச் செய்தல்.

ஆகவே ஒவ்வொரு தனி நபரும் கற்பதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளனர் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மெதுவாக உள வளர்ச்சியடையும் பிள்ளைகளுக்கும் சம சந்தர்ப்பங்களை அளிப்பதன் மூலம் அவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படாதவாறு அவர்களை உயர்நிலைக்கு இட்டுச்செல்ல முடியும்.

## மெதுவான உளவளர்ச்சி/ மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான தனியாள் வேலைத்திட்டம்

வகுப்பறையில் மெதுவான உளவளர்ச்சி யுடைய மாணவர்கள் அனைவரையும் ஒன்றி ணைத்து கற்பித்தல் பொருத்தமற்றது. ஒவ்வொரு தனியாளுக்கும் தேவைக்கேற்ற விதமான கல்வி மற்றும் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும். அவ்வாறான திட்டமிடலுக்கான ஒரு மாதிரி மாணவர் பொது விபரம் உட்பட பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படல் அவசியமாகும்.

### பிரதான செயற்பாடுகள்
### பேரியக்கச் செயற்பாடுகள்

தானாக உட்காருதல், தானாக நிற்றல், கை ஆட்டுதல், தானாக கால் ஆட்டுதல், தானாக ஓடுதல், சிறிய பந்தை எறிதல், குந்தியமர்தல், பெரிய பந்தைப் பிடித்தல், தரைமீது குதித்தல், மாடிப்படியில் ஏறுதல், மாடிப்படியில் இறங்குதல், தள்ளு, இழு கதவைத் திறத்தல், குறிப்பிட்ட திக்குநோக்கி பெரிய பந்தை உதைத்தல், நாற் காலியிலிருந்து கீழே குதித்தல், ஒழுங்குபடுத்து வதற்காக பொருள்களை இழுத்தல், தள்ளுதல் நொண்டியடித்தல், நாடா இல்லாத காலணியை அணிதல் அகற்றுதல் முன் கைகளில் கடினமான நூல்களை அமத்துதல், தண்ணீருள்ள பாத்திரத்தை இரண்டு கைகளா லும் அமத்துதல், தட்டுமுட்டு சாமான்களை துடைத்தல், தண்ணீருள்ள வாளியை ஒரு கையால் தூக்கி வருதல், பெரிய பந்தை எழும்பி வரும்படி தொடர்ந்து அடித்தல், தாளில் துளையிடும் கருவியை பயன்படுத்துதல், உள்நாட்டு அஞ்சல் கடிதத்தை மடித்தல், பொத்தான்களை, கிழிந்த துணிகளை தைத்தல், தாள்களை கோப்பிலிடுதல், படங்களை கத்திரிக்கோலால் வெட்டியெடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தன்னுதவிச் செயற்பாடுகள்

பிஸ்கட் ரொட்டியை உண்ணுதல், குவளையிலுள்ள நீரை குடித்தல், உணவுப் பொருட்களை பொறுக்கி வாயில் போடுதல், உறிஞ்சி குழாயைக் குடிப்பதற்கு பயன்படுத்துதல், உரிக்கப்பட்ட பழங்களை வாயில் போடுதல், விரல்களால் சாதத்தை அள்ளி உண்ணுதல், இட்லி, தோசை உண்ணுதல், கழிவறைத் தேவையை உணர்தல், குளிர்பானம் பாயாசத்தை தேக்கரண்டியால் சாப்பிடுதல், பல்துலக்குதல், சட்டைப் பொத்தான்களைக் கழற்றுதல், உபயோகித்தபின் கழிவறைக் கோப்பையில் நீர் ஊற்றுதல், சோப்பு உபயோகித்து முகம் கைகளை கழுவுதல், பிறர் உதவியின்றிக் குளித்தல், பிறர் உதவியின்றி ஆடை அணிதல், கழிவறை சென்றபின் தானாக கழுவிக் கொள்ளுதல், நாடா உள்ள காலணியை அணிதல், அகற்றுதல், குடை மழைக்கோட்டு கம்பளியாடை பயன்படுத்துதல், பழங்களை சுத்தப் படுத்தி உண்ணுதல், முகப்பூச்சுத் தூளை பயன்படுத்துதல், மூக்கைச்சிந்தி சுத்தப்படுத்துதல், தலைவாருதல், தடைகளை தாண்டிக் குதித்தல், சிறிய பந்தை மட்டை கொண்டு அடித்தல், துணிகளை துவைத்தல், படுக்கை விரித்தல் மடித்தல், உடற் பயிற்சிகளை செய்தல், துணிகளை மடித்து வைத்தல், நீரை வாளியில் ஊற்றுதல், மிதிவண்டி ஓட்டுதல்.

### நுண்ணியச் செயற்பாடுகள்

பெரியவர்களுடைய விரலைப் பிடித்தல், பொம்மையைப் பிடித்தல், நீர்க்குவளையைப் பிடித்தல், சிறிய பொருட்களைப் பொறுக்குதல், மணலை வாரி எடுத்தல், தேக்கரண்டியைப் பிடித்தல், நனைந்த துணியைப் பிழிதல், மணிகளைக் கோர்த்தல், எழுதுகோலைப் பிடித்தல், மிட்டாய் உறையை அகற்றுதல், ஒலிநாடா உறையை திறத்தல், பேனாவில் மை குழலை மாற்றுதல், தாளை மடித்தல், பல்வேறு குண்டூசிகளை பயன்படுத்துதல், உறைகளை கத்தரிக்கோலால் வெட்டுதல், அடைகுழல்களை தேவையான அளவு பிதுக்குதல், பசை தடவி உறையை ஒட்டுதல், ஊசிகளை பயன்படுத்துதல், பூட்டுக்களை திறவுகோல் கொண்டு திறத்தல், தீக்குச்சிகளைப் பற்றவைத்து மெழுகுதிரியை ஏற்றுதல், ஊசியை நூலில் கோர்த்தல்.

### சமூகச் செயற்பாடுகள்

பின்புறம் தொடும்போது திரும்பிப்பார்த்தல், அழைத்தால் முகம்பார்த்துச் சிரித்தல், நகரும் பொருட்களை பின்பற்றி கண்களைத் திருப்புதல், கையை அசைத்து விடைகொடுத்தல், அணைத்தோ, முத்தமிட்டோ கைகொடுத்தோ அன்பை வெளிக்காட்டுதல், தொடர்நிலை விளையாட்டில் ஈடுபடுதல், தன்னடிப்பு விளையாட்டில் ஈடுபடுதல், வணக்கம் தெரிவித்தல், எளிய நடிப்பு விளையாட்டில் ஈடுபடுதல், தொடர்நடிப்பு விளையாட்டில் ஈடுபடுதல், மற்ற குழந்தைகளுடன் விளையாடுதல், தினசரி நடவடிக்கைகளில் மாற்றமிருந்தால் ஏற்றுக்கொள்ளுதல், தன்னுடைய வாய்ப்புக்காகக் காத்திருத்தல், பழக்கப்பட்ட இடங்களில் சுதந்திரமாகச் சுற்றித்திரிதல், பொருள்களை பெற்றுக்கொள்ள அனுமதிகோரல், தயவுசெய்து, மன்னிக்கவும், மற்றும் நன்றி கூறுதல், விளையாட வெளியே செல்ல அனுமதி கோரல், பொது இடங்களில் தகுந்தவாறு நடந்துகொள்ளல், நகவெட்டியைப் பயன்படுத்தி நகத்தை வெட்டுதல், காதுகளைச் சுத்தப்படுத்துதல், பொதுக் கழிவறையைப் பயன்படுத்துதல், உணவகத்தில் தேவையானவற்றை கட்டளையிட்டு பெற்று உண்ணுதல், தேவைப்படும்போது எளிய முதலுதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

### மொழிச் செயற்பாடுகள்

பெயரை அழைத்தால் திரும்புதல், அம்மா - அப்பா எனக் கூறுதல், அழைத்தால் அருகில் வருதல், சில பொருட்களின் பெயரைக் கூறினால் புரிந்துகொள்ளுதல், 12 முதல் 15 வரை பழக்கப்பட்ட பொருட்களின் பெயரைக் கூறுதல், உரிய கட்டளைகளை ஏற்றுக்கொள்ளுதல், குடும்ப அங்கத்தவர்களின் பெயரைக் கூறுதல், பழங்களின் பெயரைக் கூறுதல், படங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தைக் கூறுதல், எளிய வாக்கியங்களில் கேள்விகளை புரிந்துகொள்ளுதல், சொற்களின் பொருளை வினவுதல், அவயங்களை அசைக்கக் கூறினால் அதன்படி செயற்படுத்தல், வீட்டு முகவரியைத் தெரிவித்தல், சுட்டும் பொருட்களை முழுவாக்கியத்தில் பயன்படுத்துதல், இரண்டு கட்டளைகளை ஒருமித்து செய்து முடித்தல், பெயர்சார் வினைசார் சொற்களைப் புரிந்து கொள்ளுதல், ஒருபக்க கதைகளை வாசித்தல், எளிய வினாக்களுக்கு விடை எழுதுதல், தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரலை வாசித்தல், உணவகத்தில் உணவுப்பட்டியலை வாசித்தல், தேவையேற்படும்போது கையொப்பமிடுதல், செய்தித்தாள்களை வாசித்தல், சொந்தமாக பத்து வாக்கியங்களை எழுதுதல், கடிதங்கள் எழுதுதல்.

### கணக்கிடுதல் செயற்பாடுகள்

கன சதுர கட்டளைகளை ஒன்றின்மேல் ஒன்றாக வைத்தல், புதிர்க்கட்டைகளை இணைத்தல், மணிகளை கோட்டின்மேல் வரிசையாக வைத்தல், புத்தகங்களை அடுக்கி வைத்தல், இன்னும்பிற மணிகள் உள்ள பாத்திரத்தில் ஒவ்வொரு மணியாக எடுத்து மற்றொரு பாத்திரத்தில் அல்லது வாய் அகன்ற போத்தலில் போடுதல்.

பொருட்களில் பெரியது எது சிறியது எது என்பதைக் கேட்டால் பதில் கூறுதல், அல்லது சரியானதை சுட்டிக்காட்டுதல்.

அதிகம் பொருட்கள் உள்ள கலனில் இருந்து ஒரே ஒரு பொருளை மட்டும் கேட்க சரியாக ஒன்றை மட்டும் எடுத்துக்கொடுத்தல் (ஒரு பொருளை கொடுத்துவிட்டு அதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்).

நாணய வடிவிலுள்ள உலோகப் பொருட்களுடன் பழக்கத்திலுள்ள அனைத்து நாணயங்களையும் கலந்து வைத்துள்ளவற்றில் நாணயங்களை மட்டும் தெரிந்தெடுத்தல், தொலைக்காட்சி நிகழ்வுகளை பிறருக்கு இடைஞ்சல் இன்றிப்பார்த்தல், புகார் கூறுதல், குழுவிளையாட்டுச் செய்கையில் ஈடுபடுதல் 1-100 வரை எழுதுதல், பழக்கத்திலுள்ள நாணயங்களின் மதிப்பை 5 சரியாக கூறுதல், இலகுவான கூட்டல் கழித்தல் மேற்கொள்ளல்.

எழுதுதல்/ வாசித்தல் செயற்பாட்டுப் பொருட்களைப் பார்த்தல், படங்களை பார்த்தல், கிறுக்குதல், பொருட்களோடு பொருட்களை பொருத்துதல், பொருட்களோடு படங்களைப் பொருத்துதல், நிறங்களோடு நிறங்களைப் பொருத்துதல், எழுத்துக்களைக் கண்டறிந்து கூறுதல், தன்னுடைய பெயரை வாசிக்கவும் எழுதவும் செய்தல், செயற்பாட்டு வார்த்தைகளை வாசித்தல், படங்களுக்குத் தகுந்த நிறங்களைத் தீட்டுதல், குடும்ப அங்கத்தவரின் பெயர்களை எழுதுதல், கடைகளின் பெயரை வாசித்தல், மின்னணு கடிகாரத்தில் நேரம் பார்த்துக் கூறுதல், விலைப்பட்டியலை வாசித்தல், திகதி மற்றும் கிழமைகளை எழுதுதல், நாட்காட்டி பார்க்கத் தெரிந்திருத்தல், கூறும் சொற்களை பாராமல் எழுதுதல், செயற்பாட்டு சொற்றொடர்களை வாசித்தல்.

### அடிப்படைத் திறன்கள்

கேள்வி அறிதலைப் பெற்றிருத்தல், பார்வை வேறுபாட்டை பெற்றிருத்தல், உள்ளங்கையால் பற்றிக்கொள்ளும் திறனைப் பெற்றிருத்தல், கண்தொடர்பை பெற்றிருத்தல், ஒளிப்பிடம் கண்டறியும் திறனை பெற்றிருத்தல், தொட்டு உணரும் திறனைப் பெற்றிருத்தல், சுவை உணர்வு அறியும் திறனைப் பெற்றிருத்தல், நுகர்வு அறியும் திறனைப் பெற்றுணர்தல், உடற்கூறு அறிவைப் பெற்றிருத்தல், இயக்க உணர்வு அறியும் திறனைப் பெற்றிருத்தல், கைகள் ஒழுங்கிணைப்பு பெற்றிருத்தல், உடல் வளையும் திறனைப் பெற்றிருத்தல், இடது வலது பக்கத்திறன் இயக்கத்திறன் திசை இயக்கத்திறன் போன்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரதான செயற்பாடுகள் | இயலுமான பரப்பு | தேவையான பரப்பு | முன்னேற்றத்திற்கான திட்டம் | உ.தி | மு.தி |
|---|---|---|---|---|---|
| பேரியக்கச் செயற்பாடுகள் | | | | | |
| 1. தானாக இழுத்தல் | | | | | |
| 2. சிறியவற்றை எறிதல் | | | | | |
| தன்னுதவிச் செயற்பாடுகள் | | | | | |
| 1. பிஸ்கட், ரொட்டிகளை உண்ணுதல் | | | | | |
| 2. குவளையில் நீர் குடித்தல் | | | | | |
| நுண்ணியச் செயற்பாடுகள் | | | | | |
| 1. பொம்மையைப் பிடித்தல் | | | | | |
| 2. மணலை வாரி எடுத்தல் | | | | | |
| சமூகச் செயற்பாடுகள் | | | | | |
| 1. அழைத்தால் முகம் பார்த்துச் சிரித்தல் | | | | | |
| 2. வணக்கம் தெரிவித்தல் | | | | | |
| மொழிச் செயற்பாடுகள் | | | | | |
| 1. பெயரை அழைத்தல் கூறுதல் | | | | | |
| 2. அம்மா, அப்பா எனக் கூறுதல் | | | | | |

மேற்படி மாணவர்களுக்கு இயலுமான பரப்பையும் தேவையான பரப்பையும் இனம் காணுதல், தேவையான பரப்பை பொருத்தமான திட்டத்தை மேற்கொள்ளும் வகையில் திட்டமிடல் வேண்டும்.

கட்டுரையாளர் :
முதுநிலை விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா. சமகால உளவியல் எனும் நூலின் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இன்றைய கல்வி நிலைமை

அறிவு வெடித்துச் சிதறும் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் *(era of knowledge explosions)*. உலகை இணைக்கும் சக்தியை அறிவே கொண்டிருக்கும் காலம் இது. அறிவுப் பொருளாதாரம் *(knowledge economic)*, நுண்ணறிவு அரசியல் *(intelligence politics)* என எல்லாமே அறிவை மையமாக வைத்து நடைபெறும் புதுமையான காலமே இது. பணத்தை சம்பாதிப்பதற்கு நிலவுடைமையோ, கைத்தொழில் சாலைகளோ அவசியமில்லாத வெறும் மென்பொருளால் உலகின் முதற்தரப் பணக்காரர்கள் உருவாகியுள்ள காலமும் இதுவே.

இந்த யுகத்தின் அறிவு என்பதும், அதை உற்பத்தி செய்தல், அதைப் பெறுதல், வழங்குதல், அறிவைப் பயன்படுத்துதல் என்பது எல்லாமே ஒரு சீரியசான விடயமல்ல. அறிவை உற்பத்தி செய்யும், கையாளும், கண்டுபிடிக்கும் பாரிய நிறுவனங்களே பல்கலைக்கழகங்களாகும். உலகின் பல நாடுகளில் அரச, தனியார் பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன.

எமது நாட்டிலே 100% பாடசாலைக்கு இணைந்து கொள்ளும் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து, மூன்றாம் நிலைக் கல்வியை நாடுகின்றார்கள். அங்கே தொழில் *(professional)*, தொழிநுட்ப *(technical)*, பல்கலைக்கழக கல்வி எனப் பிரிந்து மாணவர்கள் அவர்களின் விருப்புக்கு ஏற்பவும், தகைமைக்கு ஏற்பவும் கற்கும் நிலையே காணப்படுகிறது. மாணவர்களின் தொழிற் சந்தைக்குத் தயாராகும் வயதுக் குழுமம் இந்த நிலையிலேயே காணப்படும். எமது நாட்டில் அதிக வாய்ப்புக்களின்றி கல்வி வசதிகளைத் தேடி மாணவர்கள் திண்டாடும் நிலையும் இந்த வயதிலுள்ளோருக்கே ஏற்படுகிறது. கிராமியச் சூழலில் வாய்ப்புக்கள் குறைவாதலால் பல சமூக, பொருளாதார இன்னல்களுக்கும் மாணவர்கள் இந்த வயதில் முகங்கொடுப்பதுடன், கல்வியைக் கைவிட்டு இடைவிலகுதலும் அதிகமாக நிகழ்வதும் இந்த குழுமத்திலேயே என்பதுவே கவலையான விடயம்.

பாடசாலைக் கல்வியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் சுமார் 3,30,000 மாணவர்களில் 29000 பேர் பல்கலைக்கழக நுழைவைப் பெற (2016) ஏனையோரில் பெரும் பகுதி மாணவர்கள் உரிய வாய்ப்புக்களின்றித் திண்டாடுகிறார்கள். இந்த நாட்டிலே 10,164 பாடசாலைகளிலே கற்று வெளியேறும் மாணவர்களுக்கு வெறும் 14 பல்கலைக்கழகங்களும் ஒரு திறந்த பல்கலைக் கழகமும் போதாது என்பதை நான் சொல்லித் தான் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியதில்லை.

ஒரு மாணவருக்கான வருடத்திற்கான பாடசாலைக் கல்விச் செலவு 21,200/- வும், ஒரு மாணவருக்கான ஒரு வருட உயர்கல்விச் செலவு 96,000/- உம், ஒரு மருத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவருக்கான செலவு 400,000/- மாக உள்ளது. இந்த எல்லா செலவுமே அரசினால் ஏழை மக்களின் வரி மூலம் பெறப்படும் பணத்தைக் கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. இறுதியில் இந்த நாட்டுக்கு இவர்கள் செய்யும் பணி என்ன என்று நோக்கின் கவலை தரும் முடிவே கிடைக்கிறது. இவர்களுக்கான செலவு விளலுக்குறைத்த நீர் போல முடிந்து விடுகிறது. தாம் பெற்ற கல்வியைக் கொண்டு தமது வாழ்க்கையை அமைக்க முடியாது போகிறது அல்லது தாம் பெற்ற கல்வியைக் கொண்டு வெளிநாட்டிலே தொழிலொன்றைப் பெற்று அந்த நாட்டிற்கே ஓடி விடும் அவலமே உள்ளது. இங்கே நல்ல சம்பளத்தைப் பெறும் வசதியும் அரச துறையிலே இல்லை.

இந்த நாட்டிலே ஒவ்வொரு ஏழையும் அவர்கள் கொள்வனவு செய்யும் பொருட்களுக்காக வரி செலுத்தும் போது இந்த நாட்டின் வைத்தியர்கள் நேசிங் ஹோம் மூலம் உழைக்கும் பணத்திற்கு வரி செலுத்துவதும் இல்லை. அவர்கள் அறவிடும் கட்டணத்திற்கு வரையறைகளும் இங்கே இல்லை. அவர்கள் அரச உத்தியோகத்தராகையால் வருமான வரிகூட விலக்களிக்கப்படுகிறது.

### மூன்றாம் நிலைக் கல்வி

எமது இளைஞர்கள் வயதுக் குழுமத்தினர் *(youths)* கற்கும் கல்வியே மூன்றாம் நிலைக்கல்வி ஆகும். இவர்களில் எமது நாட்டில் 18% மானவர்களுக்கே அரச, தனியார் துறைகளில் கல்வியைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. உலகில் பட்டதாரி, தொழில், தொழிநுட்பக் கல்வியைத் தொடர்வதற்காக தகைமையுள்ளோரிடம் போட்டிப் பரீட்சை நடாத்தி ஆட்களைத் தெரிவு செய்யும் துர்ப்பாக்கிய நிலைமை எமது நாட்டிலேயே உள்ளது. ஒரு நபர் தமக்கு விரும்பிய துறையிலே கல்வியைக் கற்பதற்கான உரிமை இங்கே பல்வேறு காரணங்களால் மறுக்கப்படுகின்றன.

உயர்கல்வியிலே அரசின் தனியுரிமையும், மாறிவரும் அரசுகளின் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டிலே உள்ள போதாமையும், பிரதானமாகப் போதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான இட வசதியின்மையும் இங்கே முக்கிய பிரச்சினைகளாகும்.

மாணவர்கள் கல்வியைத் தொடர வெளிநாடு செல்ல வேண்டும், அல்லது வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களின் கிளைகளை இங்கே நிறுவ வேண்டும் *(cross borders institutions)*. அல்லது புதிதாக அரசு பல்கலைக்கழகம், உயர் தொழிநுட்ப நிறுவனங்களை உருவாக்க வேண்டும், அல்லது புதிய தனியார் பல்கலைக்கழகங்கள உருவாக்கப்பட வேண்டும். இவை எல்லாமே கடினமான விடயங்கள் தான். இங்கே கடினம் அரசுக்கு மட்டுமல்ல, இலவச நலனுதவியை சரியாகப் பயன்படுத்தாத மக்கள் மனதிலும் புதிய விடயங்களையும், மாற்றங்களையும் ஏற்றுக் கொள்ளும் மனோநிலை வேண்டும்.

உலகிலே சிறந்த தனியார் பல்கலைக் கழகங்கள் பல உள்ளன. நமது மாணவர்களுக்கும் சிறந்த நியமத்தரங்களுடன் தனியார் பல்கலைக் கழகங்கள் ஒன்றல்ல இன்னும் பல உருவாக்கப்பட வேண்டும். இப்போது மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (SAITM) ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. அது சரியான உலகத் தரத்துடன், சிறந்த நியமங்களோடு உருவாக்கப்படவில்லை. பின் கதவுகளாலும் மாணவர்கள் உள்ளே நுளைந்து கற்பதற்கான வசதிகள் உள்ளதாக இருப்பின் அது உடன் நிறுத்தப்பட வேண்டும்.

பொதுவாக எமது மாணவர்களுக்கு 14 பல்கலைக்கழகங்களும், திறந்த பல்கலைக்கழகம் ஒன்றும் போதுமாக இல்லை. உலகின் ஏனைய நாடுகளைப் போன்று தனியாக மருத்துவம், விவசாயம், கணக்கியல், பொறியியல், சட்டம் என பல்கலைக்கழகங்களை அரசு மட்டுமன்றித் தனியாரும் உருவாக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்யும் யாவருக்கும் மூன்றாம் நிலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கான கதவுகள் பல திறக்கப்பட வேண்டும்.

உலகிலுள்ள முக்கிய நிறுவனங்களுக்குத் தேவையான மனித வளங்களை எமது நாடு உருவாக்கலாம். அதன் மூலம் எமது மனித வளம் சருவதேச தரம் வாய்ந்ததாக உருவாக்கப்படும் வாய்ப்புள்ளது. எமக்குத் தேவை ஊக்கமும் வசதியுமே. பாரிய முதலீடு தேவையில்லை. எமது நாட்டில் சிறுவர்களைப் பாடசாலைக்கு சேர்ப்பது போல் இளைஞருக்கான கல்விச் சேர்வு மிகக் குறைவாகும். ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலே இளைஞருக்கான மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புக்கள் மிக அதிகமாகும். அங்கே தனியார் பல்கலைக்கழகங்கள் பரந்தளவில் உள்ளன.

தனியார் மருத்துவக் கல்லூரி என்றதும் கண்மூடித்தனமாக நாம் எதிர்க்கவும் கூடாது. இங்கே பல்கலைக்கழக கல்வியைப் பெறும் தகுதியுள்ள இலச்சக்கணக்கான மாணவர்கள் வாய்ப்பில்லாது இருக்கிறார்கள். அவர்களை இறுதியில் கூலித் தொழிலாளர்களாக மாற்றாது சிறந்த மனித வளமாக மாற்ற வேண்டியது இந்த நாட்டின் பொறுப்பாகும். மாவட்ட மட்டத் தெரிவு முறையிலே பின்தங்கிய மாவட்டத்திலே குறைந்த பெறுபேற்றையுடைய ஒரு மாணவர் பல்கலைக்கழகம் நுழைய, வளர்ச்சியடைந்த மாவட்டத்திலே அதைவிடவும் சிறந்த பெறுபேற்றைக் கொண்ட ஒரு மாணவர் பல்கலைக்கழக வாய்ப்பை இழக்கிறாரே இது ஏன்? இழந்த அந்த மாணவர் பணம் செலுத்தி ஒரு மருத்துவராக வருவதென்பது எந்த வகையிலே சமூக அநீதியாகும்? அவர் எல்லாத் தகுதியையும் கொண்ட மாணவர் என்பதே உண்மை.

இந்த நாட்டின் சூழ்நிலை அவரைத் தடுக்குறது. இப்படியான மாணவர்களுக்கு ஒரு சைட்டம் அல்ல பல சைட்டம்கள் வேண்டும்.

### எமது கல்வியும் எமது மாணவர்களும்

பரீட்சை மையச் சிந்தனை பல்கலைக் கழகங்களையும் விட்டு வைக்கவில்லை. பௌலோ பிரேயர் சொல்வது போல் பல்கலைக் கழகங்கள் நெட்டுருச் செய்து வெறும் தரமற்ற பட்டதாரிகளையே வெளியிடுவதாக விமர்சிக் கின்றார். வங்கிகளிலே பணத்தை வைப்பிலிடுவது போல் விரிவுரையாளர்கள் மாணவர்கள் மத்தியிலே கல்வியை, பாடத்திட்டத்தை *(syllabus)* வைப்பிலிடுவதும் மீண்டும் மாணவர்கள் அதைப் பரீட்சையிலே வெளியிடுவதுமான வங்கி முறையல்ல *(Banking systems)* கல்வி என்கிறார் பிரேயர்.

நமது மாணவர்களும் தரமான கல்வியைப் பெற முயற்சிக்க வேண்டும். மொழித்திறன், தொடர்பாடல் திறன், தலைமைத்துவத் திறன்களும், வேறுபல திறன்களும் எமது பட்டங்களுக்குள் இருக்கும் வண்ணம் நாம் மாற வேண்டும். ஒரே நேரம் பல பட்டங்களைப் பெற்ற ஆளுமைகளாக *(Inter- disciplinary)* நாம் உருவாக வேண்டும். அதுவே இன்றைய தொழிற் சந்தைக்குள் எம்மை அழைக்கும். ஒரே நிறுவனத்திற்கு இரண்டு ஆளுமைகள் தேவையாக *(vacancy)* உள்ள போது ஒரே நபரிடம் இரண்டு தகைமை இருப்பதையே நிறுவனம் விரும்பி உள்வாங்கும். இங்கே இரண்டு திறத்தாரும் பயன் பெறும் முறைமை உருவாகும் *(win win system)*. இதுவே வளர்ச்சியடைந்த நாடுகளின் இன்று காணப்படும் நிலைமை.

எனவே எமது நாட்டின் இளைஞருக்கான கல்வியை மேம்படுத்தி அவர்களைப் பலப்படுத்தும் திட்டங்கள் இன்னும் விரிவாக்கம் பெற வேண்டும். அதற்காக அரசும், மக்களும் மாற வேண்டும், இளையோரும் தங்களைப் பலமான கல்வி பெறும் ஆளுமைகளாக வடிவமைத்துக் கொள்ள வேண்டியதும் முக்கியமாகும்.

கட்டுரையாளர் :
சமூகவியல் கல்வியியல் தொடர்பான கட்டுரைகள் எழுதி வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்விக்கு அடிப்படை ஆராய்ச்சியே

நமது இந்திய உயர்கல்வி அமைப்பு மிகத் தொன்மையானது. நாளந்தா, தக்சசீலம், விக்ரம்சீலா, காஞ்சிக் கண்டிகை போன்ற பண்டைய இந்தியப் பல்கலைக்கழகங்கள் உலகிற்கே அறிவு வெளிச்சம் ஊட்டியுள்ளன.

கி.மு.5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாளந்தா பல்கலைக்கழகம் நமது இந்தியாவின் முதற்பல்கலைக்கழகமாக மட்டுமல்ல, உலகிற்கே முன்னோடிப் பல்கலைக்கழகம் என்று சொல்லும் அளவுக்கு அதன் கட்டமைப்பும், கற்றல் - கற்பித்தல் கோட்பாடுகளும், மேலாண்மை முறைமையும் அமைந்திருந்தன.

இன்று உலகப்புகழ் பெற்றுள்ள ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களோடு ஒப்பிடுகின்றபோது நாளந்தா பல்கலைக்கழகம் 700 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது ஐரோப்பாவின் பலோக்னா பல்கலைக்கழகத்தோடு ஒப்பிடுகின்றபோது 600 ஆண்டுகள் தொன்மையானது.

கி.மு.5-ஆம் நூற்றாண்டில் இருந்து 900 ஆண்டு செயல்பட்ட நாளந்தா பல்கலைக்கழகத்தில் உலகின் பல நாடுகளில் இருந்தும், குறிப்பாக சீனா, கொரியா, ஜப்பான், திபெத், இந்தோனேஷியா, பாரசீகம், துருக்கி, இலங்கை, மங்கோலியா போன்ற நாடுகளில் இருந்து மாணவர்கள் வந்து பயின்றுள்ளனர்.

இன்றுள்ள உலக அளவிலான உயர்கல்வி அமைப்பிற்கு நாளந்தாவே அடித்தளம். உயர்கல்வியின் சித்தாந்தமே, மாணாக்கர்களிடம் ஆய்வுச் சிந்தனையைத் தூண்டி சமூக மேம்பாட்டிற்கான கோட்பாடுகளை, புத்தாக்கங்களை உருவாக்குவதும், உருவாக்கப்பட்டவைகளை ஆராய்ந்து மீள் உருவாக்கம் செய்வதும்தான். இதுதான் நாளந்தாவின் அடிப்படைப் போதனை முறை.

இன்று சர்வதேச அளவில் பின்பற்றப்படும், மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத்தேர்வு *(Entrance Test)*, ஆசிரியர்களுக்கான தகுதித்தேர்வு *(Eligibility Test)*, ஆசிரியர் மாணவர் விகிதம் *(Pupils Teachters Raion)*, தங்கிக் கல்வி பயிலும்முறை *(Residential Student)*, மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் *(Merit Scholorship)*, கற்பித்தல் *(Teaching)*, விரிவுரை *(Lecture)*, செய்து காட்டல் *(Demonstration)*, சிந்தனைக் களங்களை முன் வைத்தல், நூலகம் (நாளந்தாவில் ஒன்பது தளங்களைக் கொண்ட மூன்று கட்டடங்களில் லட்சக்கணக்கான நூல்கள் துறைவாரியாகப் பிரித்து, மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டிருந்ததாக யுவான்சுவாங் குறிப்பிடுகிறார்) ஆகியவை நாளந்தா வழங்கியதாகும்.

இந்தப் பின்புலத்தில், நம் தொன்மையின் தொடர்ச்சியாக இப்போதுள்ள இந்திய உயர்கல்வி அமைப்பினை, அதன் ஆழ அகலங்களை மதிப்பிடுகின்றபோது உலகத்தர வரிசைப் பட்டியலில் முதல் 200 இடங்களில் நமது இந்தியப் பல்கலைக்கழகங்கள் ஒன்றுகூட இடம் பெறவில்லை என்றபோதிலும் நமது உயர்கல்வி அமைப்பு விரிந்த தளத்தில், மிகப்பெரிய கட்டமைப்பு கொண்டதாக உள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை.

2015-2016ஆம் ஆண்டிற்கான இந்திய உயர்கல்வி அளவீடு *(All India Survey of Highder Education)* அறிக்கையை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அதன் விவரப்படி சென்ற ஆண்டு இந்திய அளவில் 757 பல்கலைக்கழகங்கள் இருந்த நிலையில் அது தற்போது 799-ஆக அது உயர்ந்துள்ளது. இதில் 277 தனியார் பல்கலைக்கழகங்களாகும்.

கல்லூரிகளின் எண்ணிக்கையைப் பொருத்தவரை 2014-2015இல் 1015 புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து இன்றைய நிலையில் 39,071 கல்லூரிகள் உள்ளன. இதில் அரசால் நிர்வகிக்கப்படுபவை 7,988 மட்டுமே. 27,679 கல்லூரிகள் அதாவது 78 சதவீதக் கல்லூரிகள் தனியார் வசம் உள்ளன.

தமிழ்நாட்டில் 58 பல்கலைக்கழகங்களும் 2,344 கல்லூரிகளும் உள்ளன. இதில் 315 மட்டும் அரசுக் கல்லூரிகள். 248 அரசு உதவிபெறும் கல்லூரிகள். 1,781 தனியார் சுயநிதிக் கல்லூரிகள்.

18-23 வயதுக்கு உட்பட்ட மக்கள் தொகைக்கு இந்திய அளவில் சராசரியாக 28 கல்லூரிகளும், தமிழ்நாட்டில் 32 கல்லூரிகளும் உள்ளன.

இந்திய அளவில் உயர்கல்வியில் 18 முதல் 23 வயதுக்கு உட்பட்டவர்களின் மாணவர் சேர்க்கை விகிதம் *(Gross Enrollment Ratio)* 2014-2015இல் 23.6 சதவீதமாக இருந்தது. அது 2015-2016இல் 24.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதில் ஆண்கள் 24.5 சதவீதம், பெண்கள் 22.7 சதவீதம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 19.9 சதவீதம் மலைவாழ் மக்கள் 14.2 சதவீதம்.

தமிழ்நாட்டில் இந்த எண்ணிக்கை இந்திய சராசரியான 24.5 சதவீதம் தாண்டி 44.3 சதவீதமாக எட்டியுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் 34.4 சதவீதமும், மலைவாழ் மக்களில் 31.8 சதவீதமாகவும் உள்ளது.

உயர்கல்வியில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், கர்நாடகம், ராஜஸ்தான், ஆந்திரம், தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய ஏழு மாநிலங்கள் முன்னோடியாக உள்ளன.

இந்திய அளவில் மாணாக்கர்கள் அதிகம் தேர்வு செய்யும் படிப்பு கலை, அறிவியல் பாடங்களே. 2015-2016 புள்ளிவிவரங்களின்படி மாணவர்களில் 40 சதவீதம் கலை, இலக்கியம், சமூக அறிவியல் பாடங்களிலும், 16 சதவீதம் அறிவியல் பாடங்களிலும், 14 சதவீதம் வணிகவியல் பாடங்களிலும் சேர்ந்துள்ளனர். 15.6 சதவீதம் மாணாக்கர்கள் மட்டுமே பொறியியல் தொழில்நுட்பப் படிப்புகளில் சேர்ந்துள்ளனர்.

கடந்த 2015-2016 கல்வியாண்டில் மட்டும் 165 நாடுகளில் இருந்து 45,425 மாணாக்கர்கள் இந்தியாவுக்கு உயர்கல்வி பெற வந்துள்ளனர். இதில் நேபாளம், ஆப்கானிஸ்தான், பூட்டான், நெசீரியா, சூடான் போன்ற நாடுகளைச் சார்ந்தவர்களே அதிகம். இருப்பினும், இந்தியப் பல்கலைக்கழகங்கள் ஏன் ஒன்றுகூட உலகத்தர வரிசையில் இடம்பெற முடியவில்லை?

உலகத்தர வரிசைப் பட்டியலில் தொடர்ந்து முதல் 25 இடங்களை பிடித்து வரும் ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி, கலிபோர்னியா இன்ஸ்ட்டியூட் ஆப் டெக்னாலஜி, ஸ்டாண் போர்டு யுனிவர்சிடி, ஹார்ட்வேர்டு யுனிவர்சிடி, பிரின்ஸ்டன் யுனிவர்சிடி, லண்டன் இம்பீரியல் காலேஜ், யுனிவர்சிடி ஆப் கலிபோர்னியா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ யுனிவர்சிடி இவற்றின் செயல்பாடுகளை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

உயர்கல்வியின் நான்கு தூண்களாக கற்பித்தல் (Teaching), ஆராய்ச்சி (Research), மேற்கோள்களில் இடம்பெறுதல் (Citation), சர்வதேச அளவிலான வெளிப்பாடு (International Outlook) ஆகியவை உள்ளன.

2016-இல் உலகத் தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்த பல்கலைக் கழகங்களில் ஆசிரியர் - மாணாக்கர் விகிதம் சராசரியாக 6 மாணாக்கர்களுக்கு 3 ஆசிரியர்கள் என்ற விகிதத்தில் உள்ளது.

இதில் முதல் 100 இடங்களைப் பிடித்த பல்கலைக்கழங்களில் சராசரியாக 16 மாணாக்கர்களுக்கு 5 ஆசிரியர் என்ற விகிதத்திற்குக் குறையாமலே இருப்பதைக் காணமுடிகிறது. நமது இந்தியாவில் 2015-2016 கணக்குப்படி சராசரியாக 21 மாணாக்கர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலே ஆசிரியர்கள் எண்ணிக்கை இருக்கிறது.

ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் போலவே ஆசிரியர்களின் தகுதியும் முதன்மை யானது. ஒரு பல்கலைக்கழகத்தின் தகுதி என்பது அங்கு பணியாற்றும் ஆசிரியர்களின் தகுதியைப் பொறுத்தே அமையும்.

2016-இல் உலகத் தர வரிசைப்பட்டியலில் இடம்பெற்ற அமெரிக்காவைச் சேர்ந்த மாஸாசூசெட் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் *(Massachusett Institute of Technology)* தலைவர் மார்ட்டிஸ்மிட் "உலகின் தலைசிறந்த இளம் திறமைகளை அடையாளம் கண்டு எங்கள் நிறுவனத்தில் பணி அமர்த்தி வருகிறோம். இப்போது எங்கள் நிறுவனத்தில் பணியாற்றுபவர்களில் 42 சதவீதத்தினர் அமெரிக்காவிற்கு வெளியே பிறந்தவர்கள்தான்" என்று குறிப்பிடுகிறார்.

திறமைகளைத் தேடிக் கண்டறிந்து பணியமர்த்துவது உயர்கல்வி நிறுவனங்களின் இப்போதைய உடனடித் தேவையாக இருக்கிறது.

உயர்கல்வி நிறுவனங்கள் மதிப்பும் தகுதியும் பெறுவது, அதன் ஆராய்ச்சி ஈடுபாட்டிலும் வெளிப்பாட்டிலும்தான். உயர்கல்வியின் தூண்களில் ஒன்று ஆராய்ச்சி. பேராசிரியர்களும், ஆய்வு மாணவர்களும் தனித்தனியாகவும், கூட்டாகவும் இணைந்து ஆராய்ச்சித் திட்டங் களில் ஈடுபடுவதும், ஆராய்ச்சி வெளிப்பாடு களுக்குக் காப்புரிமை பெறுவதும் அந்த நிறுவனத்தின் நிலையை உயர்த்தும்.

நம் இந்தியாவில் உயர்கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சிப் படிப்பின் தரம் உய தீவிர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். 2015-16 மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் அறிக்கையின்படி மொத்தக் கல்லூரிகளில் 1.7% கல்லூரிகளில் மட்டுமே பி.எச்டி. ஆராய்ச்சிப் படிப்பு உள்ளது. உயர்கல்வியில் மொத்த மாணவர்களில் 0.4% ஆராய்ச்சிப் படிப்பில் சேர்கின்றனர்.

கடந்த கல்வி ஆண்டில், 1,26,451 பேர் பி.எச்டி. படிப்பிலும் 42,523 பேர் எம்.பில். படிப்பிலும் சேர்ந்துள்ளனர். தமிழ்நாட்டில்தான் இந்த எண்ணிக்கை அதிகம். பி.எச்டி.யில் 22,221 பேரும், எம்.பில். படிப்பில் 19,509 பேரும் சேர்ந்துள்ளனர்.


கர்நாடகம், தில்லி, மகாராஷ்டிரம் தவிர மற்ற மாநிலங்களில் ஆராய்ச்சிப் படிப்புகளில் ஐந்தாயிரத்திற்கும் குறைவானவர்களே சேர்ந் துள்ளனர். ஆராய்ச்சித் துறையில் நாம் அடைய வேண்டிய தூரம் மிக அதிகம். அதற்கான முயற்சிகளும், திட்டங்களும் தேவை.

கட்டுரையாளர் :
பேராசிரியர் - தமிழ்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எஸ்.எல்.மன்சூர்



# பல்தரக் கற்பித்தல் முறைமை ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாகுமா?

பாடசாலை மட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுவதுண்டு. அதில் முக்கியமான ஒரு பிரச்சினையாக தோன்றுவது ஆசிரியர் தட்டுப்பாடு. ஆசிரியர் தட்டுப்பாடு என்பது ஆசிரியர் ஒருவர் இடமாற்றலாகிச் செல்கின்றபோது, ஆசிரியர் பதவி உயர்வுபெற்றுச் செல்கின்றபோது, ஆசிரியர் ஓய்வு பெறுகின்றபோது, நீண்டகால ஓய்வில் ஆசிரியர் வெளிநாடு அல்லது சம்பளமற்ற லீவு பெறுகின்றபோது பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. ஆனால் சில பாடசாலைகளில் அவ்வாறில்லை.

இன்று பல ஆசிரியர்கள் மாகாணங்களில், வலயங்களில் மேலதிகமாக இருந்தாலும் சில பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு என்பது தொடர்கதையாகவே காணப்படுகின்றது. மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்கள் இருக்கவேண்டும் என்றும், பின்னர் வகுப்பறைக்கு ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு சேவையாற்ற வேண்டும் என்றும் சுற்றுநிருபங்கள் கூறுகின்றன. ஆனால் பல பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு என்பது வருடம்தோறும் அதிபர்களாலும், பெற்றோர்களாலும், ஏன் கல்வி அதிகாரிகளாலும் கூறப்பட்டு வருகின்ற விடயமாகும்.

மொத்தமாக பார்க்கிறபோது ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஆனால் வகுப்பறையாகப் பார்க்கின்றபோது ஆசிரியர் தட்டுப்பாடு காணப்படுகின்றது. மேலும், சில ஆசிரியர்கள் எடுபிடி வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதாவது கற்பிக்க முடியாத நிலையில் சோபிழந்துபோன, வயதுபோன, சுகவீனம் காரணமாக தன்னால் கற்பிக்க முடியாது என்று கூறுகின்ற ஆசிரியர்கள் ஒரு வலயத்தில் பலர் காணப்படுவார்கள்.

இவர்கள் மாணவர்களுக்கு சிறந்த கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள முடியாமல் தடுமாறுகின்றனர். அதிகாரிகளிடம் இவரை எடுங்கள் என்று அதிபர்கள் கூறியபோதிலும் வைத்துக்கொள்ளுங்கள் பார்ப்போம் என்று தட்டிக் கழித்துவிடுவர். இவரோ, பாடசாலைகளில் கற்பிக்கின்றவர்களையும் குழப்பி, தானும் கற்பித்தலில் ஈடுபடாது, இறுதியில் மாணவர்களின் பின்னடைவுக்கு காரணர்களாவார்கள். இத்தகையோர்களும் ஆசிரியர் பட்டியலில் காணப்படுவதால் மாகாணத்திற்கான மொத்த ஆசிரியர் எண்ணிக்கை, கணக்கில் சரியானதாகவே இருக்கும். ஆனால் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை.

இந்நிலையில்தான் பல்தரக் கற்பித்தல் முறைமையை அமுல்படுத்தலாம் என்பது கல்வி ஆய்வாளர்களது முடிவாகும். இந்த முறையை வெற்றிகரமானதாக கொண்டு செல்வதற்கும், இம்முறையை ஒழித்துக் கட்டுவதற்கும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும்.

ஒருபுறத்தில் பாடசாலையின் பூ மரத்திற்குக் கீழ் பேசிக் கொண்டிருக்கவும், பாடசாலையின் கதவு திறப்பதற்கும், மாணவர்கள் வெளியே போகின்றார்களா? என்று கண்காணிப்பதற்கும், காரியாலத்தில் அதிபரோடு அல்லது ஏனைய ஆசிரியர்களோடு வீண் கதைபேசி காலத்தைக் கழிக்கின்ற ஆசிரியர்களாகவே சிலர் காணப்படுகின்றனர்.

இன்று ஆசிரியரின் சம்பளம் நிறைவான சம்பளமாகும். அந்த நிறைந்த சம்பளத்தைப் பெறுகின்றபோது கடுமையான கஷ்டத்தை அனுபவித்து, பல்தரக் கற்பித்தல் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்ற ஆசிரியர் ஒருவருக்கு எதுவிதமான கற்றல் கற்பித்தலிலும் ஈடுபடாத ஆசிரியர் பெறுகின்ற அதே சம்பளத்தை கஷ்டப்பட்டு பெறுகின்றபோது உண்மையாக வேலைசெய்கின்ற ஆசிரியருக்கு உளரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தி விடுகின்றது.

ஒரு பாடசாலையில் கடந்த இரண்டு வருடங்களாக ஆரம்பக்கல்வி வகுப்பறைகளில் இரண்டு ஆசிரியர்கள் தட்டுப்பாடு காணப்படுகின்றன. ஆனால் அதே பாடசாலையில் இரண்டு ஆசிரியர்கள் இருக்கின்றனர். அவர்கள் ஒருவருக்கும் கற்பிக்கத் தெரியாது. அரசியல்வாதிகளின் கைபொம்மைகளான இவர்கள் வேறு பாடசாலைகளுக்கும் இடமாற்றலாகி செல்லாதவாறு இரும்புத்திரை கொண்டு மூடிவைத்துள்ளனர்.

ஆசிரியர் தட்டுப்பாடு இருக்கின்ற பாடசாலை. நாம் ஒரு பாடத்தையாவது கற்பிப்போம் என்று அதிபர் கூறினாலும் நான் இதோ வெளியே போகப்போகின்றேன் என்று நழுவிவிடுவார்கள். இந்நிலையில் பல்தரக் கற்பித்தல் முறையின் மூலமாக பரந்த மனம் கொண்ட இரண்டு ஆசிரியைகள் அந்த வகுப்பு மாணவர்களை தத்தெடுத்து, இவ்வகையான பல்தரக் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக இம்முறைமையானது ஆரம்பக் கல்வி வகுப்பறைகளுக்கு மிகப்பொருத்தமான ஒரு முறையாகும். இலங்கையில் அதிகமான பாடசாலைகள் ஆரம்பக்கல்வி வகுப்பறைகள் கொண்ட பாடசாலைகளாகவே காணப்படு கின்றன. அதிலும் அதிகமான பாடசாலைகள் சிறிய பாடசாலைகளாகும். இங்கு தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரையான 5 வகுப்புக்கள் காணப்படும். மொத்தமாக 50க்கும் உட்பட்ட மாணவர்களே கற்பர். இவ்வாறான பாடசாலைகளில் இரண்டு ஆசிரியர் இருந்தால் ஒரு ஆசிரியருக்கு இரண்டு (முதன்மைநிலை-1) வகுப்புக்களும், மற்றயவருக்கு 3 வகுப்புக்க ளையும் (முதன்மைநிலை 2,3) ஒன்றிணைத்து பல்தரக்க கற்பித்தலை மேற்கொள்ள முடியும்.

அதாவது பல தரத்தையுடைய மாணவர்களுக்கு ஆசிரியர் ஒருவர், ஓரிடத்தில் (வகுப்பறையில்) கற்பிக்கும் ஒரு முறையே இதுவாகும். இந்த முறையானது ஒரே நேரத்தில் பல வகுப்புக்களுக்கு கற்பிக்கக் கூடியதாக இருக்கும்.

வசதி குறைவான கிராமியச் சூழலில் உள்ள பாடசாலைகளில் அதிபரோடு ஓரிரு ஆசிரியர்களே காணப்படுவர். இப்பாடசாலையின் சூழலில்கூட கல்வியறிவற்ற பெற்றோர்களே அதிகம் காணப்படுவர். இங்கு பெற்றோர்கள் அதிகம் கவனம் கொண்டு தன்னுடைய பிள்ளையை சிறந்த முறையில் கற்பிப்பதற்கோ, கற்பதற்கோ எவ்விதமான வசதிகளும் அற்ற நிலையில் இத்தகைய பல்தரக் கற்பித்தல் முறையின் ஊடாக ஆசிரியரில் முழுமையான நம்பிக்கை கொண்ட மாணவர்களாகவே காணப்படுவார்கள்.

ஆசிரியரும் மனசு வைக்காமல் குறித்த ஒரு வகுப்பறையை மாத்திரம் எடுத்து கற்பித்துக் கொண்டிருந்தால் ஏனைய வகுப்பு மாணவர்களின் நிலை அந்தோ பரிதாபம். ஆதலால்தான் இம்முறையானது சிறந்ததாக அமைகின்றது. இவ்வாறு ஒரு பாடசாலை காணப்படுமாக இருந்தால் அதன் முகாமைத்துவமும் ஏனைய பாடசாலைக ளைவிட வேறுபட்டதாகவும் காணப்படும்.

இவ்வாறான பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு உதவுதல் அதிகாரிகளினது கடமையாகும். கற்கும் மாணவர்களின் எதிர்கால நடவடிக்கைகள், அடைவு முன்னேற்றங்களில் அதிகளவான நம்பிக்கைகள் இன்றியும் காணப்படலாம். இருந்தாலும் அவர்களது எதிர்கால வாழ்வுக்கு அவசியமான வழிகாட் டுதல்களையும், ஆற்றுப்படுத்தல்களையும் ஆசிரியர்களே மேற்கொண்டு வழிப்படுத்துதல் அவசியமாகும்.

இவ்வாறு பல்தரமுடைய மாணவர்களை அந்தந்தப் பாடசாலையினதும், சூழலையும் பொறுத்து வேறுபட்டாகினும் சில அம்சங்களுக்கு பல்தரப் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் சிறப்பான, திறமையான நிருவாகியாகவும், கலைத்திட்டத் திட்டமிடுனராகவும், கல்வி ஆய்வாளராகவும், சமூக ஆற்றுப்படுத்துனர் ஆகவும் தமது அனுபவங்களையும், அணுகுமுறை களையும் ஒன்றிணைத்து பல்தரக் கற்பித்தலை இவ்வகைப் பாடசாலையில் கற்பிக்க முடியும்.

பொதுவாக ஒரு வகுப்பறையில் தரம் ஒன்று, தரம் இரண்டுக்குரிய மாணவர்களைக் கொண்டே இரண்டு வகுப்புக்கும் இரண்டுவிதமான முறையில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். பல்தரக் கற்பித்தலை மேற்கொள்கின்ற பாடசாலையில் வெற்றிகரமான செயற்பாடு களுக்கு அப்பாடசாலையின் பல்துறை சார்ந்த நியமமுறையிலான ஒழுங்கமைப்பினைத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்.

பல்தரக் கற்பித்தல் அணுகுமுறைக்கு உகந்த முறையில் மாணவர்களைக் குழுக்களாக்கி, நேரத்தையும் பயன்தரக்கூடிய வகையில் பகிர்ந்து, பாடசாலையையும், வகுப்பறையையும் கற்றலுக்கு ஏற்றவிதமான வகையில் மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்குப் பொறுப்பாக்கப்பட்ட ஆசிரியரைச் சார்ந்ததாகும்.

மாணவர்கள் பல்வேறு ஆளுமைகளைக் கொண்டவர்களாக காணப்படுவார்கள். அதற்கேற்றவிதமான முறையில் மாணவர்களை குழுக்களாக்கி கற்பிக்க முடியும். மேலும், அந்த குழுவில் பின்வரும் விடயங்களையும் கவனத்திற் கொண்டு குழுக்களாக்கவும் முடியும்.

1. அறிவுமட்டத்துக்கேற்ப பிரிக்கப்பட்ட சிறு குழுக்கள்
2. திறன் அடிப்படையிலான குழுக்கள்
3. வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களை செய்யும் குழுக்கள்
4. ஒத்த வயதுடைய குழுக்கள்
5. வகுப்பு மட்ட அடிப்படையிலான குழுக்கள்
6. ஆர்வத்தின் அடிப்படையிலான குழுக்கள்

இதுபோன்ற முறையில் குழுக்களை அமைத்து ஒவ்வொரு குழுவுக்கும் பொருத்தமான முறையில் பாடங்களை வழங்கியும், கற்றல் நிகழ்வுகளை வழங்கியும் மாணவர்களை கற்றல் செயற் பாட்டிற்குள் நுழையச் செய்யலாம். எல்லா வற்றுக்கும் மேலாக ஒவ்வொரு குழுவினதும் வேலைகள் முடிவடைந்ததன் பின்னர் அல்லது தனித்து மாணவர் ஒருவர், ஆசிரியர் கொடுத்த வேலையை செய்து விட்டார் என்றால் அடுத்த கட்டம் என்ன வேலையை வழங்க வேண்டும் என்பதையும் நினைவிற் கொண்டு கற்பிப்பதற்கு ஆசிரியர் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

மாணவர் மேலும் ஒருபடி மேல்நோக்கிச் செல்வார் என்பதையும் ஆசிரியர் அறிந்திருந்து தயார் நிலையில் இருக்க வேண்டும். இங்கு உபகரணப் பயன்பாடுகள், ஆரம்பக் கல்வி வகுப்பறைக்குப் பொருத்தமான முறையில் தயாரிக்கப்பட்டு ஆசிரியர் வைத்திருக்க வேண்டும். ஒருவகுப்புக்கு வாசிப்பினை வழங்கியிருந்தால் அடுத்த வகுப்பு அதேபோன்ற தொரு செயற்பாட்டினையே வழங்கவேண்டும். இரண்டு வகுப்பறைகளும் ஒன்றாக இருக்கின்ற போது மாணவர்களது தொல்லை அதிகளவில் காணப்படலாம். இதனையும் சமாளித்து, மாணவர்களது செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி பல்தரக் கற்பித்தலை வெற்றிகரமானதாக முன்கொண்டு செல்லமுடியும்.

ஆனால் இந்த முறையில் இன்று ஒருசில பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் பல பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு காணப்படுகின்றது. தரம் 1 - 5 வரையான வகுப்பறைகள் உள்ள சில பாடசாலைகளில் 20 அல்லது 30 மாணவர்களே காணப்படுவர். இங்கு ஐந்து வகுப்புக்கள் காணப்படும். ஆனால் ஐந்து ஆசிரியர்களும் தேவை என்றே அதிபர் கூறுவார்.

பல்தரக் கற்பித்தல் ஊடாக மேற்கொள்வதற்குரிய குறைந்தளவு மாணவர்கள் இருக்கின்ற இப்பாடசாலையில் அதனை மேற்கொள்ளுமாறு கூறினாலும் வகுப்புக்கு ஓர் ஆசிரியர் தேவை என்கிற நிலைமையில் ஆசிரியர் இல்லாத வகுப்பு பாடசாலையினது வேலைக்குரிய மாணவர்களாக மாற்றப்பட்டு, மேலும் கல்வியை மறந்துபோகும் நிலைமைக்கு இந்த மாணவர்கள் தள்ளப்படுகின்றனர். எனவேதான், இன்று பல ஆரம்பக் கல்வி வகுப்பறைகளில் அதுவும் குறைந்த எண்ணிக்கையுள்ள மாணவர்கள் கற்கின்ற வகுப்பறைகளை இத்திட்டத்தின் ஊடாக கற்பிப்பதற்கும், ஆசிரியர் தட்டுப்பாட்டிலிருந்து சற்று விலகியிருப்பதற்கும், இம்முறையின் ஊடாக கற்பிப்பதற்கும் ஆசிரியர்கள் தியாக சிந்தனையுடன் செயற்படுதல் அவசியமானதாகும்.

கட்டுரையாளர் :
ஆசிரிய ஆலோசகர் கல்வியியல் தொடர்பில் தொடர்ந்து கட்டுரைகள் ஆய்வுகள் மேற்கொண்டு வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆயிஷா இரா நடராசன்

# உங்கள் குழந்தை பள்ளியில் மதிக்கப்படுகிறதா?

*"நான் மாணவர்களுக்கு எதையும் கற்றுக்கொடுப்பது கிடையாது. அவர்கள் கற்றுக்கொள்ளும் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதோடு சரி"*

*- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்*

"தாரே சமீன்பர்" படம் நமது கல்வி குறித்த முக்கிய பதிவு என்பதில் சந்தேகம் இல்லை. "டிஸ்லெக்சியா" எனும் கவனக்குறைவு கொண்ட ஒரு குழந்தையை ஒரு ஆசிரியர் நினைத்தால் தனது அன்பால், கவனிப்பால் அக்குழந்தையின் உள்ளே இருக்கும் அளவற்ற ஆற்றலை வெளிக்கொணர்ந்து வெற்றியாளராக்கிக் காட்ட முடியும் என்பதை மிக அழகாக முன்வைத்த படம் அது. ஆசிரியர் - மாணவர் உறவு குறித்த அபூர்வமான பதிவு.

**சிலர் சொல்கிறார்கள்:** "பெற்றோர் என்போர் வீட்டிலிருக்கும் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் என்போர் பள்ளியில் இருக்கும் பெற்றோர்கள். இந்தக் கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா...?

மாணவர் - ஆசிரியர் உறவு என்பதும் பெற்றோர் - குழந்தை உறவு என்பதும் ஒன்றல்ல என்கிறார் ரஷ்ய கல்வியாளர் ஆண்டன் மக்கெரென்கோ. இதை நாம் ஒரு அட்டவணை மூலம் சரிபார்க்க முடியும். முயற்சிப்போமா...?

| பெற்றோர் | ஆசிரியர் |
|---|---|
| ஒன்று அல்லது இரண்டு குழந்தை | முப்பது, நாற்பது மாணவர் |
| இயற்கையிலேயே அமைந்த உறவுப் பாலம் | கல்வி அமைப்பு இருவரையும் இணைக்கிறது |
| உரிமையாளர் *(Ownership)* | கடமை *(Responsibility)* |
| நிரந்தர உறவு | ஆண்டுக்கு ஆண்டு வகுப்பிற்கு வகுப்பு மாறும் |

ஆக, ஒரு குழந்தை மீதான ஆசிரியர் உறவு வேற மாதிரியானது. அது ராணுவத்தைப் போல, நடத்தை விதிகளைப் பின்பற்றுபவராக குழந்தைகளையும், கண்காணிப்பவராக ஆசிரியர்களையும் நிறுத்தி உறவின் அர்த்தம் சிதைந்த அதிகார அமைப்பாய் உருவானது ஏன்? நமது இன்றைய இந்த நவீன கல்வியின் தோற்றம் கிருத்துவ தேவாலயக் கல்வி. ஏன், குருகுலக் கல்வியில் தண்டனைகள் இருக்கவில்லையா? "ஆசிரியர் அனைத்தும் அறிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு பணிவிடை செய்து அவரிடம் அடிமை மாதிரி கற்க வேண்டும்" என்பதல்லவா நமது பாரம்பரிய கல்வி. இடையில் வந்த தொழிற்புரட்சிக் கல்வியான ஆங்கிலேயர் கல்வி என்ன செய்துள்ளது..?

குரு சிஷ்யன் உறவுக்கு பிறகு வருவோம்.

"எதிரில் அமர்ந்திருப்பது உயிருள்ள மனித உருவங்கள் என்ற பிரக்ஞை கூட இல்லாமல் இயந்திரம்போல தனக்கு வழங்கப்பட்ட பாடப்பொருளை அவர்களது தலையைத் திறந்து வங்கியில் பணம் போடுவது போலவும் கொட்டி நிரப்பும் பணியை மணிக்கணக்கில் எவ்வகை இடைவெளியுமின்றி எட்டு ஒன்பது மணி நேரம் தொடரும் அஃறிணை செயல்பாடாக கல்வி மாறிவிட்டது" எனும் குற்றச்சாட்டில் நியாயம் இருக்கிறதா? இல்லையா?

ராணுவம் போலவே கெடுபிடிகளும் கொடிய ஒழுக்க நடத்தை விதிகளும் இங்கேயும் உண்டு. சின்ன விதி மீறல்களுக்குக் கூட ஒரு காலத்தில் (ஏன் இப்போதும் பல இடங்களில்) ரத்தம் சிந்த வைக்கும் தண்டனைகளை வழங்கும் அதீத அதிகாரங்களுடன் ஆசிரியர்கள். ஒழுக்கநெறி எனும் பெயரில் ஆங்கிலேயர் தன் சட்டப்படி நடக்கும் பிரஜைகளை உருவாக்கிட அவர் கையில் தந்த அந்த அடக்குமுறைப் பிரம்பு பல மாமனிதர்களை பள்ளியை விட்டே விரட்டிய வரலாறும் உண்டு.

அறிவியல் ஆசிரியர் விட்ட அறையினால் கேட்கும் திறனை இழந்த எடிசன், நைய புடைக்கப்பட்டதால் நிரந்தர தழும்புகளான "வரிக்குதிரை" எனும் பட்டப்பெயர் பெற்ற கணிதச் சக்கரவர்த்தி காரல் பெடரிக் காஸ், அத்துமீறலுக்காக கல்விச்சாலைகள் தந்த விநோதத் தண்டனைகளால் பார்வையே இழந்த மில்டன்... இப்படியாக தொடரும் அந்த பிரம்மாண்ட பட்டியலில் எழுத்தாளர் அகதா கிறிஸ்டி முதல் ஆறாம் வகுப்பில் ஆசிரியரின் (வீட்டுப் பாட பிரச்சினை) தாக்குதலில் பள்ளியை துறந்த நமது ஜி.டி.நாயுடு வரை பலரும் உள்ளனர். ஆங்கில நாவல்களான ஆலிவர் ட்விஸ்ட் (சார்ல்ஸ் டிக்கின்ஸ்) ஹிக்கில்பரிஃபின் சாகசங்கள் (மார்க்ட்வெயின்), ஆர்.எல்.ஸ்டீபன்சன் மற்றும் ஆர்.கே.நாராயண் படைப்புகளில் எல்லாம் வரும் வகுப்பறை தர்பார் காட்சிகள் வாசிக்க கூசுபவை. கண்டிப்பான ஆசிரியர்களே கல்வியில் விற்பன்னர்களாக வர்ணிக்கப்பட்டார்கள். சாக்குக் கட்டிகளை விட கையில் பிரம்பே பிரதானமாக இருந்தது. அவமானமே கல்வி... அதிகாரமே வகுப்பறை தர்பார்....

"ஆனால் இன்று நாங்கள் அடிப்பது இல்லை... பிரம்பை எப்போதோ கைவிட்டோம்" என்பது பெரும்பான்மை ஆசிரியர்களின் கூற்று "ஆனால் அது நல்லதே கிடையாது.... குழந்தைகளின் ஒழுங்கு சீர்குலையும்.... கண்டிப்பும் பயமும் இல்லை என்றால் சமூகம் சீரழியும்" என்பது அவர்களது வாதம். நடத்தைப் பிறழ்வு என்பது ஒரு புறம் இருக்கட்டும். பெரும்பாலான ஆசிரியர்கள், "எதையுமே கண்டுகொள்ள வேண்டியதில்லை" எனும் நிலையில் இருப்பது இன்று மிகுந்த கவலை தரும் சூழல் ஆகும். "திட்டினால் மெமோ... அடித்தால் டிஸ்மிஸ்... நமக்கேன் வம்பு" என்பது அவர்களது அணுகுமுறையாக உள்ளது. இதனால் பெரும்பாலான நமது பள்ளிகளில் "எக்கேடோ கெட்டுப் போகட்டும்" என குழந்தைகள் அவர்கள் போக்கிற்கு விடப்படும் ஆபத்து உள்ளது.

எட்டாம் வகுப்பு வரை எந்தக் குழந்தையையும் இடைநிறுத்த (பெயில்) முடியாது. பாடம் நடத்தினாலும் நடத்தா விட்டாலும் தேர்ச்சி நிச்சயம். ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும் என்பதும் சேர்ந்து இன்று தனது பணி குறித்து பெரிய ஊக்கமின்மை *(De-Motivation)* ஆசிரியர்கள் இடையே உள்ளது என்பதே உண்மை.

உலகளாவிய குழந்தை உரிமைச் சட்டங்கள், ஊடகங்களின் பிரம்மாண்ட வளர்ச்சி, மனித உரிமை மீறல் குறித்த பொது அக்கறை இவற்றின் விளைவாகவே கல்வியில் மாற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மொழியப்பட்டுள்ளன என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டியுள்ளது. ஆசிரியராக ஒருவர் தனது பணியை தக்க வைக்க தனது துறை அல்லது பாடத்தில் சிறந்த அறிவு பெற்றிருந்தால் மட்டுமே போதாது. அவருக்கு வகுப்பறை உளவியல் தேவை. நேரிடை விளைவு நடத்தை ஆக்கம் *(Positive discipline)* ஆசிரியர் - மாணவர் உறவு குறித்த உளவியல், மாணவர்கள் ஒழுங்கு மீறி ஏன் நடக்கிறார்கள் தடுப்பது எப்படி என தன் பணி சார்ந்த வழிகாட்டுதல் தேவை.

ஆண்டன் மக்கெரென்கோ ஆசிரியர் மாணவர் உறவு என்பதை ஒரு கால்பந்து அணியோடு ஒப்பிட்டார். ஒரு கேப்டனுக்கும் ஏனைய விளையாட்டு வீரர்களுக்கும் இடையிலான உறவு அது என்றார் அவர். ரஷ்யாவில் வீதியில் திரிந்த யாருமற்ற குழந்தைகளை ஒன்றிணைத்து விடுதிப் பள்ளிகளைக் கட்டமைத்தவர். 1917ல் குழந்தைகளுக்கான அடிப்படை உரிமைகள் குறித்த உலகின் முதல் அறிக்கையை, தலைவர் லெனின் அவர்களது துணைவியார் நாடெஷ்தா குரூப்ஸ்காயா, அலெக்சாந்தர் போக்டானவ் போன்றவர்களோடு இணைந்து உருவாக்கியவர் மக்கெரென்கோ. குழந்தைகளுக்கே முதல் உரிமை *(First for Children)* எனும் உலகப் பிரசித்தி பெற்ற முழக்கத்தை முன்வைத்தவர்.

*நமது பள்ளிக் கல்வியில் விளையாட்டுப் பாட வேளை (Physical Education) என்கிற ஒன்று இணைக்கப்பட்டதே 1927ல் மக்கெரன்கோ கல்விமுறை மூலம் தான். அவர் முன்வைத்த வன்முறை இல்லா வகுப்பறை குறித்த நான்கு பிரதான விதிகள்:*

1. கல்வியின் சக்கரவர்த்தி குழந்தையே. குழந்தை எந்த அளவிற்கு வகுப்பறையில் மதிக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு கற்றல் சாத்தியமாகிறது.

2. ஒழுங்கு நடத்தை என்பது குழந்தையின் சுய மேலாண்மை *(Self - Management)* என்பதன் மூலம் கட்டமைக்கப்பட வேண்டும். தன்னை மதிக்கும் குழந்தையே அதை அடைய முடியும்.

3. எது தவறு என்பதன் மீதே கவனம் செலுத்தும் "தண்டனை" கல்வியை விட, சரியான நடத்தையை தேடிப் பாராட்டி உயர்த்தும் முன் உதாரண கல்வியே சிறப்பானது.

4. உடன் இணைந்து விளையாடு.... ஒரு போதும் விளையாட்டை வழி நடத்தாதே *(Don't Guide Play)*


ஒரு கால்பந்து குழுவின் ஒரு விளையாட்டு வீரரை அவமதித்தாலும், பாரபட்சம் காட்டினாலும், அந்த அணி முழுவதும் தோற்பது நிச்சயம். அதே குழு தன்னை மதித்து போற்றி ஓர் அணியாக வெற்றி ஊக்கம் பெறும்போது.... அணியில் ஒவ்வொருவரும் அணித் தலைவர் போலவே பொறுப்புடன் செயல்படுவதை நாம் காணலாம். பல வெற்றி பெற்ற விளையாட்டுக் குழுக்களுக்கு பின்னே இருக்கும் உண்மை இது. வகுப்பறையும் அதே போலத்தான். அங்கே கற்றல் செயல்பாடு வெற்றி பெற குழந்தைகள் தங்களை குழுவாகவும் குழு தலைமையாகவும் பொறுப்புடன் உணரும்போது அங்கே நடத்தைப் பிறழ்வு, ஒழுங்கீனசெயல் இவற்றுக்கு இடம் இருக்குமா என்ன? வன்முறையில்லா வகுப்பறை குறித்த மகெரென்கோவின் இறுதி விதி வினோதமானது. கற்றல் செயல்பாட்டில் ஆசிரியரின் இடம் என்ன....? "வழி நடத்தாதே...." என அவர் ஏன் கூற வேண்டும். ஆனால், அது எவ்வளவு கச்சிதமாக மேலே இருக்கும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் கூற்றோடு நம்மை இணைக்கிறது பார்த்தீர்களா? மாணவர் தன்னை ஒரு ஆசிரியராகவும், ஆசிரியர் தன்னையும் மாணவர்களின் ஒருவராகவும் கருதும் ஒரு வகுப்பறை சாத்தியமா? விடை தேடுவோம்.

கட்டுரையாளர் :
வன்முறையில்லா வகுப்பறை, யாருடைய வகுப்பறை முதலான நூல்களின் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அன்பு ஜவஹர்ஷா



# ஆசிரியத்தில் உங்கள் பிரச்சினைக்குத் தீர்வுகள்

ஆசிரியையான எனக்கு திருமணம் தொடர்பாக 6 நாட்கள் மட்டுமே லீவு பெறலாம் என அதிபர் கூறுகின்றார். வேறு மாகாணமொன்றில் கடமையாற்றுவதால் எனக்கு அதிக லீவு தேவைப்படுகின்றது. என்ன செய்யலாம்?

வாழ்வில் முக்கியமான விடயமாக திருமணம் இருந்தாலும் கூட லீவு என்பது ஊழியர்களுக்கு அரசாங்க லீவு என்பது உரிமையல்ல சலுகை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கடமையாற்றும் நிறுவனத் தலைவரின் அனுமதியுடனேயே இதை அனுபவிக்க முடியும். திருமணம் என்ற விடயத்திற்காக 6 வேலையாட்கள் அமய லீவையே பெற முடியும். வெள்ளி வரை ஆறு வேலை நாட்கள் எடுக்கலாம். அதற்கு அடுத்து வரும் திங்கள் கிழமைக்கு சமூகமளிக்கடுடியும். திங்கள் தொடக்கம் மணமகள் சுகவீனமுற்று இருப்பதாகக் காட்டி சுகவின லீவைக் கோர முடியும். இரண்டு நாட்களுக்கு மேல்பட்டால் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்.

லீவு எதுவும் இல்லாவிட்டால் முன்னைய இரண்டு வருட லீவை திருமணம் என்ற காரணத்திற்காகப் பெற முடியும். அவையும் எடுக்காமல் சேமிக்கப்பட்டு இருக்க வேண்டும். திருமணம் மகிழ்ச்சிகரமான விடயம்தான். ஆனால் அதிபரோ அல்லது எந்த திணைக்களத் தலைவரோ தாபனக் கோவை விதிகளை மீறி எந்த லீவையும் அனுமதிக்க முடியாது.

இலங்கை ஆசிரியர் சேவையின் வருடாந்த சம்பள உயர்ச்சி முழுமையாகக் கிடைக்க வழி இல்லையா?

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவையின் 2-I தர ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்ச்சி தொடர்பான கேள்விக்கு ஆசிரியம் 67-68 இதழில் பதில் அளித்து இருந்தேன். புதிய சம்பளத் திட்டத்தைப் போல் இதுவும் அதிகரிப்பின் 5ல் 1 பங்கே வருடா வருடம் அதிகரித்து 2020ல் முழுமையான அதிகரிப்பு கிடைக்கும் பின்வரும் அட்டவணை சகலருக்கும் பயன் அளிக்கக் கூடும். (அட்டவணை 1 பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை -1

| தரம் | 2015 | 2020 | அதிகரிப்பு | ஒருபங்கு | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3-II | 145/- | 300/- | 155/- | 31/- | 176/- | 207/- | 238/- | 269/- | 300/- |
| 3-I | 180/- | 380/- | 200/- | 40/- | 220/- | 260/- | 300/- | 340/- | 380/- |
| 3-I | 215/- | 445/- | 230/- | 46/- | 261/- | 307/- | 353/- | 399/- | 445/- |
| 2-II | 240/- | 495/- | 255/- | 51/- | 291/- | 342/- | 393/- | 444/- | 495/- |
| 2-II | 330/- | 680/- | 350/- | 70/- | 400/- | 470/- | 540/- | 610/- | 680/- |
| 2-I | 400/- | 825/- | 425/- | 85/- | 485/- | 570/- | 655/- | 740/- | 825/- |
| I | 645/- | 1335/- | 690/- | 138/- | 783/- | 921/- | 1059/- | 1197/- | 1335/- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த சம்பள உயர்ச்சி குறிப்பிட்ட வருடத்தின் காலமா எனக்கு பார்க்க வேண்டும். அல்லது ஒரு வருடமா?

இது நியாயமான கேள்விதான். வருடாந்த சம்பள ஏற்றம் என்பது உழைத்த ஒரு வருட கால உழைப்புக்கு உரியதாகும். 2015.07.01 அன்று நியமனம் பெற்ற ஆசிரியர் 2016.06.30 அன்றே ஒரு வருட காலத்தை பூர்த்தி செய்கின்றார். 2016.07.01 முதலே அவருக்குரிய வருடாந்த சம்பள ஏற்றம் வழங்கப்படும். 2016.01.01 அன்று ஒரு ஆசிரியர் பதவியேற்று இருந்தால் 2016.12.31 வரையிலான காலமே கவனத்தில் கொள்ளப்பட்டு 2017.01.01 முதல் வருடாந்த சம்பள ஏற்றம் வழங்கப்படும். உரிய படிவம் அதிபர் ஊடாக சிபார்சு செய்யப்பட்டு கோட்ட, வலயக் கல்விப் பணிப்பாளர்களால் அனுமதிக்கப்பட்டு இருந்தால் மட்டுமே கணக்காளரால் இதை வழங்க முடியும்.

03/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப்படி இந்த மாதமே எனக்குச் சம்பளம் செய்துள்ளார்கள். ஆனால் அதிகரிப்பு எதுவும் இல்லாமல் 4000/- ரூபாவை குறைத்துள்ளார்கள். ஏன் இப்படி?

புதிய சம்பளத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் 10,000/- இடைக்கால படியையும் 20% விசேட படியையும் 5 கட்டங்களாக அடிப்படை சம்பளத்துடன் சேர்ப்பதாகும். 2016, 2017, 2018 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் பெரிதாக அதிகரிப்பு எதுவும் இருக்காது. 2015இல் பெற்ற அடிப்படை சம்பளத்துடன் 2016ஆம் ஆண்டு தொடக்கம் மேல் சொல்லப்பட்ட கொடுப்பனவுகள் வந்தால் பிரிக்கப்பட்டு அடிப்படைச் சம்பளத்துடன் சேர்வதால் விதவைகள் அநாதைகள் ஒய்வூதிய நிதியத்துக்கு கழிக்கப்படும் கழிவுகள் குறைந்த பட்சம் 150/-வில் இருந்து அதிகரிக்கும். 2020 வரும். இந்த குறைந்த பட்ச தொகை 750/- வரை செல்லும். சம்பளத்தைப் பொறுத்து இது அதிகரிக்கும். உங்களுக்கு இந்த அதிகரிப்பு 200/- ஆக இருந்தால் 18 மாதத்துக்கு 4000/- கழித்து இருப்பார்கள். இந்த மாதத்தில் இருந்து இந்த அதிகரிப்பாக சம்பத்தில் 400/- குறையும். 2018ல் 600/- ஆக அதிகரிக்கும். 2019இல் சம்பள அதிகரிப்பு கையில் கிடைக்கத் தொடங்குவதால் இது தெரியாது.

1977ம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்ற நான் 1993.06.01 முதல் அதிபராகக் கடமையாற்றி வருகின்றேன். நானும் இரண்டாம் மொழி சிங்களம் சித்தியடைய வேண்டுமா?

2007.06.01க்கு முன்னர் ஆசிரியராக நியமனம் பெற்று பின்னர் அதிபர் நியமனம் பெற்றவர்களுக்கே இது கட்டாயமாகும். கடந்த மாதம் நடைபெற்ற அதிபர் சேவை பதவி உயர்வு நேர்முகப் பரீட்சையில் 2009ஆம் ஆண்டு அதிபர் நியமனம் பெற்றவர்களிடமே இது கட்டாயமாக வினவப்பட்டது. 2018.12.31 வரை சலுகைக் காலம் இருப்பதால் அதற்குள் சித்திபெற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. நீங்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு சென்று இருந்தால் உங்களை கட்டாயப்படுத்த முடியாது. உங்களது அதிபர் நியமனம் 1993.06.01 என்பதால்.

இலங்கை கல்வி நிருவாக சேவை வகுப்பு - III மட்டுப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சென்று வந்து 3 மாதங்களாகிவிட்டன. நேர்முகப் பரீட்சை ஒன்று நடைபெற்று மூன்று மாதங்கள் கழிந்துவிட்டால் அது இரத்தாகி விடும். மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்று சொல்லப்படுவது உண்மையா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தவறான கருத்து 515 பேர்களை மேல் சொல்லப்பட்ட அடிப்படையில் நியமிப்பதற்காக போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு, அதில் தகைமை பெற்றவர்களுக்கு ஆளணிக்கேற்ப நேர்முகப் பரீட்சை முடிந்து கல்வியமைச்சு பரீட்சைத் திணைக்களம் அரச சேவை ஆணைக்குழு என இறுதிப் புள்ளிகள் சென்றடைந்துள்ளன. நியமனப் பட்டியலை வெளியிடும் ஏற்பாடுகள் நடந்துகொண்டு இருக்கின்றன. 1995ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சைக்கு 1999ஆம் ஆண்டே நியமனம் வழங்கப்பட்டது. அதுபோல 2005 ஆம் ஆண்டு பரீட்சைக்கு 2007 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஆகவே தேர்வு பணிகள் முடிந்தவுடன் விரைவில் நியமனம் கிடைக்கும்.

**5 வருடம் ஒப்பந்தத்தின்படி வேறு மாவட்டத்தில் நியமனம் பெற்ற எனக்கு 7 வருடமாகியும் இடமாற்றம் கிடைக்கவில்லை?**

தேசிய இடமாற்றக் கொள்கை ஊடாக இந்த விடயம் சங்கிலி தொடர் போன்றது. பாடசாலையில் விடுவிப்பு, வலயத்தில் விடுவிப்பு மாகாணத்தில் விடுவிப்பு, இடமாற்றம் விரும்பும் மாகாண வெற்றிடம் என பல பிரச்சினைகள் இங்கு உள்ளன. இலங்கையில் அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி 70,000 வெற்றிடங்கள் உள்ளன. அதே நேரத்தில் 40,000 மேலதிக ஆசிரியர்கள் உள்ளார்கள். சரியாக சமப்படுத்தப்படாமையே இதற்குக் காரணமாகும். தேசிய நியமனம் இடமாற்றக் கொள்கையொன்று சரியாக அமுல் நடத்தப்பட்டால் மட்டுமே உங்களுக்கு நியாயமும் தீர்வும் கிடைக்கும்.

உங்கள் சம்பள மாற்றக் கடிதத்தின் இறுதிப்பகுதியில் கல்வித் திணைக்களம் தனது பாதுகாப்புக்கு ஒரு வாசகத்தைக் குறிப்பிட்டு



**கடந்த ஆண்டு புதிய ஆசிரியர் சேவை சீரமைப்பின்படி எனது உள்ளீர்ப்பு நடைபெற்று சம்பளமாற்றம் செய்யப்பட்டு 1,73,000/- நிலுவையும் வழங்கப்பட்டது. கடந்த மாதம் முதல் மேலதிகமாக நிலுவை வழங்கப்பட்டது என்று காரணம் கூறி மாதாந்தம் 3000/- குறைக்கின்றார்கள். இப்படி செய்ய இயலுமா?**

உள்ளது. மேலதிகமாக வழங்கப்பட்டால் மீள அறவிடப்படும் என்று ஆகையால் எப்போது சம்பள நிலுவை கிடைத்தாலும் அது சரியானது தானா என்று கணக்கு பார்த்துக் கொள்ள வேண்டும். பல சந்தர்ப்பங்களில் குறையவும் கூடும். அது பெற்றுக்கொள்ள முயற்சிப்பதோடு குறைய வழங்கப்பட்டால் அதை உடனடியாக மீளச் செலுத்தினால் இந்த சிக்கல் உண்டாகாது. பெரும்பாலானவர்கள் தருவதை எடுத்துக் கொண்டு இருப்பதால் தான் இப்படியாக நடக்கின்றது.

கட்டுரையாளர் :
ஓய்வுபெயற்ற அதிபர்
ஆசிரியத்துவம், கல்வியியல் சார்ந்து பல்வேறு கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* யாழினி



# அறிவியலைக் கொண்டாட வைக்கும் ஆய்வகம்

ஐஸ்கிரீம் குச்சிகள், பாட்டில் மூடிகள், பசைத் துப்பாக்கி, ரப்பர் பேண்ட்களை வைத்து ஒரு காரை உருவாக்கி, அது ஓடும்போது மாணவர்கள் அவ்வளவு உற்சாகத்துடன் அதைக் கொண்டாடுகிறார்கள். சென்னையைச் சேர்ந்த பால வித்யா மந்திர் பள்ளியின் அறிவியல் ஆய்வகம் "இன்னோ லேப்"-ல்(*Inno Lab*) கண்ட காட்சி இது. அங்கு மாணவர்கள் பெரும் உற்சாகத்தோடும் ஆர்வத்தோடும் கொண்டாட்ட நிகழ்வுகளைப் போல அறிவியல் பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர்.

"கிட்ஸ்ஸ்டார்ட் - இன்டகிரேட்டட் சயின்ஸ் /பன்டாட்டம் லேப்" (*Kidsstart - Intergrated Science Fundattam Lab*) உதவியோடு அவர்களுடைய பள்ளியில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் அறிவியல் ஆய்வகமே அந்த மாணவர்களின் உற்சாகத்துக்குக் காரணம். 6,7,8-ம் வகுப்பு மாணவர்களை மனதில்வைத்து இந்தப் பள்ளியில் பிரத்யேகமான அறிவியல் பரிசோதனைகளை வடிவமைத்துக்கொடுத்திருக்கிறது "கிட்ஸ்ஸ்டார்ட்".

**ஆர்வத்தைத் தூண்டும் பரிசோதனைகளை**

மாணவர்களிடம் ஆறாம் வகுப்பிலிருந்தே அறிவியல் மீதான ஆர்வத்தை விதைக்கும் நோக்கத்துடன் இந்த ஆய்வகம் செயல்படுகிறது. ரப்பர் பேண்ட்டில் ஓடும் கார்கள், பலூன்களின் உதவியோடு கரிம வாயுவின் இருப்பை நிரூபித்தல், காந்தங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பாடுகள், மாடி ஸ்விட்ச்களின் இயக்கம், பூச்சி ரோபோட் என இந்த ஆய்வகத்தில் மாண வர்கள் செய்யும் பரிசோதனைகள் அனைத்தும் அவர்களுக்கு அடிப்படை அறிவியலை வேடிக் கையாகக் கற்றுக்கொடுக்கின்றன.

மாணவர்களைத் தேர்வுகளில் மதிப் பெண்கள் வாங்குவதற்கு மட்டும் தயார் படுத்தாமல், அவர்களுக்கு ஆரம்பத்திலேயே வலிமையான அறிவியல் அடித்தளத்தை அமைத்துக்கொடுக்கும்படி வடிவமைக்கப் பட்டிருக்கிறது இந்த ஆய்வகம். பாடத்திட்டத்தில் வரும் கடத்திகள், கடத்தாப் பொருள், பெர்னொலி தத்துவம், மையவிலக்கு இயக்கம், வட்ட இயக்கம் போன்றவற்றையும் இந்த ஆய்வகப் பரிசோதனைகளில் இணைக்கப் பட்டிருக்கின்றன. இயற்பியல், வேதியியல் மட்டுமல்லாமல் கணிதம் சார்ந்த பரிசோத னைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

"ஒரு வாரத்தில் 80 நிமிடங்களை இந்த ஆய்வகத்தில் மாணவர்கள் செலவிடுகின்றனர். ஆசிரியர்களின் பெரிய தலையீடு எதுவும் இல்லாமல், மாணவர்களே குழுக்களாக இந்தப் பரிசோதனைசெய்கின்றனர். அத்துடன், அவர் களுடைய ஆய்வகச் செயல்பாடுகளும் மதிப்பிடப் படுவதில்லை. அதனால் அவர்கள் சுதந்திரமாக எந்த மன அழுத்தத்துக்கும் ஆட்படாமல் முழு ஈடுபாட்டுடன் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர்.

ஒவ்வொரு ஆய்வக வகுப்பு முடிந்தவுடன், மாணவர்கள் அன்று செய்த பரிசோதனைகளைப் பற்றிய கருத்துகளை உடனுக்குடன் எங்களுக்கு எழுதித் தருகிறார்கள். அவர்கள் இந்த அறிவியல் பரிசோதனைகளை எந்த அளவுக்கு விரும்புகி றார்கள் என்பதை அந்தக் கருத்துகளைப் படிக்கும்போது தெரிந்துகொள்ளமுடிகிறது என்கிறார் பாலவித்யா மந்திர் பள்ளியின் துணை முதல்வர் உஷா.

**பேராசிரியர்களின் ஆலோசனைகள்**

அறிவியலை விளையாட்டாகக் கற்றுக் கொடுக்கும் இது போன்ற ஆய்வகங்களைப் பேராசிரியர்களின் ஆலோசனைகளோடு வடிவமைத்துத் தருகிறது "கிட்ஸ்ஸ்டார்ட்". இந்தப் பள்ளியின் அறிவியல் ஆய்வகம், ஐ.ஐ.டி. திருப்பதியின் பதிவாளரும் இயற்பியல் துறை பேராசிரியருமான முனைவர் டி.எஸ். நடராஜனின் ஆலோசனைகளோடு வடிவமைக்கப்பட்டிருக் கிறது. "மாணவர்கள் பாடப் புத்தகங்களைப் படித்து மட்டுமே அறிவியலைக் கற்றுக்கொள்ள முடியாது.


சைக்கிள் ஓட்டுவதையும், நீச்சல் அடிப்பதையும் புத்தகத்தில் படித்து எப்படிக் கற்றுக்கொள்ளமுடியாதோ, அப்படித்தான் அறிவியலையும் படித்து மட்டும் புரிந்துகொள்ள முடியாது. அறிவியலை வகுப்பறையில் பாடம் எடுப்பதால் மட்டும் மாணவர்களுக்குப் புரியவைக்க முடியாது. இந்த மாதிரி, மாணவர்களை முழுமையாக அறிவியல் ஆய்வகங்களில் ஈடுபடுத்தும்போதுதான் அவர்களுடைய அறிவியல் ஆர்வம் அதிகரிக்கும்.

அதுவும், ஆறாம் வகுப்பிலேயே ஆய்வகங்களில் அறிவியல் பரிசோதனைகளை மேற்கொள்ளத் தொடங்கும் இந்த மாணவர்கள் 9-ம் வகுப்புக்குச் செல்லும்போது சர்வதேச அறிவியல் போட்டிகளில் கலந்துகொள்ளும் திறனைப் பெற்றுவிடுவார்கள். அறிவியலை இப்படி மாணவர்களுக்குப் பிடிக்கும்படி விளையாட்டாகக் கற்றுக்கொடுக்கும்போது அது மாணவர்களிடம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். அரசுப் பள்ளி மாணவர்களிடம் இந்த அறிவியல் ஆய்வகங்களைக் கொண்டு சேர்க்கும்போது, அது மேம்பட்ட ஓர் அறிவியல் சமூகத்தை உருவாக்குவதற்கு வழிவகுக்கும்" என்று சொல்கிறார் பேராசிரியர் டி.எஸ். நடராஜன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மு.இளங்கோவன்



# யாழ்நூல் இயற்றியபோது

இலங்கை தமிழ்ச் சான்றோர்களுள் விபுலாநந்தர் குறிப்பிடத்தக்கவர். அவர் இயற்றிய யாழ்நூல் தமிழிசையின் ஆதார நூல்களில் ஒன்று. அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியபோது க.வெள்ளைவாரணன் அங்கு மாணவராகப் பயின்றவர். பின்னாளில் யாழ்நூலினை விபுலாநந்தர் எழுதத் தொடங்கியபோது, அதன் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்திருக்கிறார். அவருக்குப் பல மடல்களை, பல ஊர்களிலிலிருந்து விபுலாநந்தர் எழுதியுள்ளார்.

பேலூரிலிருந்து விபுலாநந்தர் வெள்ளைவாரணனுக்கு 24.11.42 நாளிட்டு எழுதிய மடலில் யாழ்நூல் உருவாக்கம் குறித்த பல விவரங்கள் உள்ளன. சங்கீத ரத்தினாகரம் என்ற நூலைப் படிக்க நினைத்தும் அப்போது நடைபெற்ற உலகப் போர் காரணமாக நூல்கள் பாதுகாப்புக்காக வேறிடம் சென்றுவிட்டதை அடிகளார் குறிப்பிட்டுள்ளார். உலகப் போரின்போது நூலகங்கள், அச்சுக்கூடங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளமையை இம்மடல் தெரிவிக்கின்றது. யாழ்நூல் படி எடுத்தல், கருவி நூல்களைத் திரட்டல், அச்சிடுதல், போன்ற பணிகளில் அடிகளார் தொடர்ந்து ஈடுபட்டுள்ளமையைப் பல மடல்கள் தெரிவிக்கின்றன.

### யாழ்நூல் உருவாக்கப் பணி

யாழ்நூலை எழுதி முடிக்க விபுலாநந்தர் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்தித்துள்ளார். மாயாவதி ஆசிரமப் பணியிலிருந்து விடுபடல் (1941),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புப் பல்கலைக்கழகப் பணியேற்றல் (1943 - 47), கடும் காய்ச்சலில் வீழ்ந்தமை, முடக்குவாதம் வந்தமை என்று பணியும், பிணியும் விபுலாநந்த அடிகளாரை அக்காலத்தில் வாட்டியுள்ளன. புதுக்கோட்டை யில் வாழ்ந்த சிதம்பரம் செட்டியார் விபுலாநந்தருக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்துகொடுத்து ஆதரித்தார். தம் "இராம நிலைய" வளமனையின் முன்பகுதியை விபுலாநந்தர் ஆராய்ச்சிக்கு ஒதுக்கித் தந்தும், பல்வேறு பணியாளர்களை அமர்த்தியும், இசைநுட்ப வல்லுநர்களைப் பணிக்கு அமர்த்தியும் யாழ்நூல் உருவாக உதவியுள்ளார்.

விபுலாநந்தர் அமைதியாகத் தங்கியிருந்து ஆராய்ச்சி செய்ய இலங்கையில் றொசல்லா ஊரில் இருந்த தம் வளமனையை வழங்கியும் சிதம்பரம் செட்டியார் யாழ்நூல் ஆராய்ச்சிக்கு உதவியுள் ளார். சிதம்பரம் செட்டியாருக்குச் சுவாமிகள் வரைந்த மடலில் யாழ்நூலை அச்சிடுவதற்குரிய திட்டம் தரப்பட்டுள்ளது.

றொசல்லா ஊரின் உட்சோக் எஸ்டேட்டிலிருந்து 9.5.45-ல் எழுதிய மடலில், "பிரிய நண்பர் திரு. பெ. ராம. ராம. சித" அவர்களுக்கு ஆண்டவன் அருளை முன்னிட்டு எழுதுவது.

பேரன்புள்ள திரு. "அ. க. அவர்கள் கடிதத்தையும் படித்தேன். அக்கடிதத்தில் ஒரு குறிப்பு எழுதி, இதனுள் வைத்திருக்கிறேன். அவர்களுக்கு அனுப்பிவிடலாம். அச்சுச் சட்டத்தின்படியும், நானூறு பக்கம் புத்தகத்தை ஓராண்டில் வெளியிட்டால் அதிகாரிகள் வினாவுவதற்கு இடமுண்டு.

1944-ல் அச்சாகி முடிந்த முதல் ஐந்து இயல்களை(ப்) பாயிரவியல், யாழுறுப்பியல், இசை நரம்பியல், பாலை திரிபியல், பண்ணியல் களை இப்பொழுது வெளியிடலாம். படங்களை ஈற்றிற் சேர்ப்பது இப்பொழுது வெளிவரும் ஆங்கில ஆராய்ச்சி நூல்களின் மரபு பற்றி யாமும் ஈற்றிற் சேர்த்துக்கொள்ளுவோம். உள்ளுறையும் நூல் முற்றிலும் அச்சான பிறகு அச்சிடுதற்குரியது. இப்பொழுது நாம் அச்சிடவேண்டியது முகப்புத்தாள் மாத்திரமே (Title Page). இது திரு. அ. க. அவர்களுக்கு முன்னமே எழுதியிருக்கிறேன். வெளிக் கவருக்கு கையினால் செய்த தாள் தடிப்பானது. மதுரையிலும், விருதுநகரிலும் கிடைக்கும். வெண்சிவப்பு நிறத்தில் உபயோகிக்கலாம். முகப்பு(த்) தாளிலுள்ள விஷயத்தைச் சுருக்கி அச்சிடலாம்" என்று யாழ்நூல் அச்சிடுவதற்குரிய அமைப்பை இந்த மடலில் அடிகளார் எழுதியுள்ளார். தட்டச்சிட்டு வந்துள்ள இந்த மடலில் குறிப்பிட்டவாறு யாழ்நூலின் முதல் பதிப்பு வெளிவந்துள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.


இன்னும் வெளிவராத விபுலாநந்தரின் பல மடல்களில் அவர்தம் விருப்பங்கள் பல தெரியவருகின்றன. அவரின் நாட்கடமைகள், பயணத் திட்டங்கள், உறவினர்கள், நண்பர்கள், அவர் ஆற்றிய பணிகள் பதிவாகியுள்ளன. அக்காலத்தில் அமைந்திருந்த சமூக அமைப்பு, கல்விமுறை, தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சித்திறம் யாவும் வெளிப்படுகின்றன.


அக்காலத்தில் நடைபெற்ற இலக்கிய நிகழ்வுகள், சமூகத்தில் உயர்நிலையில் இருந்த வர்கள் ஆற்றிய பணிகள் யாவும் உலக்குக்குத் தெரியவருகின்றன. இலங்கையிலும், இந்தியாவின் பல பகுதிகளிலும் சிதறிக் கிடக்கும் விபுலாநந்தரின் அரிய கையெழுத்துப் படிகளை முழுமையும் தேடிப் பதிப்பிக்க வேண்டியது தமிழ் ஆராய்ச்சி யாளர்களின் தலைக்கடனாகும்.

கட்டுரையாளர் :
புதுச்சேரி அரசின் காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மையத்தின் தமிழ்த்துறை துணைப் பேராசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நன்றி : க வசிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு




விலை **500.00**




விலை **340.00**

## CHEMAMADU BOOK CENTRE

**U.G.50, People's Park, Colombo -11**
**Tel: 011-2472362, Fax:011-2448624**
**E=Mail:chemamadu@yahoo.com**
**Website:www.chemamadu.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

All Types of Stationery

# CHEMAMADU BOOK CENTRE

IMPORTERS OFFICE/ SCHOOL STATIONARY





UG.50 PEOPLE'S PARK, COLOMBO -11
TEL: 011-2472362, 2321905, FAX:011-2448624
E-MAIL:chemamadu@yahoo.com
WEB:chemamadu.com
MOB:077-7279983, 077-3147442, 077-8323561

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org